பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று

வருட சந்தா முன் பணம் ... ரு 3—0
6 மாத சந்தா ,, ... ரு 1—12
வெளிநாட்டிற்கு ,, ... ரு 4—0

[வாரப்பதிப்பு]
ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரு 2.
☞ தனி விகிதமும் உண்டு.

மாலை 3 | ஈரோடு, பிரபவ ஞு வைகாசி-மீ 16உ (29—5—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 5.

மின்சார ரசம்.

☞ மின்சாரரசம்.

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகப்பிரசித்தி பெற்றுள்ளது. எந்த வியாதிக்கும் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக்கணக்கில் குணம் பெறலாம். பத்தியமில்லை. அனுபானமில்லை. பாலியர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும், எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்மந்தமான சரக்குகள் இதில் இல்லை.

புட்டி 1-க்கு ரூ. 2.
தபால் சார்ஜ் வேறு.

☞ மின்சாரரசம்.

ஒரு புட்டி கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியமே இராது. மனிதர்களுக்கு வரும் ஆபத்தை யார் அறிவார்? எந்தசமயம் எப்படி இருக்குமோ? ஒருவேளை ஒரு துளி மின்சாரரசமே ஒருவரை மரண அபாயத்திலிருந்து விடுவித்து விடலாம். அப்படி அநேகர் உயிர் தப்பியுமிருக்கின்றனர். ஆகவே நோயாளிகளுக்கு இது ஓர் உயிர்த் தோழன். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையா ஆபத்து நேசன். இன்றைக்கே எழுதுங்கள்.

கைகண்ட மருந்து. கேட்லாக் இனாம்.

விலாசம்:— மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.) தந்திவிலாசம்:—"Rasamco"

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள்:- T. N. சொக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ் இங்கிலீஷ் மருந்து ஷாப் வியாபாரம், வடக்கு சித்திரை வீதி, மதுரை.

மலாய் நாடுகளுக்கு சோல் ஏஜண்டுகள்:— ஆர். இ. முகம்மது காசீம் & கம்பெனி, கிள்ளாங், பினங், சிங்கப்பூர்.

Best copy available.

தர்மம்.

(திருமிகு ஸ்ரீதரஸ்வாமிகள் எழுதுவது)

சாத்திரங்களில் கூறும் தர்மார்த்த, காம மோக்ஷங்களெனும் புருஷார்த்தங்களை அடைய முறையே பக்தி, கர்மம், யோகம் ஞானம் என்ற நான்கு சாதனங்களை பெரியோர்கள் நிச்சயித்துள்ளார்கள். அதில் பிரதம புருஷார்த்தமாகிய அறத்தின் உண்மை இலக்கியத்தை நாம் ஒவ்வொருவரும் அறிந்து அவ்வழி நடக்க முயலவேண்டிய தவசியமெனக் கருதி இச்சிறு கட்டுரையை எழுதலாயினோம்.

தர்மமென்பதன் கருத்து:—ஸைவாத்ம சுதந்தரீ க்ருதாத் தாதி இதி தர்ம" என்ற சுருதியின் ரீதியாய் ஆத்மாவை சுதந்திரமுடையதாகவும் சுயமரியாதையுடையதாகவும் செய்வதுதான் தர்மமென்று சொல்லப்படுகிறது. தர்மத்தின் தத்துவம் இவ்வாறிருக்க நம்மில் பெரும்பாலோர் தர்மத்தின் யதார்த்தத் தத்துவத்தையறியாமல் கோவில்களை சிருஷ்டிப்பதற்கும், காசி, ராமேஸ்வரம் முதலான தீர்த்தயாத்திரைகளுக்கும் பார்ப்பனர்களுக்கு அன்ன சத்திரம் கட்டுவதற்கும் அதற்காக மூலதனம் சேகரிப்பதற்கும் பார்ப்பனர்களுக்கு மட்டும் அன்னதானம், வத்திரதானம், பூதானம், கோதானம், சுவர்ணதானம், குடைதானம், செருப்புதானம், சொம்புதானம், ஆயிரம் பார்ப்பனர்களுக்கன்னமளித்தல், முதலானதும் இதை நிகர்த்ததுமான இன்னும் அநேக தான தருமங்களையும் செய்து வருகின்றார்கள். இவ்வாறாக நிகழ்த்திவரும் தர்மங்களுக்காகச் சிலவாகும் தொகையின கணக்கோ கோடிக்கணக்காயிருக்குமேயல்லாது கொஞ்சநஞ்சமல்ல. இதனால் தேசத்திற்கும் சமூகத்திற்கும என்ன பிரயோஜனமிருக்கின்றதென்று பார்த்தால் பிராமணர்கள் என்று சொல்லிக்கொள்ளும் ஒரு கூட்டத்தார்களுக்குமட்டும் பெரும் பிரயோஜனமுடையதாயிருப்பதல்லாமல் மற்று யாருக்கும் சற்றும் பயன் தருவதில்லை என்று சொல்வது மிகையாகாது.

தர்ம நூல்களின் பெயரால் நடந்துவரும் இந்த ஆர்ப்பாட்டங்களால் நம் தேசமும் சமூகமும் சுயமதிப்பை இழந்து அடிமைத்தனத்திலமிழ்ந்து வறுமைப்பிணி தலைவிரித்தாடும் அலங்கோலக் காக்ஷிக்கிலக்காயிருக்கின்றதேயன்றி வேறென்ன? ஆலயங்கள் தீர்த்தயாத்திரை, அன்ன சத்திரங்கள் முதலான அனர்த்த கருமங்களுக்காகச் செய்யும் தனத்தை பசி நோயால் மெலிந்து அன்னவஸ்திரங்களன்றி நலிந்து பரதவிக்கும் ஏழைகளின் கஷ்டத்தை நிவர்த்தி செய்வதில் இஷ்டமாய் உபயோகப்படுத்துவோமாயின் அது நிஷ்டையுடன் கூடிய பேரறிஞர்களுக்கும், கடவுளுக்கும், இஷ்டமென்று தோன்றும் நினைப்பின்றி நல்வழியென்று நவில ஹேதுவிருக்கின்றதன்றோ! பிறப்பில் உயர்வு தாழ்வின்றி பிறந்த மனித வர்க்கத்தில் பற்பல ஜாதிவேற்றுமையைக் கற்பித்து ஒற்றுமையைக் குலைத்து நயவஞ்சகமாக நூல்களை இயற்றி நம்மை நாசமடையச் செய்ததுமன்றி பார்ப்பனனுக்கு அன்னசத்திரம் இயற்றினால் மோக்ஷம், ஆ! தானம் செய்வதும் தர்ப்பைப் புல்லுக்கு சுங்கம் கொடுப்பதும், சஹஸ்திர போஜனம் செய்துவைப்பதும் நம் குற்றங்களை இறைவனிடம் இறைஞ்சி நன்னெறியில் வைக்க வக்காலத்து பீஸ் கட்டுவதிலும் பார்ப்பனக் கொடுமைக்குக் கீழ்ப்படிந் தடிமைப்படுவதிலும், அவன் காலில் விழுந்து கலிதீர வேண்டுமென்பதிலும் தான் மோக்ஷமென்பது என்ன அநியாயம்! இன்னும் அற்பத்தனமான பற்பல புரட்டுக் கதைகளை புகட்டி ஆபாசமான கட்டுகளை கட்டி வைத்துள்ள மூட்டைகளை வீட்டி முடுக்க இன்றைக்கே எழுமின். இல்லேல் நம் சமூகம் இனியும் இழிவடைந்துவிடும். மூடக் கொள்கைகளை முடுக்க முனிவுபெற்று முன்னணியில் முயலவேண்டும். அநியாய காரியங்களை அடக்க யாரும் ஐயப்படவேண்டுவதின்று.

ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னரே அறிவுடையோரிவ்வாரியரின் அக்கிரமக் கொள்கைகளை நிக்ரகித்துள்ளார்கள். வேத சாத்திரங்களென்ற பெயரால் நாம் வியந்துவிடலாகாது. ஏனெனில் அறநெறியின் உண்மையை யுதறியெறியும் அஞ்ஞானக் கொள்கைகளை நிறப்பி சுயநல சூழ்ச்சியர் வயிறுவளர்க்க மறையின்கண் தம்முறையை நிறையவியற்றிப் புகுத்தினர். அதில் கள்ளுண்ணவும் களவாடவும் விபசரித்துக் கொள்ளவும்கூட அவர்கள் அவகாசம் அளித்தனர். ஆகையால் யுக்தி அனுபவங்கட்கு ஒத்திருக்கும் உயர்ந்த பொருத்தமுள்ள வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளுவதே ஏற்றதாகும். இருடிகளால் இயம்பப்பட்டதென்றும் கடவுளால் கூறப்பட்டதென்றும் உன்னதமான நன் நாமங்களைச் சூட்டியுள்ள அநேக சாத்திரங்கள் நம் கண்ணெதிரில் காணப்படும். அதில் யுக்திச் கொத்தவைகளை ஏற்றுக்கொண்டு மற்றவைகளை முற்றும் நிராகரித்தல் நம்மவர்களின் நற்கடமை, சுயமரியாதைச் சூரியனை மறைக்கவும் அடிமைத்தனமென்னும் இருளை நிறைக்கவும் வேண்டி அத்தகைய நூல்களை இயற்றினரென நாம் உணரவேண்டும். வஸிஷ்ட முனிவர் சொல்வதைக் கேண்மின்

"யுக்தி யுக்தமுபாதேயம் வசனம் பாலகாதபி
அர்யத்ருண மிவத்யாஜ்யம் அப்யுக்தப் பத்ம
ஜென்மனா

இதன் கருத்து:-யுக்தி அனுபவங்கட்கொத்திருக்கும் வார்த்தையை ஒரு குழந்தை மொழிந்தாலும் அதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதற்கு முரணான கூற்றுக்களை பிரமன் எனினும் அதைப் புல்லுபோற் புறக்கணிக்க வேண்டும் என்பதாம் மேலும் சிவஞான தீபிகை.

நானுகபட சாஸ்த்ராணி ப்ரபஞ்சக்கதி
தானிச
த்ருஷ்ட வாவிச்வாஸ பூர்வந்து வித்வான
பிசலத்யஹோ

இதன கருத்து:— பற்பல விதமான புரட்டு ப்ராணங்கள் ப்ரபஞ்சத்தில்புகலப்பட்டிருக்கின்றன. திருட்டு நூல்களைப்பார்த்து குருட்டதனமாக வித்வான்களும் அலைந்திரும் பலஞானர்கள் அன்பர்களே! தீவண்டியின்முதவண்டி குழியிலிறங்கினால், ஏனைய வண்டிகளின் கதி என்ன, அநேக திருட்டு சாத்திரங்களை உலகில் திரட்டி வைத்து மிறட்டி வரும் சூட்சிக்காரர்களின் சுய நலக்கதைகளை நம்பி மாபெரும் வித்வான்களும்மயங்கி விடுகின்றார்களெனின் மற்றையோர்கள் ஏமாற்றமடைவதில் என்ன ஆச்சரியம் இத்தீபிகையின் கூற்று யாரும் போற்றத்தக்க தாம் முற்காலங்களிலிருந்த மன்னர்கள் தருமசத்திரங்களெனக்கூறும் தன்னலமுடையோரின் மூடக்கதைகளை முழுதும் நம்பி லக்ஷக்கணக்கான பொருள்களைப்பட்சமுடன் பார்ப்பனக்கோவில்களுக்கும்; பார்ப்பனச் சத்திரங்களுக்கும் பார்ப்பனக்குருக்களுக்கும், மாட்சியாய் பிக்ஷயிட்டு வந்த சேர்த்துப்போட்டவும் தன் பயனாக தஞ்சாவூர் போன்ற அநேக அரசாங்கங்களும் இருந்த விடம் தெரியாமல் மறைந்து விட்டதைக்காட்டி நம் தலைவர், உயர், திருவாளர் இராமசாமி நாயக்கரவர்கள் நமக்கு நவின்றதை நாம் மறக்கலாகாது.

சுகம், துக்கம், பசி, தூக்கம், முதலிய சம்பவங்கள் சர்வமக்களுக்கும் சமமாய் இருக்க, பாரப்பனன் கடவுளின் கண்களில் பிறந்தவனெனப்புகலும் பழங்கதைகளைப் புகழ்ந்து கூறி நம்மவர்கள் இம்மையிலடைய வேண்டிய உண்மை அறத்தின் தன்மையை இழக்கச் செய்து தன்னலங்கருதி இன்னல் விளைத்துவரும அன்னவரின் சூழ்ச்சியை என்னவென்றுரைப்பது? இத்தகையமோசமான சாத்திரங்களை நேசியா திருத்தல் நம்மவர்களின்நற்கதிக்கு நன்று, நேசிப்பீரேல் நாசமடைவது நிச்சயம் சமத்துவநோக்கமில்லாத தருமங்கள்ஒன்றும் தருமங்களாகா சூத்திரனுக்குப்பசி வந்தால் பார்ப்பனுக்கு அன்னமளிக்கின் அது சூத்திரனுடைய பசியை நீக்கிவிடுமா? நீக்கிவிடுமானால் பார்ப்பனனுக்கு நல்குவது நலம்தான். கண் மூடித்தனமாக நடந்துவருவது கண்டிக்கத்தக்கதே. "தன்னாலே தான் கெட்டால் அண்ணாவி என் செய்வார்" என்ற பழமொழிக்கிணங்க பரந்தநோக்கமும் விரிந்த விசாரணையுமின்றி நம்மை நாமே கொடுத்து விடுகின்றோம். பசியின் வாதனையை ஒரு சிறிதும் அறியாது தின்று கொழுத்திருக்கும், ஒரு கூட்டத்தார்க்கு அறம் செய்வதாலான பயனென்னே! நெய், சிக்கு நாற்றம் வீசிற்று தயிர் புளிப்பு வாடை ஏறிற்று; சமாராதனை சரிவரச்சரிக்கவில்லை. தக்ஷணையைக்குறைத்துவிட்டான், என்று தாட்சிண்யமின்றி நம் பொருளைப்பறித்துக் கொள்ளை கொண்டு போவதுமன்றிபுறம் கூறித்திரியும் இத்தகையினர்களுக்கா; நம்பொருளும் தர்மமும் தத்தமாக வேண்டும்? அந்தோ! பரிதாபம் இது தான் புருடார்த்தத்தின் முற்படியா? குளிக்கப்போய்ச் சேறணிந்து கொள்வது போல் அறத்தைக்கருதி அவதூறுக்குள்ளானோம். இது இறைவனுக்கும் அறிஞர்களுக்கும் சம்மதமாகுமா? புருடார்த்தத்தை அடையப்புகும் நாம் முதற்படியிலேயே இந்த திண்டாட்டப்படுவோமாயின் மற்று படிகளில் என்ன பாடுபட வேண்டுமென்பதை இயம்பவும் வேண்டுமோ? இதைக்கருதி

இதன் தொடர்ச்சி 19-ம் பக்கம் பார்க்க.

அவியல்.

3ம் பாகம்

[கைவல்ய சாமியார் எழுதுவது]

சந்திரன்—புராதன இந்து தேசத்தில் வர்ணாச்ரமங்கள் ஏற்படுத்தி ஸ்மிருதிகளால் தொழில்கள் வரம்புகடவாமல் நிறுத்தப்பட்டன. அவை முதலாவது, ஜனங்களின் பொதுத் தேவைகளாகவும் பிறகு அவரவருக்கு ஜீவனோபாயங்களாகவும் கருதப்பட்டன. ஜாதிக்கொள்கை தடையின்றி வளர்வதால் மனுஷ்ய நாகரீகத்தின் ஆதார நீதி தன்னையறியாமலே மாறுபடுகிறது. ஸமூகத்து மனுஷ்யனுடைய உத்தமலட்சியம் பிறர் நலம். ஆனால் ஜாதித்தொழிலாளித்தனம் உடையதாகையால் அதற்குத்தக்கபடியே அவன் லட்சியம் தன் நலம். இதனாலேயே தனி மனிதன் தனக்குத் தனக்கென்ற அவா உடையவனாகவிருந்தால் பழிக்கப்படுகின்றான். ஒருஜாதி அப்படியிருந்தால் புகழப்படுகிறது. இதனால் ஏக்கத்திற்கிடமான நீதிக்குருட்டுத்தனம் உண்டாகிறது. இது ஜனத்தின் மதத்தை ஜாதியின் மனத்துடன் ஒன்றாகப்போட்டு குழப்புகிறது. இதனாலேதான் உலகத்தில் பெரும்பகுதியை கிருஸ்துவ ஜாதியார் ஆளுவதினாலே கிருஸ்து மதந்தான் உயர்ந்ததென்று சிலர் சொல்லுவதுபோல நம் தேசத்தில் பிராமணமதமே இந்து மதமென்று சொல்லப்படுவதினாலே நாங்களே உயர்ந்தவர்களென்கிறார்கள். உலகத்தில் செல்வமடைந்த ஜாதி ஒவ்வொன்றும் பிறருக்குத் தீங்குசெய்யும் ஸ்வார்த்தச்செயல்களினாலே தான் அதை அடைந்திருக்கின்றது. அதாவது வியாபார வேட்டைகளினாலும் அன்னியதேச உடைமைகளினாலும் அல்லது இரண்டும் சேர்ந்ததாலும் அதுபோல பிராமணன் இந்த தேசத்தில் அறிவாளி என்று சொல்லிக்கொள்ளுவதற்கு மற்ற ஜாதிகளுடைய அறிவைக் குறைத்துவிட அநேக தந்திரமான ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதனால் மற்ற ஜாதியார்களுக்கு எவ்வளவு கொடுமை செய்திருக்கவேண்டுமென்பதை நீயே ஆலோசித்துப் பார்.

வசந்தன்—சந்திரா! நான் கேட்ட கேள்விக்கு உன் பதில் சரியாய்ப் பொருந்தி வியத்தப்படுத்தவில்லை. வர்ணாசிர தர்மம் அவசியமென்கிறார்கள் இதை விட்டுவிட்டதினால் நம் ஜன சமூகம் தாழ்ந்த நிலைமையை அடைந்தது அதை சரிவர நடத்தவே பிராமண சங்கங்கள் வேலைசெய்கிறது. இதைப்பற்றினவரையிலும் விவரப்படுத்திச் சொல்லு?

சந்திரன்—நம் தேசத்தில் வேதம் கோர்வையாக்கப்பட்ட காலத்திலிருந்து நீ கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுவதாயிருந்தால் "குடி அரசில்" இடமில்லை. உனக்கு அநேக விஷயம் சொல்லவேண்டியிருக்கிறது. அதற்கும் காலம் வேண்டும். ஆனதால் உன் கேள்விக்கு ஆங்காங்குள்ள சில குறிப்புகளை மட்டும் சுருக்கமாகச் சொல்லுகிறேன். ஜாதி, தொழில் செவ்வையாய் நடைபெற வற்புறுத்தப்பட்டது. அதை உரிமைகளாக மாற்றி கொடுமைக்கே ஏதுவாயிற்று. வருணாசிரமம் நடக்க முடியாத காரியம் எந்த காலத்திலும் சரியாய் நடந்ததே இல்லை. "ஒழுக்கமில்லாத பிராமணன், பிராமணன் பிராமணனே" "கல்வி யறிவுடைய சூத்திரன், சூத்திரனே." என்பது வருணாசிரமத்திலில்லை. பிராமணன் சூத்திரனாகலாம். சூத்திரன் பிராமணனாகலாம் இதை உத்தேசித்தே பிராமண பிராமணன் பிராமண க்ஷத்திரியன், பிராமணன் வைசியன், பிராமண சூத்திரன், சூத்திர பிராமணன், சூத்திர க்ஷத்திரியன். சூத்திரவைசியன் சூத்திர சூத்திரன் என்று நாலு வருணத்திலும் நாலு வர்ணங்களைச் சொல்லியிருக்கிறது, இந்த ஞாயப் பிரகாரம் பார்த்தால் இப்பொழுதிருக்கும் பிராமணனெல்லாம் பிராமணச் சூத்திரனாகவும், பிராமணச்சண்டாளனாகவுமல்லவோ ஏற்படுகிறது. பின் வருணாசிரம தர்மம் எங்கிருந்து ஏற்படுத்துகிறது. அதிலும் வெள்ளைக்காரன் இராச்சியத்தில் எப்படி முன் சொன்ன வருணாசிரமம் நடைபெறும்? ஜனங்களை இனியும் ஏமாற்றித்தாழ்த்தியே வைத்திருக்கவேண்டுமென்கிற ஏற்பாடே ஒழிய வேறு இதற்கு என்ன அர்த்தம்? சரித்திரத்தில் சூரியோதயமாகிறபோது கிழக்கே ஒளி ஊர்ந்தூர்ந்து வாராது பாய்ந்து வரும். எட்டு திசையை உடனே நிறம்பச்செய்யும். உலகத்து ஜாதியார் "அங்குலத்தின் மேல் அங்குலமாக மேன்மைக்கு நகர்ந்து தான் செல்லவேண்டும்" என்று விதிபோட்டால் எந்த ஜாதிக்கும் மேன்மை நேரிடாது. தகுதி உண்டான பிறகுதான் விரும்பலாமென்று விதி போட்டால் எந்தஜாதிக்கும் விடுதலை உண்டாயிராது. வருணாசிரதர்மம் நல்ல எண்ணத்துடனும் ஜனசமூகம் ஒழுங்காய் அதனதன் பூரண தத்துவத்தின் அனுபோகத்தை அடைய ஏற்படுத்தின வழியாகச் சொல்லப்படுகிறது. வருணாசிரமக்கொடுமை தேசத்தைக்கெடுத்து விட்டதாகவே அநேக மேதாவிகள் ஆதிகாலந்தொட்டே சொல்லியும் வெறுத்தும் வந்திருக்கிறார்கள். சுவாமி விவேகாநந்தர் க்ஷத்ரி மகாராஜாவிற்கு எழுதிய கடிதத்திலுள்ள சிலதை உனக்குச் சொல்லுகிறேன். "நடந்த காலத்தைப் பற்றி எவ்வளவு அதிகமாகக் கவனிக்கிறார்களோ அவ்வளவு கீர்த்திப்பிரதாபமுள்ளதாகும். வருங்காலம் எவனொருவன் கடந்தகால சம்பவங்களை ஜனங்களுக்குப் புகட்டுகிறானோ அவன்தான் அந்த ஜாதியாருக்கு மிகுந்த உபகாரம் செய்தவன். இந்தியாவானது தாழ்ந்த ஸ்திதிக்கு வந்து விட்டதற்குக் காரணம் தன்னலங்கருதி நடந்து வந்த வைதீகக்கொடுமை. முற்காலத்திய இந்தியாவின் மகரிஷிகள் வருங்கால சம்பவங்களை அறிந்தவர்களாயிருந்ததும் உண்மை. அவர்களுடைய விவேகத்தை உலகத்தார் சரியாய் மதிப்பதற்கு அநேக நாள் செல்லுமென்பதும் சரியே அந்த மகரிஷிகளின் சந்ததியார் அவர்களுடைய ஏற்பாட்டை அறிய அசக்தர்களாயிருந்து தன்னலத்திற்கும் அதிகாரத்திற்கும் அகங்காரத்துக்கும் உபயோகப்படுத்திக்கொண்டதினாலேயே தேசம் ஹீனஸ்திதிக்கு வரக்காரணம். வர்ணாசிரம தர்மம் ஏற்பட்டகாலந்தொட்டே முற்காலத்திய இந்தியாவானது பிரஜைகளில் பிர்மக்ஷத்திரியரென்கிற இருவகுப்பினருடைய அதிகார அபேக்ஷையுள்ள ஏற்பாடுகளுக்கு யுத்தரங்கமாயிருந்தது. க்ஷத்திரியர்கள் தங்களுக்குச் சட்டப்படி ஆகாரமென்று எண்ணியிருந்த மகா, ஜனங்களிடத்தில் செய்யும் கொடுமைகளை ஒருகால் புரோகிதர்கள் தவிக்கிறவர்களாகவும் மற்றொரு கால் பிராமணர்கள் ஜனங்களைக்கட்டியாள வேண்டுமென்ற கருத்துடன் அபரிமிதமான மதச்சடங்குகளைக் கற்பித்துச் செய்து வந்த கொடுமைகளைத் தவிர்ப்பதற்கு முன் வந்தார்கள். க்ஷத்திரியர்கள் பிராமணன் கேவலம் "கர்மி"யாகவும் க்ஷத்திரியன் "ஞானி"யாகவும் இருந்தான். நமது சரித்திரத்தின் முற்பாகத்திலேயே இவவிருதிறத்தாருக்கும் சண்டை நேரிட்டுவிட்டது. இதை சுருதிகளில் நன்றாய் காணலாம் ஸ்ரீ கிருஷ்ணன் க்ஷத்திரிய தர்மத்தையும்ஞானத்தையும் கைக்கொண்டவர்களுக்குத் தலைவராய் எழும்பி சமரசத்திற்கு வழியைக்காண்பித்தபிறகு சற்று அமைதியுண்டாயிற்று.

ஏழைகளின் மீதும் அஞ்ஞானிகளின் மீதும் அதிகாரம் செலுத்த வேண்டுமென்கிற எண்ணம் இவ்விருதிறத்தாருக்கும் இருந்தபடியால் மறுபடியும் சண்டை போட்டுக்கொண்டே யிருந்தார்கள் கடைசியில் க்ஷத்திரியர்களுக்கும் ஞானத்திற்கும் சுதந்திரத்திற்கும் ஜயமுண்டாயிற்று. சடங்குகள் ஒன்றின. அநேகமும் அடியோடு மறைந்தன இவ்வெழுச்சிதான் பௌத்த சீர்திருத்தமெனப்படுவது. இந்தியாவில் தோன்றிய இரண்டு மகான்களாகிய கிருஷ்ணரும் புத்தரும் க்ஷத்திரியராயிருந்தும் ஸ்திரீ புருஷபேதமும் பிறப்புதாரதம்மியமுமின்றி ஞானத்தை யாவருக்கும்பொதுவாகச் செய்து விட்டது யோசிக்கத்தகுந்த விஷயமல்லவா? இதற்குப் பின்னாலும் குருட்டுச்சடங்குக்கும் பௌத்தமதத்திற்கும் சச்சரவுண்டாகிராஜரிஷி பிர்மரிஷி ஸ்தானமாயும் ஆரியாவர்த்தமாயும் கிருஷ்ணன் புத்தன் இவர்களுடைய ஜன்ம பூமியாயுமிரா நின்ற விந்திய ஹிமயமலைகளுக்கு நடுவிலுள்ள மத்திய பிரதேசம்மௌனமாயிவிட்டது. மௌனமாகவே இந்தியாவின் தென்கோடியிலே மாறுபட்ட நடையுடை பாவனைகளுடைய ஜாதிகளிலிருந்தும் பூர்வீக பிராமண வம்ச பாரம் பரியத்துடன் சம்பந்தம் பாராட்டும் குலங்களிலிருந்தும் ஹீனஸ்திதியடைந்து விட்டபௌத்த மதத்திற்கு பிரதிவாதிகள் கிளம்பினார்கள். இவர்களே சங்கராச்சாரியாரும் அவருக்குப் பின்னால் வந்த ராமானுஜரும் மத்துவரும் இவர்கள் செய்த சீர்திருத்தம் பிராமணர்களுக்கு அனுகூலமும் மற்றவர்களுக்கு என்றும் பாராத கால் விலங்குமாயின சங்கரர் அன்னிய மதங்களை தர்க்கத்தில் வெல்லுவதற்கு வேதாந்த மதத்தை உபயோகப்படுத்திக்கொண்டாரே ஒழிய அவர் மதமான வேதாந்த மதத்தில் ஜாதிக்கட்டுப்பாடும் குருட்டு நம்பிக்கையான மூட வழக்கங்களும் போகவில்லை. சங்கரர் சொன்னதொன்று நடத்தினதொன்று. அவர் சிஷ்யாள் கேட்டதொன்று நடந்ததொன்று மலையாளத்தில் பண்ணின அனுச்சாரம் அறுபது என்று சொல்லுகிறார்கள் க்ஷத்திரியாள் இந்தியாவிற்கு முதுகெலும்பு போன்றவர்கள். அவர்கள் தான் சாஸ்திர அபிவிருத்திக்கும் சுயோச்சைக்கும் ஆதாரமாயிருந்தவர்கள் தேசத்திலுள்ள மூடத்தனத்தையும் பிராமணர்களின் கொடுமை விர்த்தியாகாதபடியும் செய்தவர்கள் அந்த க்ஷத்திரியர்கள் பெரும்பாலும் அஞ்ஞானத்தில் அழுந்தி விட்டமையாலும் மற்றவர்கள் மத்திய ஆசியாவின் முரட்டு ஜாதியாருடன் விவாகசம்பந்தம் செய்து கொண்டு பிராமணர்களுடைய ஆளுகையை ஸ்தாபிக்கையில் கத்தி எடுத்து தாமே முன் வந்தமையாலும் இந்தியவாகிய பரதநாடு முழுகிப் போய்விட்டது. வருணாசிரமக்கொடுமையால் எல்லாரும் முதுகெலும்பற்ற புழுவாய்ப்போய்விட்டார்கள் புரோகிதர்களே இந்தியாவிற்கு ஓர் சாபமாய் முடிந்தார்கள் பிராமணனுடைய சுயநலமும் க்ஷத்திரியனுடைய அஞ்ஞானமும் இவர்கள் செய்த கொடுமையும் தொடர்வட்டியுடன் அவர்கள் தலைமேலேயே வந்து விடிந்தது. ஒரு மனிதன் தன்னுடைய சகோதரனை ஈனனாக்கி விட்டுத் தான் அந்த கதியினின்று தப்பிக்கொள்ள முடியுமா? முடியாது. அதுபோல அவர்களையும் ஈனஸ்திதிக்குக் கொண்டுவந்து அடிமைகளாக்கிவிட்டது முற்காலத்திய பிர்மக்ஷத்திரியர்கள் மறைந்து விட்டார்கள். இது தான் வர்ணாசிர்மதருமத்தால் ஏற்பட்டலாபம்.

வசந்தன்— நான் கேட்ட கேள்வியினது பதிலின் பூரணத்தைப்பின்னால் தெரிந்துகொள்ளுகிறேன். நீ சொல்லி வந்ததில் பின்னுமொரு சந்தேகம் எனக்குதித்திருக்கிறது. பிராமணன் என்ன செய்வான்? க்ஷத்திரியன் நீதி தவறினதற்கு க்ஷத்திரியனிடமே எல்லா அதிகாரமுமிருக்கிறது. பாப்பான் புரோகிதனே ஒழிய மந்திரிகூட யில்லையே பூர்வீக இந்து ராச்சியங்கள். பிராமணனால் நாலும்மாயிற்று என்று சொன்னால் பொருந்துமா?

சந்திரன்— நீ முன் கேட்ட கேள்வியின் பதிலின் பாக்கியும் இப்பொழுது கேட்ட கேள்விக்கும் பதில் சொல்லுவதற்கு இன்று நேரமில்லை அடுத்த வாரம் பதில் சொல்லுகிறேன்.

அகில இந்திய சூட்சிக் கூட்டம்.

திரு நாயக்கரின் சத்திய மொழி.

திரு கா. வெங்கிடாசலம் பிள்ளை எழுதுகிறார்

இம்மாதம் 15 தேதிமுதல் 18 தேதிவரை பம்பாயில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம் என்று பெயர் வைத்துக்கொண்ட அ. இ. சூட்சிக் கூட்டம் கூடிக் கலைந்து விட்டது. தீர்மானங்களும் மகாஜனங்கள் எதிர்பார்த்ததற்கு ஒரு அடி முன்னேறிவிட்டது.

தற்போதைய காங்கிரசைப்பற்றி வைக்கம் வீரரும் தேசத்திற்காக மும்முறை சிறை சென்றவரும் உண்மை தேசாபிமானியுமாகிய திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களும் "குடி அரசு"ம் பேசியும் எழுதியும் வந்திருப்பதைப்பற்றி, சிலருக்கு வருத்தமும் ஏற்பட்டிருக்கலாம். திரு நாயக்கர் என்ன சொல்லுகிறார்? தற்கால காங்கிரசு தேசத்தைக் குட்டிச்சுவர் ஆக்குமென்றும் இந்தக் காங்கிரசு தோன்றியமுதல் ஜனங்களுக்கு வரிப்பளுவு தாங்கமுடியாமல் போய் விட்டதென்றும் இக்காங்கிரசின் பெயரைக் கொண்டு ஒரு வகுப்பார் உத்தியோகங்களும் பதவிகளும் ஆதிக்கமும் பெற்று வருகிறார்களென்றும், இதை ஒழித்துவிட்டு உண்மையான மகாத்மா ஒத்துழையாக் காங்கிரசை ஏற்படுத்தவேண்டுமென்றும் தான் சொல்லுகிறார்கள். இப்போது காங்கிரசுக் கமிட்டிகளினுடையவும் காங்கிரசினுடையவும் யோக்கியதை தெள்ளத் தெளிய பம்பாயில் தெரிந்துவிட்டபடியால் இனியாகிலும் திரு நாயக்கரும், குடி அரசும் சொல்வதை உண்மையென்று நம்பலாமல்லவா?

கௌகத்தி தீர்மானம்.

கௌகத்தி காங்கிரசின் தீர்மானம் என்ன? காலஞ்சென்ற தேசபந்துவின் கொள்கையென்ன என்பதை கவனிக்கலாம். எந்த மந்திரி சபையாயிருந்தாலும் காங்கிரசுக்காரர் உடைத்தெறிந்து இரட்டையாட்சியைக் கொல்லவேண்டுமென்பது. ஆனால் சென்னை சுயராஜ்யக்கட்சியாரோ இப்போதிருக்கிற மந்திரி சபையை உடைத்தெறிந்துவிட்டால் ஜஸ்டிஸ் மந்திரி சபையால் இரட்டை ஆட்சி நடந்துவரும். ஆதலால் அது காங்கிரசுக்கு விரோதி ஆகையால் நாங்கள் சுயேச்சை மந்திரி சபைக்கு ஆதரவாயிருக்கிறோம் என்கிறார்கள். இதை யோக்கியப் பொறுப்புள்ளவர்கள் யாரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ஜஸ்டிஸ் கட்சியார் மந்திரி உத்தியோகம் ஒப்புக்கொள்வதில்லையென்று மதுரை மகாநாட்டிலும் மற்றும் பலவிடங்களிலும் ஒரு முறைக்கு பன்முறை சொல்லியாய்விட்டது "தன் வீட்டுக்கள்ளி அயலாரை நம்பாள்" என்ற மாதிரி சொல்லொன்று செய்கையொன்றாயிருக்கிற சுயராஜ்யக் கட்சியார் போலவே ஜஸ்டிஸ் கட்சியாரும் வாக்குத் தவறிவிடுவார்களென்றே வைத்துக்கொண்டாலும் இவர்கள் காங்கிரசு தீர்மானப்படி அந்த மந்திரி சபையையும் ஒழிக்கவேண்டுவதே. அதுதான் யோக்கியர்கள் செய்கை.

தவிடு தின்கிற அரசனுக்கு
முறம் பிடிக்கிற மந்திரி

என்ற மாதிரி சென்னை சுயராஜ்யக் கட்சியாரின் நடத்தையைப்பற்றி அ. இ. கா. கமிட்டி ஏதேதோ செய்துவிடப்போவதாக எதிர்பார்த்திருந்தார்கள். பிரமாதமாக தீர்மானங்கள் அனுப்பியிருந்தார்கள் கடைசியில் உனக்கும் பே! உங்களப்பனுக்கும் பே! பே! என்ற மாதிரி தேச மகா ஜனங்கள் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டார்கள். உண்மையில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியாவது, காரியக் கமிட்டியாவது யோக்கியமாய் நடந்துகொள்வதாயிருந்தால் சென்னை சுயராஜ்யக் கட்சி காங்கிரசுக்கு விரோதமாய் நடந்துவிட்டதாக ஒரு வருத்தமாகிலும் தெரிவித்து எச்சரிக்கை செய்து இனிமேலாவது கிரமமாய் நடந்துகொள்ளும்படி சொல்லியிருக்கலாம். அல்லது சென்னை மாகாணத்தைப் பொருத்த மட்டில் காங்கிரசுக்காரர் பகிரங்கமாக உத்தியோகங்களை எடுத்துக்கொண்டு ஜஸ்டிஸ் கட்சியோ அல்லது வேறு கட்சிகளோ வராமல் செய்திருக்கலாம். சர்க்காரோடும் சமயம்போல் ஒத்துழையாமை செய்யலாம். அதைவிட்டு திருடர்கள் மாதிரி ஒழிந்திருந்து இரட்டை ஆட்சியை நடத்தும் சென்னை சுயராஜ்யக் கட்சியையாவது அதற்கு நற்சாக்ஷி பத்திரம் கொடுத்த காரியக் கமிட்டியையாவது யோக்கியமுள்ளதென்று எந்த யோக்கியரும் சொல்லமாட்டார்கள், தவிடு தின்கிற, சுயராஜ்யக் கட்சிக்கு முறம் பிடிக்கிற காரியக் கமிட்டி போலும்.

எதிர்பார்த்தபடியே.

மகாஜனங்கள் கண்ணில் மண்ணைப்போடவே அ. இ. கா. கமிட்டியைக் கூட்டுகிறார்களென்றும், கடைசியில் ஒன்றுமாகப்போவதில்லையென்றும், எப்படியும் அங்கத்தினர்களை சென்னை ஐயங்கார்கள் சரிக்கட்டி விடுவார்களென்றும் முன்னமே பலபேர் சொல்லிவந்தார்கள். சொன்னபடியே நடந்தது.

நடப்பதற்கு என்ன சந்தேகம்? காங்கிரஸ் கமிட்டி தலைவர் யார்? காரியதரிசி யார்? சுயராஜ்யக் கட்சி தலைவர் யார்? காங்கிரஸ் தலைவர் யார்? அங்கத்தினர்களில் பெரும்பான்மையோர் யார்? சென்னை சுயராஜ்யக் கட்சியை கண்டிப்பதாக் பாசாங்கு செய்தவர்கள் யார்? இவைகளைச் சிந்து யோசித்தால் இப்போது நிறைவேறிய தீர்மானங்களில் ஆச்சரியப்படக்கூடிய தொன்றுமில்லை.

நிற்க சென்னை சுயராஜ்யக் கட்சியார்களும், காங்கிரஸ் தலைவர், காரியதரிசி, மற்ற சிப்பந்திகள் எல்லோரும் பம்பாயில் கூடி சென்னை சுயராஜ்யக் கட்சிக்கு நற்சாக்ஷி பத்திரம் வாங்க எவ்வளவு பாடுபட்டிருப்பார்களோ ஆண்டவனுக்கே தெரியும். இல்லாவிடில் இவர்களுக்கு எதிராகவுள்ள கெல்கார் கூட்டமும் சாம்பமூர்த்தி கூட்டமும் ஒத்துழைப்பார்களா? கள்ளிக்கோட்டை மகாநாட்டிலும், திருவல்லிக்கேணி கடற்கரையிலும் சென்னை சுயராஜ்யக் கட்சியை பலமாய்த் தாக்கிய திரு ஹார்னிமன் வாளாக்கிடப்பாரா? எவ்வளவு சாமர்த்தியம், எத்தனை சூழ்ச்சி? அம்மம்மா! எல்லாம் பிராமணக் கூட்டம், எல்லாம் சுயநலக்கூட்டம், எட்டி மாதத்தில் எப்பாகமாவது தித்திக்குமா?

காங்கிரசின் யோக்கியதை போய்விட்டது.

எப்படி என்ன சூட்சி செய்தோ சென்னை ஐயங்கார்கள் செய்தோ காரியத்தை முடித்துக்கொண்டார்கள். இனி அவர்களைப் பற்றி பேசுவது வீண் வேலை இவர்களிட தயவுக்கோ தாக்ஷண்யத்துக்கோ கட்டுப்பட்டு காங்கிரசுக்கமிட்டி தேசத்திற்கு பெருந் தீங்கை இழைத்து விட்டபடியால், காங்கிரசுக்கு இதுவரை இருந்து வந்த சுவல்ப மரியாதையும் போய்விட்டது. இனி அது தேசிய சபையாகாது. சுயநலச்சபையாய் விட்டது, "காங்கிரசு" என்ற பதமே பெரிதல்ல. அதில் இருக்கும் நபர்களைப் பொருத்தே யோக்கியதை சொல்லவேண்டும். சாதுக்கூட்டம் என்றால் கூட்டத்திற்கு சாது என்ற பெயரல்ல, ஆனால் அதில் கூடியிருக்கும் சாதுக்களுக்கே உரியது. அதுபோல கொலைக்கூட்டம், என்றால் கூட்டத்திற்கல்ல கூடியிருக்கும் கொலைகாரருக்கே உரியது, ஆகையால் காங்கிரசு ஒரு சுயநலக் கூட்டம் என்பதை கோபுரத்தின் பேரிலிருந்தும் சொல்லுவேன்.

டாக்டர் நாயுடு அவர்களும் திரு வி. க. முதலியார் அவர்களும்

சென்னை சுயராஜ்யக்கட்சியார் மந்திரிகளை, மறைமுகமாய் ஆதரித்து வருவதைப் பற்றி பல முறை கண்டித்தும், "தமிழ்நாடு" "நவசக்தி" இவைகளில் எழுதியும் வந்திருக்கிறார்கள். அவர்கள் அ. இ. கா. கமிட்டி ஏதாவது பரிகாரம் தேடும் என்று எதிர்பார்த்திருக்கலாம். அது கையை விரித்து விட்டது. "தமிழ் நாடு" காரியக்கமிட்டியைக் கண்டித்தாய் விட்டது. "நவசக்தி"யும் அதுப்படியே செய்யக்கூடும்.

ஆனால் இத்துடன் அவர்கள் வேலை முடிந்ததா? என்று என்போன்றவர்கள் உண்மையில் இவர்கள், காங்கிரசின் மதிப்பை காப்பாற்றுகிறவர்களாக இருந்தால் தங்களிட, காங்கிரசு அங்கத்தினர் பதவிகளையும் ராஜிநாமா செய்துவிட்டு, தற்காலக்காங்கிரசை உடைத்தெறிந்துவிட்டு ஒத்துழையாக் காங்கிரசை காண முயற்சி செய்ய வேண்டும், அதைவிட்டு காங்கிரசைக் குறை கூறிக்கொண்டு அதிலேயே இருந்து வருவது ஒழுங்காகத் தெரியவில்லை. ஒரு திருடனைக் கெட்டவனென்று தெரிந்து அவன் திருடன் திருடன் திருடனென்று சொல்லிக்கொண்டே அவனோடு நட்புக் கொண்டிருப்பது மகாபாவம். அவன் திருந்தும் வரை அவனுடைய சிநேகத்தை நீக்க வேண்டும். அப்படியும் இல்லையானால் அறவே ஒதுக்க வேண்டும். டாக்டர் நாயுடு அவர்கள் "எந்த உண்மையான காங்கிரசுக்காரரும் மாயவரம் மகாநாட்டுக்குப் போக மாட்டார்கள்" என்று சொல்லியிருக்கிறார் ஆனால் நாயுடு போன்ற உண்மையாளர்கள் இந்தக் காங்கிரசில் இன்னும் இருக்கப் போகிறாரா என்று தான் கேட்கிறேன்.

பிராமணரல்லாத காங்கிரசுக்காரர்களுக்கு

அன்புள்ள சகோதரர்களே! அநேக வபிற்றுப்பிழைப்பு தேசபக்தர்களும், தலைவர்

(17ம் பக்கம் பார்க்க.)

போலி தேசிய ஒற்றுமை.

(S. ராமநாதன் எழுதுகிறார்.)

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியானது முஸ்லீம்களுக்கு உள்ள தனித் தொகுதியை ஒழித்து பொதுத் தொகுதியை சிருஷ்டினை செய்து விட்டால் இந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் ஒற்றுமை உண்டாகி விடும் என்று நம்புகிறது.

மகாத்மாகாந்தி இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு ஏதாவது ஒரு வழி கண்டு பிடிக்க வேண்டி 21-நாள் பட்டினி விரதமிருந்து பார்த்தார்.

ஆனால் கடைசியில் இந்த விஷயம் தன்னுடைய சக்திக்கு மீறினதென்று ஒப்புக்கொண்டு கடவுள் கையில் ஒப்படைத்து விட்டு விலகி விட்டார். இப்பொழுது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி இந்தியாவில் பொதுத் தொகுதி ஏற்படுத்த வேண்டும் என்கிற ஒரு அற்பமான தீர்மானத்தைச்செய்துவிட்டு இந்தப் பெருங்காரியத்தை சாதித்து விட்டதாக நினைத்துக் கொண்டு கமிட்டியார் தங்களுக்குள்ளாகவே ஒருவரை ஒருவர் புகழ்ந்து கொள்ளுகிறார்கள்.

தேசம ஒரே ஒரு தலைவரின் வசப்பட்டு இருந்த பொழுதும் தேசத்தின் முழு பலத்தையும் தாங்கி இருந்த தலைவர் செய்ய முடியாத ஒரு பெரிய காரியத்தை இரட்டை ஆட்சிக்கு முதுகு காட்டி ஓடும் ஒரு சிறு கூட்டத்தார் சாதித்து விட்டதாக போலி ஜய பேரிகை கொட்டுகிறார்கள்.

இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் சச்சரவு இருக்குமானால் அந்த சச்சரவுக்குக் காரணமான வேற்றுமைகளின் ஆஸ்பதங்களை ஆராய்ந்து அவ்வேற்றுமைகளை ஒழிக்க வழிதேடி இரு சமூகத்தாரும் அன்னியோன்னியமாய் வாழும்படி செய்வதே தேசிய வாதிகளின் கடமை ஆகும்.

இந்தியாவிலுள்ள பல நாகரிகங்களையும் பல மதங்களையும் ஒன்று சேர்ப்பதேதான் இந்திய விடுதலை எனப்படும்.

இவ்வேற்றுமை ஒழிக்க எவ்வளக்கெவ்வளவு தமது வாழ்நாளில் நாம் செய்தவர்களாவோமோ அவ்வளவுக்கவ்வளவுதான் நாம்விடுதலைக்காக உழைத்தவர்களாவோம். நமக்குள் ஏற்படும் சச்சரவு அன்னிய ஆட்சியில் உண்டாக்கப்பட்ட தனித்தொகுதி தேர்தல்களாலல்ல நம்மாலேயே ஏற்படுத்தப்பட்ட மத சமூக பழக்க வழக்க ஒழுக்கங்களாலேயே அல்லாமல் வேறு அல்ல.

தென்னாபிரிக்காவில் இருந்து ஸ்ரீ ஆண்ட்ரூஸ் எழுதிய கடிதத்தை ஒட்டி "பயங்கர வழக்கங்கள்" என்னும் மகுடமிட்டு மகாத்மா காந்தி, "யங் இந்தியா" பத்திரிகையில் எழுதி இருப்பதில் "இந்தியர்களிடம் உள்ள மனிதப் பிறவிக்கு ஒவ்வாத கேவலமான நடவடிக்கைகள் மதத்தின் பேரால் அனுஷ்டிக்கப்பட்டு வருவதுதான் நம்மவர்கள் தென் ஆப்ரிக்காவில் மனித உரிமை அடையத் தடையாயிருக்கிறது" என்று எழுதி இருக்கிறார்.

இவ்வெறுக்கத்தக்க வழக்கங்கள் நம்முடைய நாட்டிலிருந்துதான் தென் ஆப்ரிக்காவுக்கு போனதே ஒழிய நம்மவர்கள் தென் ஆப்ரிக்காவில் சிருஷ்டித்துக் கொண்டதல்ல

இந்த கோரமான வழக்கங்களேதான் நம்முடைய நாட்டிலும் தேசிய ஒற்றுமைக்குத்தடையாயிருக்கிறது.

மூட நம்பிக்கை மூலம் இந்துக்கள் சுயமரியாதை இழந்ததும் மத வெறியின் மூலம் மகம்மதியர்கள் தங்களது வீரத்தை இழந்ததும் இதனால் இந்திய சமூகமே தனித்த மனிதத்தன்மையையே இழந்து விட்டது. இதற்குக் காரணம் கால தேச வர்த்தமானங்களுக்கு பொருத்தமில்லாத பழம் பழக்கவழக்கங்களுக்கு நாம் அடிமைப்பட்டிருப்பதே அல்லாமல் அன்னிய ஆட்சியில் நேர்ந்ததல்ல.

ஆதிகாலத்தில் மனிதர் தன்னந்தனியாய்த் திரிந்தபொழுது ஏற்படுத்திக்கொண்ட சுயநலத்திற்கு ஒட்டிய வழக்கங்களை கைவிட்டுவிட்டு இப்பொழுதுசமூகமாய் வாழும் மனிதர்களுக்கு வேண்டிய சகிப்புத் தன்மையை கைக்கொள்வதே மேலானது. ஆனால் பழைய பழக்க வழக்கங்களையே மதமெனக்கொண்டாடுவதால் இந்துக்களும, முசல்மான்களும் சமூகத்தையே பாழாக்குகிறார்கள்- ஆகையால் தற்காலம் நமது முதல் கடமை நமக்குள் ஏற்பட்டிருக்கும் அர்த்தமும், பொருப்புமற்ற வழக்கங்களை நிராகரித்துச் சமூகங்களை ஒன்று படுத்துவதே நமது முதல் கடமை யாகும். தேர்தல்கள் நமது தேச வாழ்க்கையில் முக்கிய அம்சமல்ல. மும் மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை நடக்கும் ஓட்டு வேட்டையைப்பற்றி இந்திய சமூகம் அவ்வளவு கவலைப்படவில்லை. தனக்குள் ஏற்பட்டிருக்கும் உட்பிரிவினால் தான் நமது சமூகங்கள் மாறுவலைப் பட்டுக்கொண்டிருக்கிறது.

நம்முடைய சமூகங்கள் உயிர்பெற்றெழ வேண்டுமானால் இப்பிரிவுகளை நிராகரித்தலே மிகவும் முக்கியமானது. அப்படி நிராகரிப்பதற்குத் தான் தேசத்தார் முழுவதும் கண்விழித்தெழவேண்டும். ஆனால் கண்விழித்தெழுமுதருணம்நெருங்கி விட்டதாகக்கொஞ்சமும் தெரியவில்லை. அத்தருணம் வரும்வரை தேசத் தொண்டர்கள் நிதானத்தைத் தளரவிடாமலும் பல சூழ்ச்சிகள் செய்வதன் மூலம் தங்கள் தங்களுடைய பலக்குறைவைக் காட்டிக்கொள்ளாமலும் இருக்கவேண்டும்.

இவ்வளவு பொறுமையும், உண்மைத் தன்மையும் சிலருக்கு இருப்பதில்லை இதனாலேயே ஏதோ ஒரு விதத்தில் மக்கள் ஏமாறத் தகுந்தமாதிரி பெரிய சஞ்சீவி கண்டு பிடித்ததுபோல் பாசாங்கு செய்து சுலபத்தில் பேர் சம்பாதித்துவிட ஆசைப்பட்டு விடுகிறார்கள்.

பம்பாயில் ஏற்பட்ட 'ஒற்றுமை' எனபதும் இம்மாதிரியான ஒரு போலிச் சமய சஞ்சீவியே ஆகும். இம்மாதிரியாய்மோசமும் பயித்தியக்காரத்தன்மையுமான தீர்மானங்களைப் நாம கவலை எடுத்துக்கொள்ளவேண்டியதில்லையானாலும் கொஞ்சகாலமாக ஒற்றுமை என்னும் பேரால் ஒரு வியாதி நம்முடைய அரசியல் வாழ்க்கையைப்பற்றிக்கொண்டு அதன் பலன்களையே பாழ்படுத்தி வருவதால் அவ்வியாதியின் மூலத்தைக்கண்டு அதற்குச் சிகிச்சை செய்யவேண்டியது அவசியமாயிருக்கிறது. சிலகாலமாக நம்முடைய தேசத்தில் எந்த இயக்கம் தோன்றியபோதிலும் எவ்வித ராஜீயக்கட்சி ஏற்பட்டபோதிலும அதை ஒற்றுமைஎன்னும்வியாதி பிடித்து நசுக்கி விடுகிறது.

இவ்வியாதியின் ஆரம்பம் 1920ம் வரு கல்கத்தா ஸ்பெஷல் காங்கிரஸில் என்று சொல்லலாம். அப்பொழுது ஒத்துழையாமைப்பற்றி ஏற்பட்ட முக்கியமான தீர்மானத்தை காங்கிரஸ் பிரதிநிதிகளிடம் ஓட்டுக்கு விட்டதில் காங்கிரஸ் ஒற்றுமைக்கு அபாயம் வருமென்று சொல்லி பசப்பு வார்த்தைகளால் உண்மையை ஒளிக்கப்பிரயத்தனம் நடந்தது ஆனால் ஜல்லியன் வாலா படுகொலையால் விழித்தெழுந்த தேசத்தின் நாம்புகளில் நல்ல ரத்தம் ஓடிக்கொண்டிருந்தபடிபடியால் அவ்வியாதிவலுக்கவில்லை. ஆனால் அவ்வியாதி பிடித்ததற்கு அடையாளமாக "படிப்படியாய்" என்னும் வார்த்தை அக்காலத்திய ஒத்துழையாமை தீர்மானத்தில் காணபடுகிறது. பிறகும் இவ்வியாதி நம்மைவிட்டு நீங்காத போதிலும காந்திமகானால் புத்துயிரும் புது பலமும் பெற்ற அவர் இயக்கத்தில் ஈடுபட்டிருந்தவரையில் இவ்வியாதி வலுக்கஇடமில்லாதிருந்தது. ஆனால் காந்தி சிறைபட்டு, சுயராஜ்ய கட்சி தோன்றியபொழுது இவ்வியாதி பரவுவதற்கு சந்தர்ப்பங்கிடைத்தது. அக்காலத்தில் மாறுதல் வேண்டாத ஒத்துழையாதாரும் சுயராஜ்யக் கட்சியாரும் எவ்வளவு தூரம் வாய்ச்சண்டையிட்ட போதிலும் கொஞ்சங்கொஞ்சமாய் அவரவர்கள் கொள்கைகளை நிலை நிறுத்த ஜனங்களிடம் உருப்படியானவேலை செய்ய ஆரம்பித்திருப்பார்கள். ஒத்துழையாமையும் உயிருடனிருந்திருக்கும். சட்டசபைக் கட்சியும் தடையற்று தன் சக்திக்கேற்றவாறு வளர்ந்திருக்கும் ஆனால் இவ்வியாதியானது ஒத்துழையாமையைக்கொன்றுவிட்டது. பிறகு சுயராஜ்யகட்சி வளர ஆரம்பித்த காலத்தில் பரஸ்பர ஒத்துழைப்புக் கட்சி தோன்றவே மறுபடியும் இவ்வியாதி ஓங்கியது. இப்பொழுது கௌசத்தி ஆணைக்கும் பம்பாய் வியாக்கியானத்திற்கும் மத்தியில் ஒற்றுமைஎன்னும்பெயரால் சுயராஜ்யக் கட்சி கொல்லப்பட்டு வருகிறது. இதேகாலத்தில் தோன்றும் கூட்டுத்தொகுதியும் ஒரு போலி ஒற்றுமையேயாகும் வரப்போகும் சென்னை காங்கிரசில் பிராமணரல்லாதார் கேட்கும் தனித்தொகுதி விவாதமும் மறைந்து அவர்களுக்கு இப்போது ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் ஸ்தானங்களையும் பலி கொடுத்து பிராமணர் பிராமணரல்லாதார் என்ற ஒரு போலி ஒற்றுமை தோற்றுவிக்கவும படலாம் "இனிமொரு ஒற்றுமை தோன்றிவிட்ட"தென்று "பர்கென் ஹெட் பிரபுவுக்குச் சரியான பதில் கொடுத்தாய் விட்ட"தென்றும் பறையடிக்கப்படலாம். இந்த ஏமாற்றங்களைப் பொது ஜனங்கள் நம்பினால் தென்னிந்திய ராஜீய வாழ்வே

"உருண்டைக்கு நீளம் புளிப்புக்கு அவளப்பன்"

—o—

என்பதாக ஒரு பழமொழி உண்டு. அதாவது ஒரு ராஜாவைப் பார்க்க எல்லோரும் எலுமிச்சம் பழம் கொண்டுபோனார்களாம். திருவாழ்தான் என்பவன் ஒரு புளியம்பழம் கொண்டுபோய் கொடுத்துப்பார்த்தானும். ராஜா திருவாழ்தானைப்பார்த்து இது என்ன என்று கேட்டாராம். அதற்கு திருவாழ்தான் "உருண்டைக்கு நீளம் புளிப்புக்கு அவளப்பன் என்றானும். என்னவெனில் எலுமிச்சம்பழம் உருண்டை, புளியம்பழம் நீளம் புளிப்பு விஷயத்திலே இது அதைவிட அதிகமான புளிப்பு என்று சொன்னானும்.

அதைப்போலவே ஜஸ்டிஸ் கட்சி மந்திரி காலம் மிக கொடுமையாகவும் தேசத்துரோகமாகவும் இருந்ததாக பார்ப்பனர்களால் கூறப்பட்டு வந்தது. நமது நற்காலமாகவே ஜஸ்டிஸ் மந்திரி ஆட்சியும் மறைந்தது இரட்டை ஆட்சியை வெட்டிப்புதைப்போம் மந்திரிகளை எதிர்த்தே தீருவோம் என்ற நமது அய்யங்கார்கள் சுப்பராய மந்திரி கட்சியை அமைத்தார்கள். இது உருண்டைக்கு நீளமாகவும் புளிப்புக்கு அதனப்பனாகவும் ஏற்பட்டுவிட்டது. நாம் இந்த ரகசியத்தை முன்னமேயே வெளியிட்டபொழுது நேற்றுவரை மந்திரி கட்சிக்கும் எங்களுக்கும் சம்பந்தமேயில்லை. நாஸ்திகரும் பார்ப்பன துவேஷியானவருமான நாயக்கர் சொல்வதை நம்பாதீர்களென்று பார்ப்பனர்களும் பார்ப்பனப் பத்திரிகைகளும் கத்தினர். ஸ்ரீமான் எஸ். முத்தைய முதலியார் போன்றார்கள் எக்காரணத்தினாலோ

நாசமாகும். அப்பொழுதே தான் உலகத்தார் நம்முடைய கேவலத்தையும், கையாலாகாத தன்மையையும் உணருவார்கள்.

ஒற்றுமை என்னும் இப்பெருவாரியான வியாதியைத்தீர்ப்பது தேசஊழியர்கள்கடனன்றோ? ஒருகட்சியில்சேர்ந்தவர்மற்றகட்சியாரைக்கண்டுமிரண்டுமற்றவர்கொள்கையைநாசமாக்கவேண்டுமெனத் தவிக்கக் காரணமென்ன? உண்மையைக் கடைப்பிடித்தவர் தாம் கண்ட உண்மையைப் பின்பற்றவும் அதை தேசத்தாரிடம் பரப்பவுமல்லவா பாடுபட வேண்டும்? வேறு கொள்கையாளர் தோன்றினுல் அவர் செய்கைமூலம் தங்களுடைய உண்மையல்லவா வெளிப்படும்? தங்களிடமிருப்பது உண்மை தானென்றும் அவ்வுண்மையைப் பரிபாலிக்கத் தனக்குத் திறனிருக்கிறதென்றும் நம்பும் ஒருவர் மற்ற கொள்கையாளரை அமிழ்த்தி விட எண்ணமாட்டார். சகிப்புத்தன்மையையே கடைப்பிடிப்பார். போலி ஒற்றுமை என்னும் சோம்பேறி அடிமைப்புத்திகாரணமாய் ஏற்பட்ட மயிலுமியாதியாகும். சுதந்திரத்திற்கு பாடுபடுபவர்கள் தங்கள் அடிமைப் புத்தியென்னும் பிதுருணத்தை விடுவார்களேயாயின் இந்நோய் நம்மைவிட்டகன்று உண்மை, ஒற்றுமையும், பரமும் நம் தேசத்திலோங்கும்.

பார்ப்பனர்களை........அ. இ. கா. கூட்டத்தில் தாக்க ஆரம்பித்ததும் உண்மை விஷயம் பார்ப்பனர்கள் வாயிலிருந்தே கக்கப்பட்டுவிட்டது. அதாவது:—

"தற்காலமிருந்துவரும் மந்திரி ஆட்சியில் தேசிய மணம் கமழ்கின்றதும் காங்கிஸ் நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்றஇம்மந்திரிகள் தான் லாயக்குள்ளவர்கள். அதற்காகவே இம்மந்திரிகளை உபயோகப்படுத்திக்கொள்ளுகிறோம். வகுப்புவாதக்காரர்களான ஜஸ்டிஸ் கட்சியார் தேசத்துரோகிகள் அவர்கள் மந்திரியாய் வராமல் பார்த்துக்கொள்ளவும் சுப்பராய மந்திரியை ஆதரிக்க நேர்ந்தது. மறு தேர்தலை உண்டாக்க ஜஸ்டிஸ்கட்சி இன்னமும் முயற்சிப்பதால் தான் இனியும் சுப்பராய மந்திரி ஆட்சியை எப்பாடுபட்டாவது ஆதரிக்கப்போகிறோம் என்பதாகச் சொல்லி பார்ப்பனர்கள் தங்களது அயோக்கியத் தனத்தை பகிரங்கமாக ஒப்புக்கொண்டுவிட்டார்கள். எப்படியாவது உண்மை வெளிவந்தமை குறித்து நாம் மகிழ்ச்சி அடையவேண்டியதே. ஆனல் தேசிய மணம் கமழும் சுப்பாராயன் மந்திரி ஆட்சியின் யோக்கியதை என்ன? என்பதை பொது ஜனங்கள் அறியவேண்டாமா? பார்ப்பனர்களுக்கு வலதுகைகொண்டு கால் அலம்பிவிடும் எந்த பார்ப்பனரல்லாதாரும் இன்றைய ஐயங்கார் ஆட்சியில் சிறிது இன்பமனுபவிக்கலாம் என்பதுமட்டும் உண்மை தான். நம் நாட்டு வேளாள குலத்தில் ஜனித்தவர்களே பெரும்பாலும் நமது அரசாங்க பெரிய உத்தியோகங்களில் வரவேண்டுமெனபது நமது நீண்டகால அவாவாகும். ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் ஸ்ரீமதி அவ்வை பிராட்டியாரும் அப்படியே சொல்லி இருக்கிறார். ஆனல் இவ்வளவு தூரம் மோசமான ஒரு வேளாளர் மந்திரியாக வருவதால் நமது நாட்டுக்காவது சமூகத்திற்காவது யாதொரு நன்மையும் ஏற்படாதென்றே சொல்லுவோம். இப்போது கனம் சுப்பாராயன் மந்திரியாக இருக்கிறார் எனபது உண்மை. ஆனல் எந்த யோக்கியதையுடன் மந்திரியாக இருக்கிறார்? இயற்கையாக அவருக்குள்ள குலம், கல்வி, செல்வம், சக்தி ஆகிய இதுகளின் வன்மையால் இருக்கிறாரா என்று பார்த்தால் ஒருக்காலும் இல்லவேயில்லை பின் எப்படியென்றாலோ பார்ப்பனர்களின் தயவில் அவர்களால் ஆட்டிவைக்கப்படும் பொம்மையாய் இருப்பதினாலேயே மந்திரியாய் இருக்கிறார். நாடு சிரிக்கவும் சமூகம் வெட்கப்படவும மந்திரி வேலைபார்ப்பது நண்பர் சுப்பாராயன் அதன் பலனை அடைந்து உத்தியோகம் பதவி பெற்று தின்று கொழுப்பதும் பார்ப்பனர்கள். இதை எண்ணும்போதும் நாம் மிக வருத்தப்படுவதுடன் அவ்வேளாள சமூகத்திற்கே இம்மாதிரியான ஒருவரை அடைந்த துர்ப்பாக்கியத்திற்கும் நாம் அனுதாபப்படாமலிருக்கமுடியவில்லை

இதுவா தேசீய மணம்?

மந்திரியாக வந்த கதை இதுவென்றால் நடந்த கதைதான் என்ன? என்று பார்த்தால், திருவண்ணாமலை ஸ்ரீரங்கம் முதலிய முனிசிபாலிட்டிகளிலும், கோபிசெட்டிபாளையம் தாலுகா போர்டிலும் மகாத்மா காந்தியடிகளுக்கு வரவேற்பு பத்திர மளிப்பதென்று தீர்மானித்தார்கள். இதை சுப்பராய மந்திரியார் தடுத்துவிட்டு ஓர் சுற்று உத்திரவையும் சகல ஸ்தாபனங்கட்கும் அனுப்பியிருக்கிறார். இவ்வுத்திரவை பார்ப்பன மித்திரன் மந்திரி உத்திரவு என்று சொல்லாமல், திருட்டுத்தனமாய் "சர்க்கார் உத்திரவு என்கிறன்" இதே உத்திரவுபனக்கால் காலத்தில் ஏற்பட்டதற்கு "பனக்காலின் தேசத்துரோகம்" "பனக்காலின் ராஜ்யம் பாழ்" "மகாத்மாவுக்கே உபசாரம் கூடாதாம்" என்று கூறினன். ஏனென்றால், பனக்கால் மந்திரி பார்ப்பன அடிமையல்ல.

பெல்காம் மகாநாட்டின்பொழுது மகாத்மாவுக்கு பத்திரமளிக்க 100 ரூபாய் செலவுடன் ஒரு கலெக்டர் (I. C. S. ஆங்கிலேயர்) தலைவராய் உள்ள முனிசிபாலிட்டியில் தீர்மானித்தார்கள். ஆனல் அ. இ. தலைவர் ஐயங்காரின் ஆதரவுபெற்ற நமது கனம் மந்திரியின் செய்கையோ ஓர் ஆங்கிலேயரின் செய்கை அளவுகூட யோக்கியமாய் நடந்து கொள்ள முடியவில்லை. உண்மையில் பனக்கால் காலத்திலாவது மகாத்மா காந்தி ஆங்கிலேய ஆட்சிக்கு ஒரு ஆபத்தான மனிதராய் விளங்கினர் என்று சொல்லிக்கொண்டார்கள். ஆகவே "சர்க்கார் விரோதிக்கு" "சர்க்காரை ஆதரித்த" கட்சியார், ஆதரவு அளித்தது ஒரு விதத்தில் பொருந்தும். இன்றைய மகாத்மா காந்தியோ மிக சாதுவாய்விட்டார். சர்க்கார் மனிதர்களும் மன்னர்களும், திவான்களும் விருந்தாளியாக அழைக்கும் அவ்வளவு தூரம் சாதுவாகிவிட்டார், இப்படிப்பட்ட சாது காந்திக்கு "தேசிய மணம்" கமழும் மந்திரி பொது ஜனங்கள் பணத்தில் உபசாரம் அளிக்கக் கூடாது என்பாரானல் அம்மணம் தேசீய மணமா? தேசத்துரோக மணமா? தேசீய மணமான சுயமரியாதை அற்ற மணமா? என்றுதான் மகாஜனங்களைக் கேட்கிறோம்,

சேலம் தேர்தல்.

சேலம் ஜில்லா போர்டு தேர்தல் விஷயமாக மந்திரி நடந்துகொண்டதென்ன? அந் நடத்தைக்கு பார்ப்பனப் பத்திரிகைகள் செய்யும வியாக்யானம் என்ன? நியாயமாக நடந்த ஜில்லா போர்டு தேர்தல் தடை செய்யப்பட்டது. இதற்கு திருநெல்வேலியிலும் தஞ்சையிலும் அகப்பட்டதுபோல், ஏமாந்தவர்கள் சேலத்தில் கிடைக்காததினுல் முழுதும் மோசமானதான தாருமாரான விளையாட்டுப்பிள்ளை உததிரவுகளை பிரப்பிக்கும்படி மந்திரி கையை பார்ப்பனர்கள் பிடித்து எழுதி தந்துகொடுத்து வருகிறார்கள். இந்த மந்திரி ஆட்சியை மந்திரி ஆட்சி என்பதா? "ரி"யை தள்ளி மந்தி ஆட்சி என்பதா?

முதல்முதல் சேலம் ஜில்லா போர்டு தலைவர் தேர்தல் நடத்த மந்திரியேதான் உத்திரவிட்டார். அதாவது தற்கால பிரசிடெண்டு ராஜீனமாவை போர்டு ஒப்புக்கொண்டு பிறகு தேர்தல் நடத்தலாம் என்று உத்திரவு செய்தார் அந்தப்படியே நடந்த தேர்தலை பார்ப்பனர்கள் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு ரத்து செய்துவிட்டார். மறுபடியும் மேமீ 23-ந் தேதி நடத்தும்படி

(15-ம் பக்கம் பார்க்க)

கும்பாபிஷேகத்தின் ரகசியம்

குருக்கள் பார்ப்பனர்கள் சம்பாஷணை.

(சித்திர புத்திரன் எழுதுவது)

நடேச குருக்கள்:— ஏண்டா சுப்பா இந்த 4, 5, மாதமாய் நம்ம கோயிலுக்கு அபிஷேகம் வறதில்லே பிரார்த்தனை வறதில்லை முன்னைப்போல அதிக சனங்கள் அர்ச்சனை செய்ய வறதில்லையே என்ன சங்கதி?

சுப்புக் குருக்கள்:— சங்கதியா! சங்கதி ஈரோட்டிலே ராமசாமி நாயக்கன் இருக்கான் அல்ல அவன் "குடி அரசு" ண்ணு ஒரு பேப்பர் போட்றான். அதில் சும்மா இதையே எழுதறான் பாப்பானுக்கு பணம் கொடுக்காதே பார்ப்பான் காலில்விழாதே, பாப்பானைக்கொண்டு சடங்கு செய்யாதே கோயிலுக்கு போனால் நீயாகவே சாமி கும்பிட்டு விட்டுவந்துடு பாப்பானை தேங்காய் பழம் உடைக்கச் சொல்லாதே அவன் தீபார்த்தனை காட்ட நீ கும்பிடாதே அவன்கிட்ட பிரசாதம் வாங்காதே என்று இப்படியெல்லாம் எழுதியும் போறபக்கம் எல்லாம் பேசியும் நம்ம தலையில் கைவெச்சுகிட்டு வர்றான் அவன் பேச்சைக் கேட்டுகிட்டு இந்த சூத்திரன்கள் தானே வறது தானே கும்பிட்டு பேசாமல் போயிடறது இப்படி பண்ணுராங்கடாண்ணா

நடேச குருக்கள்:— அப்படியா அடடா அவனுக்கு என்ன கேடுவந்தது அவனப்பா ரொம்ப பிராமண விசுவாசியாச்சுதே எத்தனை சமாராதனை எத்தனை கோயில்லெத்தனை சத்திரம் சாவடி தண்ணீப்பந்தல் உச்சவம் உபநயனம் கல்யாணம் இதெல்லாம் செய்திருக்க அப்படிப்பட்டவயிற்றில் இப்படிப்பிள்ளையா பிறக்கணும் அய்யய்யோ கர்மம் உடும்மா அவன் இனம் கொஞ்சகாலில் என்ன கெதி ஆகப்போறான் எண்ணுபாரு முன்னே மூணு நாலு தரம் ஜெயிலுக்கு போயும் அவனுக்கு புத்தி வல்லை இப்ப சீக்கிரத்தில் ஜெயிலுக்கு போகப்போறானா இல்லையா எண்ணு பாத்துகிட்டு இரு ராஜத்துவேஷம் பிராமணத்துவேஷம் யாரை சும்மா விட்டது இவனைவிடுறதுக்கு? ஆனாலும் இதனாலே இப்ப நமக்கு இந்த 2, 3 மாசமாய் சுத்தமா வரும்படி இல்லையே அதுக்கென்னபண்ணறது? இப்ப வர வர தெவசத்துக்குகூட எந்த சூத்திரனும் நம்மை கூப்பிடறது இல்லே. நமக்கு முன்னேயெல்லாம் ஒரு இடை இழுத்துவிட்டு அரிசி பருப்பு காசு எவ்வளவு தாராளமாக குடுப்பாங்கோ இப்ப அதுகூட இல்லையே இன்னும் தன்ன சங்கதி இந்த வருஷம் பிராமணன் மேலே சங்காரந்திவந்துட்டதா என்ன ஒண்ணும் தெரியவில்லையே

சுப்புக்குருக்கள்:— வரும்படியைப்பத்தி கவலைப்படாதே நான் ஒரு வழி சொல்லுறேன் அப்படி கேக்கறையா?

நடேசக்குருக்கள்:— சொல்லித்தொலைப்பா. சோத்துக்கில்லாத பாப்பான் சொன்னபடி எல்லாம் கேப்பான் எண்ணு நீ கேட்டதில்லையா சொல்லு சொல்லு.

சுப்புக்குருக்கள்:— சொல்லுகிறேன் வெளியில் சொல்லாதே

நடேசக்குருக்கள்:— இதுவே ரேகர்மமா நான் தான் சுத்த சுத்தமா சோத்துக்கு சாகுறேன் இன்ன இதை வெளியில் சொல்றதுவேறையா, கொஞ்சம் சொல்லப்பா சட்டுண்ணு

சுப்புக்குருக்கள்.— சுத்திப்பு முத்தியும் பார்த்துக்கோ ஆராவது வந்துப்போறாங்கோ.

நடேசக்குருக்கள்:— ஒருத்தரும் இல்லை சொல்லித்தொலை.

சுப்புக்குருக்கள்:— அது என்னண்ணாக்கா? கோயிலில் சாமி இருக்குதல்ல அதை ஆட்டி புடிங்கி கீழே தள்ளிபடுக்கவெச்சிடு காத்தாலெ கோயிலே போய் நீ பாத்ததாகவும் "கோயில் கதவு உடைச்சி எவனோஉள்ளே போயி சாமியை ஆட்டி கீழே தள்ளிப் போட்டு அதிலெ இருந்த தங்கம் வெள்ளி நவரத்தினமெல்லாம் எவனோ எடுத்துகிட்டு போயிட்டான், கும்பாபிசேகம் பண்ணவேணும் இல்லாவிட்டால் ஊருக்கு ஆகாது தர்மகர்த்தாவுக்கு தோஷம் கமிட்டியாருக்கு பாவம்" அப்படிண்ணு சொல்லிப்போடு கமிட்டியார் கும்பாபிசேகமபண்ணவொரு கும்சாமிக்குகீழே போட்டிருந்த தங்கமவெள்ளிகாசு நவரத்தினம் இதுகவித்து சாப்பிட்டுகிட்டு இருந்தது தெரியாதா உனக்கு.

நடேசக்குருக்கள்:— இதுநல்ல யோசனை தான் நானும் இதற்கு முன்னாலேயே சாமியை ஆட்டி தள்ளி அதுக்குகீழே இருந்ததை எடுத்துக்கிட்டு சாமியை சும்மாதான் நிக்கவெச்சி இருக்கிறே ஆர்ச்சனை பண்ண பூவெல்லமா சாமி மேலே பட்டாலே சாமி ஆடும் அதுமாதக்காமா எங்க கோயிலில் இருக்கிற எந்த சாமியை தொட்டாலும் சட்டுண்ணு பிடிக்கும் எல்லாம் பிடிபிடுங்கி அதிலிருந்ததை முன்னமே எடுத்து தின்னுப்போட்டோம் ஆனதினாலே சாமியை பாடுபட்டு ஆட்டி கீழே தள்ளவேண்டியதில்லை தொட்டாபோதும் தானே கீழேவிழுந்துடும்

சுப்புக்குருக்கள்:— அப்படியானக்கா இன்னைக்கி ராத்திரியே சாமியை தள்ளிப் போட்டு இருட்டுக் காலம் தானே யாரு பாப்பாங்கோ கும்பாபிசேகம் பண்ணினாக்க உனக்கும் கிடைக்கும் எனக்கும் கிடைக்கும் இனம் மத்த பிராமணாளுக்கும் தட்சணை வேட்டி சமாராதனை இதெல்லாம கிடைக்கும் ஒருவாரம் எப்படியும் ஓட்டிக்கலாம் தக்ஷணை வேட்டிகூட சொம்பு முதலானதும் மாசக்கணக்காக வரும் அப்புறம் இதே மாதிரி ஒவ்வொரு ஊரிலேயும் பண்ணச் சொன்னாக்க இந்த வருசத்து சங்கதி முடிஞ்சு போகும் மேலேந்து பாத்துக்கலாம் அதுக்குள்ளே அவனும் ஜெயிலுக்கு போயிட்டாக்க மத்தவனுங்கெ இந்தப் புத்திவுட்டுடுவானுங்கோ

நடேசக்குருக்கள்:— சரிசரி ராத்திரிக்கு போய் தள்ளிப்போட்டே வந்துடுறேன் நீ எங்கயும் போயிடாதே தருமகர்த்தாகிட்ட சொன்ன உடனே அவன் ஒரு முட்டாளு ஆனதினாலே கும்பாபிசேகம் உடனே பண்ணவேணும் எண்ணு சொல்ற தர்மகர்த்தா. அவன் உடனே ஏற்பாடு பண்ணராப்லே இருந்தா உடனே உன்னை வந்து கூப்பிடுறேன் தெரியுமா?

சுப்புக்குருக்கள்:— ஆமா ஆமா உங்க தர்மகர்த்தாகூட ஒரு பயத்தியக்காரந்தான் அவனுக்கு சும்மா மேலும் கீழும் சாம்பலை பூசத்தா தெரியும் அரகரா சிவசிவ எங்கத்தா தெரியும் மத்தபடி நீ சொல்லரது தான் வேதவாக்கு உடனே செய்வான். நானும் சத்திரத்திலேயே படுத்திருக்கிறேன். காலமே நேரத்திலேயேவந்துசொல்லுதெரியுமா?

நடேசக்குருக்கள்:— சரி போய்ட்டுவா நீ நல்லா இருக்கணும் நல்ல கஷ்டகாலத்திலெ சரியான யோசனை சொன்னே சரி. சரி.

ஈரோடு முனிசிபாலிட்டியின் யோக்கியதை

ஈரோடு முனிசிபாலிட்டியில் 23-5-27-உ யன்று மாலை 5-30 மணிக்கு ஒரு அவசர மீட்டிங் சேர்மெனால் கூட்டப்பட்டிருந்தது அந்த மீட்டிங்கை சேர்மென் 5 மணிக்கு 5 முன்னதாகவே முனிசிபல் ஆபீசுக்கு வந்து இன்று கோரமில்லாததால் மீட்டிங் ஒத்தி வைக்கப்பட்டதென்று எழுதி விட்டு வெளியில் வந்து நின்று கொண்டார் அது சமயம் வந்த கவுன்சிலர்களை ஸ்ரீமான் கே. என். கிருஷ்ணசாமி செட்டியாரையும் எச். பாகூர் சாயபு ஆகிய இருவரையும் சேர்மென் பார்த்து மீட்டிங் இன்றைக்கு ஒத்திவைத்தாகி விட்டது நாளைக்குவைத்துக் கொள்ளலாம் என்று சொன்னார் கவுன்சிலர் இன்றைக்கு ஏன் ஒத்திவைக்க வேண்டுமென்று கேள்க நேரமில்லை ஆதலால் ஒத்திவைக்க நேர்ந்தது என்று சொன்னார் கவுன்சிலர் ஸ்ரீமான் எச். பாகூர் சாயபு கோபமாய் 5-30 மணிக்கு மீட்டிங் போட்டிருக்கும் போது நாங்கள் 5 மணி 5 நிமிஷத்துக்கு வந்திருக்கும் போதே நேரமில்லை என்றால் இது என்ன அக்கிரமம் என்று பலவாறாக கண்டித்து பேசும் போது பெரிய கூட்டம் ஏற்பட்டு அவ்விடத்தில டென்னிஸ் விளையாடிக்கொண்டிருந்தவர்கள் எல்லோரும் வந்து பார்க்கும் போது கூட 5 மணி 15 நிமிஷம் தான் ஆகியிருந்தது இதன் பேரில் மற்ற கவுன்சிலர்களும் 5-25 மணிக்குள்ளாகவே கோரத்திற்கு மேலாகவே வந்து கூடி விட்டார்கள் சேர்மென் இப்படிச் செய்ய காரணம் என்னவென்று யோசித்தால் இம்மாதிரி செய்வதன் மூலம் தனக்கு வேண்டாத கவுன்சிலர்களை மூன்று மாதம் மீட்டிங்குக்கு ஆஜராகவில்லை யென்று நீக்கி விடலாம் என்கிற உத்தேசம் என்பதாக தெரிய வந்தது இதன் பேரில் ஆஜர் புஸ்தகத்தில் கையெழுத்துப் போட ஆஜர் புஸ்தகம் கேட்கலாமென்று ஆபீசுல் போய் பார்க்கமானேஜர் ஆஜர் புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு [illegible] மார்க்கமாய் போய் விட்டதாகவும் தெரிய வந்தது பிறகு இந்த விஷயங்களையெல்லாம் செக்ரெடரிக்கும் மந்திரிக்கும் கலெக்டருக்கும் தந்தி மூலமாயும் தபால் மூலமாயும் தெரியப்படுத்தியிருக்கின்றது இந்த விபரம் தெரிந்த சேர்மென் ஆபீஸ் குமாஸ்தாக்களிடம் மிரட்டி பொய் ஸ்டேட்மெண்டுகள் வாங்கி அதிகாரிகளுக்கு அனுப்பியதாக தெரிய வருகிறது தவிர ஒரு ஸ்பெஷல் மீட்டிங்கு கூட்ட சட்டப்படி 5 கவுன்சிலர்களிடம் கையெழுத்து வாங்கி அனுப்பியிருக்கிறது. இதில் ஒரு, அதாவது பஞ்சம கவுன்சிலரை சேர்மென் மிரட்டி அவர் கையெழுத்தை மாத்திரம் வித்ட்ரா செய்து கொண்டதாக எழுதி வாங்கி யிருப்பதாகவும் தெரிகிறது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

"ஊழியனும் பிராமணரல்லாதார் இயக்கமும்"

(அரு சோமசுந்தரன்.)

சென்ற சில வாரங்களில் ஊழியனில் வெளிவந்த, வகுப்பு உணர்ச்சி, வகுப்பு மகாநாடு, அல்லாதார் எனும் வகுப்பு விவாதம் பற்றிய தலையங்கங்களையும், வேறு சில கட்டுரைகளையும் நான் படிக்கலானேன். அவ்விவாதம் குறித்து எனது அபிப்பிராயத்தினை வாசகர்கட்குத் தெரிவிக்கவேண்டியது எனது கடமையாகவிருக்கிறது. தீமை தரும் வகுப்பு உணர்ச்சியும், வகுப்புக்கொள்கையும் அறவே அகலுதல் வேண்டும் எனும் கொள்கையில் நானும் முனைந்து நிற்பவன். ஆனால் அவை எப்பொழுது எப்படித்தொலையும் என்பதை ஆராய்வதிலேயே அபிப்பிராய பேதம் தோன்றியுள்ளது. அக்கட்டுரைகளில் பொதுவாக வகுப்பு உணர்ச்சி விவாத முறையில் தத்துவரூபமாகக் கண்டிக்கப்படுகிறது. ஆனால் செயல் முறையைப்பற்றி விரிவான கருத்துக்கள் ஒன்றும் விளக்கமாக உரைக்கப்படவில்லை. மேலும் சிறப்பாகப் பிராமணரல்லாதார் பொது இயக்கமானது குறை கூறப்படுகிறது. ஆகவே, அவ்வியக்கத்தைப் பற்றி நான் கொண்டுள்ள அபிப்பிராயத்தை எழுதுவது இன்றியமையாததாகவிருக்கின்றது.

இயக்கம் எழுந்ததன் காரணம்.

பிராமணரல்லாதார் இயக்கம் சில பெரியோர்களின் அரிய முயற்சியால், பார்ப்பனக்கொடுமைகளைவேர் கொழுந்துவிட்டு எரியும் நந்தென்னாட்டில் பலஆண்டுகளுக்கு முன்னர் ஒரு குலத்துக்கொருநீதியெனும்பக்ஷபாதமான அநீதியை அறவே ஒழிக்கற்பொருட்டுத் தோற்றுவிக்கப்பட்டது. தென்னாட்டுப் பார்ப்பனர்கள் அவ்வரிய இயக்கத்தை எவ்வெவ்வகையாலோ அழிக்கப் பெருமுயற்சி செய்தார், செய்துவருகின்றார், செய்ய எண்ணியுள்ளார். சிற்சில அரசியல் மாறுபாடுகளால் அவ்வியக்கத்தில் ஒருவாறு கலந்தும், கலவாமலும் பார்ப்பனரல்லாத தலைவர் சிலர் தொண்டு புரிவாராயினர். ஆனால் ஆசாரச்சீர்திருத்தத்தை வளர்த்தலிலும், சமூகப் பிரத்தியேக உரிமையை ஒழித்தலிலும், பார்ப்பனக்கொடுமைகளை நீக்குதலிலும் தொண்டுசெய்யும் வகையில் பிராமணரல்லாதார் பொது இயக்கத்தைச் சுயமரியாதை உடையவர் ஒவ்வொருவரும் ஆதரிக்கப் பின்வாங்குவதில்லை என்பது கண்கூடு.

செய்துள்ள வேலை,

பிராமணரல்லாதார் இயக்கம் நாட்டில் பலவிதமான நன்மைகளைத் தோற்றுவித்திருக்கின்றது. பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லையென்பதைப் பல ஆண்டுகட்கு முன்னர் வற்புறுத்தியது இவ்வியக்கமே. நாட்டுப்பொது உரிமைகள் நாட்டு மக்களனைவருக்கும் உரியன எனும் உயர்ந்த எண்ணத்தைப் பரப்பியது இவ்வியக்கமே. ஆசாரச் சீர்திருத்தத்தின் பொருட்டும், கல்வி வளர்ச்சியின் பொருட்டும், பிராமணரல்லாதார் பொது நலத்தின்பொருட்டும் இவ்வியக்கம் செய்திருக்கும் சிறந்த வேலை அளவிடற்கரியது. தாழ்ந்த வ[illegible]ார் முன்னேற்றத்தின் பொருட்டு இவ்வியக்கம் பலவழிகளாலும் உயர்ந்த தொண்டாற்றி [illegible]கின்றது. சமய அநீதிகளை ஒழிக்கற்கு இ[illegible] அறநிலையப் பாதுகாப்பு மசோதா[illegible] கொணர்ந்து நிறைவேற்றியிருக்கின்றது. ([illegible]த்தில் அரசியல் பார்ப்பனர் பலர், இம்ம[illegible]ா நிறைவேறாத வண்ணம் இடையூறு புரிந்ததை எழுதாமற் செல்ல மனம் சம்மதிக்கவில்லை) பார்ப்பனக்கொடுமைகளை முதன் முதல் ஒழிக்க எழுந்த அரிய இயக்கம் இதுவே. இன்று பிராமணரல்லாதாருக்கு நாட்டில் ஒரு அளவு செல்வாக்கும் பொது நலனும் தோன்றியிருக்கின்றன என்றால், அப்பெருமை இவ்வியக்கத்திற்கே உரியதாகும். பார்ப்பன மாயையிலிருந்து என்னைப்போன்ற பலர் கண் விழித்து விடுதலையடைந்து உரிமைபெற விழையும் வண்ணம் தூண்டியதும் இவ்வியக்கமே. ஆங்கிலேயரிடமிருந்து உரிமைபெறக் காங்கிரஸ் முயலுவதுபோலவே பார்ப்பனரிடமிருந்து விடுதலைபெற இது உழைக்கின்றது. இருவகை விடுதலையும் நாட்டிற்கு இன்றியமையாதன. பிராமணரல்லாதார் முன்னேற்றத்தை விரும்புவோர் எவரும் இவ்வியக்கத்தை வெறுத்துத்தள்ளத் துணியார்.

செய்யும் வேலை,

இதுகாலை சமயவழியிலும் பார்ப்பனக் கொடுமைகளை ஒழித்தலில் பிராமணரல்லாத தலைவர்கள் அரும்பாடு பட்டு வருகின்றார். பிராமணரல்லாதார் பொது இயக்கமானது பலதிறப்பட்ட கிளைகளுடன் தொண்டு புரிகின்றது. பல தலைவர்கள் பல வழிகளில் பாடுபட்டு வருகின்றார். பத்திரிகை வாயிலாகவும் சொற்பொழிவு வாயிலாகவும் பல திறத்தொண்டுகள் நிகழ்த்தப் பெறுகின்றன. உணர்ச்சியைப் பரப்பிச் செயல் திறனை வளர்த்து நியாயக்கொள்கையை நிலைநாட்டுதற்கு மகாநாடுகளும் கூட்டப்படுகின்றன. பார்ப்பனக்கொடுமையை ஒழிக்கற்கு அது "கொடுமை" யானது எனும் உணர்ச்சி நம் மக்களிடையே தோன்றவேண்டும். அவ்வுணர்வே செயலுக்கு ஆதரவு அளிப்பது. செயலை வளர்ப்பதற்குப் பெரும் பிரசாரம்தேவை. எனவே பல வகையாகவும் பார்ப்பனரல்லாத தலைவர்கள் மும்முரமாக நாட்டில இது போழ்து பேருணர்ச்சியைப் பரப்பி வருகின்றார். இதற்குப் பிராமணரல்லாதார் பங்கம் விளைவித்தல், தன்கையைக்கொண்டு தன் கண்ணைக் குத்திக்கொள்ளுதலையே ஒக்கும். வகுப்பு உணர்ச்சியும், வகுப்பு மகாநாடும் அல்லாதாரும் வேண்டாமென்று விவாதம் புரிந்து, அல்லாதார் பொது இயக்கத்தை வெறுத்தல் ஒழுங்கன்று 'பெருந்தன்மை' எனும் போர்வையால் 'பிராமணக் கொடுமை' எனுங் கடியயை மறைத்தல் சூழ்ச்சியே!. பிராமணரல்லாதார் பொது இயக்கம் முழுவதும் வெற்றி பெறும் வரையில் கிளர்ச்சி நடைபெறல்வேண்டும். ஆகவே பிராமணரல்லாத அன்பர்கள் கண்விழிப்புடன் எச்சரிக்கையோடு இயக்கத்தை வளர்த்தலில் உலையா முயற்சி செய்தல்வேண்டும்.

சொற் போர்

பிராமணரல்லாதார் எனுஞ் சொற்றொடர் பொருளற்றதென்றும், பெருமையற்றதென்றும், பகரப்படுகின்றது. பிராமணரல்லாதார் என்பதற்குக்கொள்ளவேண்டிய பொருள், பிராமண சமூகத்தினர் தவிர்ந்த ஏனையோர் என்பதேயாகும். பிராமணத் தன்மையற்றவர் என்று பொருள் கோட[illegible] பொருந்த[illegible] முடையதன்று. பிராமணரல்லாதார் இயக்கத்தைப் பெற்றெடுத்து வளர்த்த பெரியோர்கள் பிராமணர் தவிர்ந்த ஏனையோரை ஒரு கூட்டமாக உணர்த்துதற்கே இப்பெயரை வழங்குவாராயினர். இப்பெயர[illegible] ஒரு பெயர் அமைத்துக் கோடல் [illegible] இருக்கின்றது. இப்பெயர் சரியன்று என வாதஞ் செய்யும் ஆராய்ச்சியாளர் ஆலோசிக்க. பிராமணர் தவிர்ந்த ஏனையோர் எனும் [illegible] ஒரு பெயர்தர முற்படுவராயின் [illegible]. அப்பெயர் ஆங்கிலத்தினை அடிப்படையாகக்கொண்டு எழுந்தது. ஒன்றிலிருந்து மாறுபட்ட பிறிதொன்றைக் குறிப்பிடும்பொழுது ஆங்கிலத்தில் அதைத் தவிர்த்து என்று கூறுவது மரபு. ஒத்துழைப்பாளரிலிருந்து, ஒத்துழையாதாரைப் பிரித்துரைக்கும்பொழுது, (Non-Co-operator) என்று கூறப்படுதலை நோக்குக. இவ்வாறே பிராமணர்தவிர்ந்த ஏனையோரை (Non-Brahmins) என்று வழங்கப்பட்டது. பல நூறு வகையான மதப்பிரிவுகளையும் பிணைத்து ஹிந்து மதம் என்று வழங்குவதைப்போல, பிராமணரினின்றும் வேறுபட்டுள்ள பல வேறு பிரிவினர்களையும் இணைத்துப் பிராமணரல்லாதார் என்னும் பெயரால் அழைக்கவேண்டியதாயிற்று. பிராமணக் கொடுமையினின்றும் விடுபடுவதற்கே, பிராமணரல்லாதார் எனும் பிரிவு தோன்றிற்று.

தமிழர் எனும் பெயர் போன்ற பிறபெயர்களைக் குறிப்பிட்டால் பிராமணரும் அப் பெயர்களுள் அடங்குகின்றார். திராவிடர் நியாய வாதிகள் என்னும் பெயர்கள் நிறைந்த உணர்ச்சியை எழுப்பக்கூடியவை அல்ல. பிராமணரல்லாதார் எனும் பெயரே பார்ப்பனக் கொடுமையை ஒழிக்கத்தக்க பேருணர்ச்சியை எழுப்புதற்குரியதாகவிருக்கின்றது. எனவே பார்ப்பனக் கொடுமையை விட்டொழிந்தோம் என்று கூறும அன்பர்—பிராமணர் உள்பட அனைவரும் தம்மைப் பிராமணரல்லாதார் என்று பெருமையுடன் கூறிக்கொள்ளுதலே ஏற்புடைத்தாகும், அல்லாதார் என்று பிரித்துரைத்தலைக் கேவலமாக நினைத்தல் தவறே. மேலும் சொற் போர் பெரிதன்று; காரியமே பெரிது. ஆதலால் அல்லாதார் எனுஞ் சொற்போரில் தலையிட்டுத் தமிழ்ப் பண்டிதர் முறையில் வீண் சண்டையிடுதல் இதுகாலை வேண்டற்பாலதன்று. சொற்போரில் முனைந்து நின்று காரியத்தை மறந்து கைநழுவவிடல் நகைப்பிற்கே இடமாகும். பார்ப்பனக் கொடுமையை ஒழிக்கும் செயல் முறையினையே நாம் இப்பொழுது யாண்டும் நடைபெறும்படி செய்தல வேண்டும்.

அல்லாதார் இயக்கத்தின் தேவை.

நாட்டில் பார்ப்பனக் கொடுமைகளை ஒழித்தற்கு ஒரு இயக்கம் அவசியம் தேவை. அவ்வியக்கத்தில் பிராமணர் தவிர்ந்த பிறரே உண்மை உள்ளத்தோடு சேர்ந்து உழைப்பர். பிராமணர் சேரார். சேர்ந்தாலும் பசுத்தோல் போர்த்த புலிபோல் பலவிதமான சூழ்ச்சிச் சட்டைகளை அணிந்துகொண்டு இயக்கத்தை அழித்துவிடுவர் சூழ்ச்சி செய்து வருதலே இவ்வளவு நாளாக நாட்டில் பார்ப்பனக் கொடுமை வெவ்வேறு வடிவத்துடன் புத்துருக்கொண்டு நிலைபெற்று வருவதற்குக் காரணம். எவ்வளவு எதிர்ப்பு வெள்ளம் கரைபுரண்டு வந்தாலும், சூழ்ச்சித் தெப்பத்தின் துணையால் மேலே மிதந்து தம்மைக் காப்பாற்றிக்கொண்டு, சாதிக்கொடுமை சமயக் கொடுமையைக் காவல் புரிகின்றார். புத்தர் பெருமானது சமதர்ம இயக்கம் பார்ப்பனர் சூழ்ச்சியால் அழிக்கப்பட்டது. இராமாநுஜர் அற இயக்கம் தேசிகரால் ஒழிக்கப்பட்டது. அவை பார்ப்பனரது பலத்தால் மட்டும் ஒழிக்கப்படவில்லை. பார்ப்பன மாயையில் பார்ப்பனரல்லாதார் ஈடுபட்டதினாலேயே அவ்வற இயக்கங்கள் தளர்ந்தன. இதுகாலை காந்தியடிகள் அவ்வியக்கத்தை வளர்த்து வருகின்றார். அதைப் பார்ப்பனர் பலர் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் பகைக்கின்றார். 'இப்பொழுது ஆசாரச் சீர்திருத்தமும் தேவையில்லை. சுயராஜ்யமே தேவை!" என்று சிலர் கூறி வீண் தர்க்கஞ்செய்து கெடுக்கின்றார். இவ்வாறு தப்பேசுவோரில் "ஊழியன் உதவியாசிரியர், திரு. வ. ராமசாமி ஐயங்காரும் ஒருவராவர். சுயராஜ்யத்திற்கு சமதர்ம இயக்கமாகிய ஆசாரச் சீர்திருத்தமும், சமய சீர்திருத்தமுமே அடிப்படை என்பதை ஒருவரும் மறந்துவிடல் கூடாது. அடிப்படையில்லாத கட்டிடம்

இடிந்து விழுந்துவிடுமன்றோ?

பார்ப்பனர் சூழ்ச்சி.

பார்ப்பனர் செய்யும் சூழ்ச்சிகளை நினைத்தால், நெஞ்சம் பெரிதும் துடிக்கின்றது. இலக்கியம் எனும் சட்டையை அணிந்துகொண்டு ஒருவர் பிராமணீயக் கொடுமையைப் பரப்புகிறார். அரசியல் அங்கி தாங்கிக்கொண்டு ஒருவர் அதனை மறைவாக ஒழிக்க நின்று வளர்க்கிறார். சமயப் போர்வை சாத்திக்கொண்டு பலர் வளர்ப்பது வெளிப்படை. சீர்திருத்தக் கவசமணிந்துகொண்டு சிலர் போற்றுகிறார். காங்கிரஸ் கஞ்சுகம் பூண்டு கொண்டு சிலர் காக்கிறார். இவ்வாறு பிராமணீயத்தைப் புதிய முறையிலும் பழைய முறையிலும் தென்னாட்டுப் பார்ப்பனர் பலர் போலிச்சட்டைகளை யணிந்துகொண்டு வெளிப்படையாகவும் மறைவாகவும் திறமையுடன் வளர்க்கின்றனர், பார்ப்பனரல்லாதாரோ பார்ப்பன மாயையில் அகப்பட்டுக்கொண்டு பரிதபிக்கின்றனர்.

பிராமணர் என்னும் தனித்த தீய உணர்ச்சியும், பிராமணக்கொடுமையை வளர்க்கும் எண்ணமும் உடைய பிராமணரே பலராவர். வெளியில் சமதர்ம இயக்கத்தைச் சார்ந்தவர் என்று சாற்றிக்கொண்டாலும் உள்ளே பார்ப்பன உணர்வுடையவரே பலராவர். பார்ப்பனர் வேறு வகை மதத்தினராகவும், சாதியினராகவும், பிரிவினராகவும் இருந்தாலும் பார்ப்பனீயத்தை வளர்த்தலில் ஒரு மனத்துடன் சேர்ந்துகொள்ளுகின்றார். இப்பொழுது எல்லோரும் பார்ப்பனீயப் பிரசாரத்தை வளர்த்து வருகின்றார். பார்ப்பன மகாநாடுகள் பல கூட்டப்பட்டு மூடவைதீகத்திற்கு ஆணியடிக்கப்படுகின்றது. யானை குதிரை, ஒட்டகை, பல்லக்கு விருதுகளுடன் பார்ப்பன ஆச்சாரியர்கள் பார்ப்பனக்கொடுமைகளுக்குப் பாதுகாவல் செய்து வருகிறார். பார்ப்பன பத்திரிகைகளும் பார்ப்பனீயத்திற்குத் துணைபுரிகின்றனர். பார்ப்பன உணர்ச்சி தடித்து வரும் நிலைமை நோக்கினால் அல்லாதார் உற்றிருக்கும் அடிமை நிலையைக் கருதினால் அல்லாதார் உணர்ச்சிமாயவேண்டும் என்று கூற நான் ஒரு நாளும் ஒருப்படேன்! ஒருப்படேன்!! காரியத்தில் கண்ணுள்ள யாரும் ஒருப்படார்.

பார்ப்பன உணர்ச்சி அடியோடு மாய்ந்த அன்றே பார்ப்பனர் அல்லாதார் என்னும் உணர்ச்சியை மாய்த்தல் கூடும், ஒரு வகுப்பு உணர்ச்சி நிலைபெற்றிருக்கும் வரை மற்றொரு வகுப்பு உணர்ச்சி எப்படி அகலும்? பெருந்தன்மை என்று மயங்கி மாறுபட்டு பிராமணரல்லாதார் என்னும் உணர்ச்சியை அல்லாதார் கொல்ல முயலுதல் நினைக்கொண்ணாத தவறாகும். பார்ப்பன உணர்ச்சி உரம் பெற்றிருக்குங்காலத்து, அல்லாதார் உணர்வை அழித்தல் அல்லாதார் முன்னேற்றத்தைத் தடுப்பதே. மேலும் பார்ப்பன உணர்ச்சிக்கு ஆக்கந்தருவதாகும். அல்லாதார் உணர்ச்சியைத் தீய முறையில் வளர்க்க வேண்டுமென்பது எனது கருத்தன்று. பொதுவாக வகுப்பு உணர்ச்சி மறைந்து தேசிய உணர்ச்சி தழைக்கவேண்டும் என்பதை நான் பெரிதும் போற்றுகின்றேன். ஆனால் வகுப்பு உணர்ச்சி எப்பொழுது எப்படித் தொலையும்? சமதர்மம் வளர்ந்தோங்கிய நாட்டில் முதலில் தீய வகுப்பு உணர்ச்சியை எழுப்பிப் பாதுகாத்து மக்களைப் பாழ்படுத்தி வரும் பிராமணரே அதைத் தொலைக்க முதற்கண் முந்துதல் வேண்டும். வகுப்பு உணர்ச்சி அறவே அழிதல் வேண்டுமானால், அன்னோர் வகுப்பு அடையாளங்களை அணிந்து கொள்ளுதலையும், பிறப்பால் உயர்வு தாழ்வு பேசுதலையும், அதனைச் செயலில் காட்டிப் பிரத்தியேக உரிமைகளை நிலைபெறச் செய்தலையும் அறவே விட்டொழித்தல் வேண்டும். "வகுப்பு உணர்ச்சி கூடாது பெருந்தன்மை வேண்டும்" என்று கூறும் அரசியல் பார்ப்பனர் ஏனோ பூநூல் சாத்திக்கொள்கின்றார். பிராமணீயம்! பிராமணீயம்!!

பிராமணரும் மனித நீர்மையினரே எனும் எண்ணம் யாவர் உளத்தினும் உரம் பெறுதல் வேண்டும். அன்றே மக்கள் அனைவரும் ஒரு குலம் எனும் உணர்வு அரும்பும். பிராமணரும் அல்லாதாரும் பிணைந்து பொது உணர்ச்சி பெறுவர். பிராமணர் அல்லாதாரெனும் பெயரை ஒரு சிலர் அவசரப்பட்டு விட்டு விட முயன்றாலும், பார்ப்பனக்கொடுமை நிலைபெற்றிருக்கும் வரையில் அவ்வுணர்ச்சியை மறந்து கைவிடுதல் என்பது அசாத்தியமே. பார்ப்பனரையும் சேர்த்துக்கொண்டு பார்ப்பனக் கொடுமைகளை ஒழித்தல் என்பது முயற்கொம்பே யாதலால் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் எனும் பிரிவு சமீபத்தில் ஒதுக்கித் தள்ளத்தக்கதன்று. அன்றியும் தென்னாட்டுப் பார்ப்பனரது வஞ்சக எண்ணத்தையும் சூழ்ச்சியையும் நோக்கினால் வெறும் விவாதத்தில் நீங்கும் என்று எண்ணுதற்கு இடமில்லை. அல்லாதாரின் தாழ்ந்த நிலையையும் பார்ப்பனர்களின் கொடுமைகளையும் நினைத்தால், அல்லாதார் இயக்கத்தில் தனிமையே இன்றியமையாது வேண்டற்பாலது என்பது இனிது புலனாகும். பிரிட்டானியத்திற்கு முன்னர் பார்ப்பனீயம் தொலைக்கப்படுதல் வேண்டுமாதலால், அல்லாதார் இயக்கம் இந்நாளில் பொது இயக்கம் இயைந்தமையன்றிச் செய்கையில் இப்பொழுது முடியாது. பார்ப்பன உணர்ச்சியும் உயர்வும்; கொடுமையும் தொலைந்த அன்றே பொது இயக்கம் அரும்புதல் கூடும்; இதுவே தக்க நீதியான துணிபாகும். அதுவரை அல்லாதார் உணர்ச்சியை நாம் வளர்க்கவேண்டுவதே.

"பைத்தியந் தீர்ந்தால் கல்யாணம் முடியும் கல்யாணம் முடிந்தால் பைத்தியந் தீரும்" எனும் பழமொழியின் கருத்தை ஒப்பவே பொது உணர்ச்சியின் நிலை இருக்கின்றது. பழைய பிராமண உணர்வு தொலைந்தால், புதிதாக எழுந்துள்ள பிராமணரல்லாதார் உணர்வு தானே தொலையும். அல்லாதார் உணர்வு வஞ்சகத்தால், உயர்வு கருதுதலால், கொடுமையால் எழுந்ததன்று; சமதர்மத்தை நிலைநாட்ட எழுந்ததேயாகும். எல்லாரும் அல்லாதாராகிவிட்டால், பொது உணர்ச்சி தானே தழைத்து ஓங்கும் உண்மை இவ்வாறாக முதலில் பார்ப்பன உணர்வைக் கொல்ல வழிதேடாது, அல்லாதார் நல்லுணர்வை—அறவியக்கத்தைக் கொலைக்க முயலுதல் தீதே.

வகுப்பு உணர்ச்சி, வகுப்பு மகாநாடு அல்லாதார் கூடாதென்று தத்துவம் பேசிப் பிராமணரல்லாதார் முன்னேற்றத்தைத் தடை செய்தல் தகாது. பார்ப்பனக்கொடுமைகளை ஒழிக்கற்குப் பாடுபடுவோரை இகழ்தல் ஆகாது. அக்கொடுமைகளை அகற்றுவதற்கு எழும் எல்லா முயற்சிகளைத்தான் நாம் தீவிரமாக ஆதரித்தல் வேண்டும். அரசியல் முறையில் ஆங்கிலேயரிடமிருந்து இந்தியாவை மீட்கவேண்டுவது எவ்வளவு அவசியமோ அவ்வளவு சமயம் சமூகம் ஆகியவற்றில் பார்ப்பனரிடமிருந்து இந்தியாவை முதலில் மீட்கவேண்டுவது இன்றியமையாததாகும். பார்ப்பனரிடமிருந்து விடுதலை பெற முயலும்பொழுது நேரிடும் இடையூறுகளையும் எதிர்ப்பையும் நோக்கும்போது விடுதலைக்கு வழிகாணாமையைக்கண்டு சீர்திருத்தக்காரர் கவலைகளைக்கருதும்பொழுது ஆங்கிலேயரிடமிருந்து சுயராஜ்யம் பெறுதல் எளிதென்று கூறலாம் போலிருக்கிறது. அவ்வளவு தூரம் பார்ப்பனக் கொடுமைகள் வேரூன்றி இருக்கின்றன.

பார்ப்பனருக்குப் பணி செய்யவே அல்லாதார் படைக்கப்பட்டனர் என்று துணிந்து பார்ப்பன நூல்கள் நுவலுதலை நினைக்கும் பொழுது, வாசகர்களே! உங்கள் நெஞ்சம் அடிக்கவில்லையா? உரிமைகளனைத்தும் பார்ப்பனருக்கே என்று எழுதிவைத்துச் செய்கையில் காட்டுதலையும் ஒரு குலத்திற்கு ஒரு நீதி உரைத்துப் பொய் நூல்களைக் கற்றல் கூடாது, சில இடங்களில் நூல்கள் வரைந்திருத்தலையும், சில நூல்களைக்கற்றல் கூடாது. சில இடங்களில் நுழைதல் கூடாது எனும் பலதிறக்கட்டுப்பாடுகளையும் நோக்கி நீங்கள் கண்ணீர் வடித்துக்கதறவேண்டாமா? பிராமணனைப் பூசிப்பதும் பொருள் கொடுப்பதும் தேவ திருப்தி என்று துணிந்து கூறுதலை என்னென்று சொல்லுவது! கொடுமை! கொடுமை!! நாட்டில் பார்ப்பனக்கொடுமையை ஒழித்தற்குரிய பேச்சே இப்பொழுது எழுந்து இருக்கின்றது. செயல் இன்னும் பரவவில்லை. எனவே முளையைக் கிள்ளிவிடல் கொடுமையினுங் கொடுமையே. பார்ப்பனக் கொடுமையை ஒழிக்கப் பாடுபட முன்வரும் பார்ப்பனரையே நாம் ஒருவாறு நல்லவர் என்று ஒப்புக்கொள்ளுதல் கூடும் மறைவாக வஞ்சனை வேலைபுரிந்து கொடுமைக்கு அரண் செய்வோரை நாம் நம்புதல் ஆகாது.

அல்லாதார் இயக்கத்தை வளர்ப்போரை, "ஊழியன்" ஆசிரியர் அறியாமையென்ற சொல்லால் அலங்கரித்தாலும். "அறிவிலி" என்று கூறுதலும் பொருத்தமற்றனவே. பிராமணரல்லாதார் முன்னேற்றத்தைப் பெரிதும் நாடுவதில் முனைந்து நின்ற பார்ப்பனரல்லாதார் பத்திரிகையாகிய ஊழியனும் ஊழியனாசிரியரும், இது காலை ஒருவாறு சிறிது மாறுபட்டு அவ்வியக்கத்திற்குத் துணைபுரிய மறுப்பது சரியன்று பெருவருத்தத்துடனேயே இம்மடலினை நான் எழுதத்துணிந்தேன். (குமரன்)

பா-ர் குறிப்பு:—

மாயவரம் மகாநாட்டைப்பற்றி ஊழியனில் குறை கூறி எழுதி இருந்ததை நாம் பார்த்தவுடன் அதற்கு மறுப்பு எழுத பேனாவைக் கையில் எடுத்து எழுத ஆரம்பித்தவுடன் கடுமொழிகளே உதயமாயின எவ்வளவு தூரம் பொறுமை காட்ட முயன்றும் பயன்படாததால் அது சமயம் எழுதுவதையே விட்டுவிட்டோம் ஏனெனில் ஊழியன் பத்திராதிபருக்கு பார்ப்பனரல்லாதார் இயக்கத்திடம் இவ்வளவு வெறுப்புத் தோன்ற நமக்கு காரணம் தோன்றாததாலும் அவரது உள்ளத்தைப் பற்றி இதுவரை நமக்கு யாதொரு சந்தேகமும் தோன்றாததாலும் ஊழியன் பத்திரிகை ஆலயத்தில் பார்ப்பன ஆதிக்கம் சற்று விளங்குவதாய் சரியாகவோ தப்பாகவோ தெரிந்ததினாலும் ஒரு சிறு குறிப்புமாத்திரம் எழுதி விட்டு இன்னமும் பார்க்கலாம் என்றுவிட்டுவிட்டோம். இப்போது அதற்கு மறுப்பாக இனிக்க பாஷையில் மிகப்பொருத்தமான பொருளில் வெகு பொறுமையாக ஸ்ரீமான் அரு. சோமசுந்தரம் அவர்களால் ஒரு அழகிய சமாதானம் "குமரன்" பத்திரிகையில் கண்டதால் அதை மிகவும் ஆவலுடன் இதில் பிரசுரித்தோம். பா-ர்

தேவை.

குடி அரசை சென்னையில் விற்பனை செய்யவும், சந்தாதாரர்கள் சேர்க்கவும் ஒரு ஏஜண்டு தேவை. விருப்பமுள்ளவர்கள் 100 ரூபாய் டிபாசிட்டுடன் ஜூன் மாதம் 5 தேதிக்குள் மனுச் செய்து கொள்ளலாம். விபரத்துக்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதி தெரிந்து கொள்ளலாம்,

மானேஜர், குடி அரசு ஈரோடு



குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஞு வைகாசி-மீ 16-உ.

காங்கிரஸ் பைத்தியமும் பொய்மான் வேட்டையும்.

கோயமுத்தூரில் நடக்கப் போகும் கோயமுத்தூர் ஜில்லா பார்ப்பனரல்லாதார் மகாநாட்டை தென் இந்திய பார்ப்பனரல்லாதார் மகாநாடாக நடத்த வேண்டும் என்பதாக சில ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் விரும்பியதால் கோயமுத்தூர் ஜில்லா மகாநாட்டு வரவேற்பு சபையாரும் அதற்கு இம்மாதம் 25 தேதி ஒரு மீட்டிங்கு கூட்டித் தென் இந்திய பார்ப்பனரல்லாதார் சங்க நிர்வாக சபை அனுமதியையே தீர்மானித்து வேண்டிக் கொண்டால் அந்தப்படிக்கே தங்களது மகாநாட்டை மாகாண பார்ப்பனரல்லாதார் மகாநாடாக நடத்துவதாகத் தீர்மானமும் செய்தாய்விட்டது. இதன் பலனாக ஜூன் 11, 12, தேதிகளில் கூட்டுவதாய் இருந்த மகாநாடு மறுபடியும் தேதிமாறினாலும் மாறலாம்.

ஜில்லா மகாநாட்டை மாகாண மகாநாடாக மாற்ற வேண்டிய அவசியம் என்ன என்பதைப்பற்றி நண்பர்கள் கூறலாம் அதற்குநாம் ஒரே பதிலளிக்கிறோம் காங்கிரஸ் பைத்தியமும் பொய் மான்வேட்டையுமே தான் காரணம் அதாவது.

ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த சில கனவான்களுக்கு காங்கிரஸினிடத்தில் பைத்தியம் ஏற்பட்டிருப்பதும் காங்கிரஸிலுள்ள பல கனவான்களுக்கு ஜஸ்டிஸ் கட்சியில் சேர வேண்டும் என்கிற எண்ணமும் தான் இச் ஜில்லா மகா நாட்டை மாகாணமாக நடக்கப்போகிறது.

இங்கு காங்கிரஸிலுள்ள கனவான்கள் ஜஸ்டிஸ் கட்சியில் சேருவது நமது இயக்கத்திற்கு இன்னும் நல்ல காலமென்றே சொல்லுவோம். அவர்களை மனப்பூர்வமாய் வரவேற்போம் அப்படி அவர்கள் வந்து சேருவதற்கு இடையூறாக நம்மிடம் என்னென்ன குற்றங்கள் இருக்கிறதாகச் சொல்லுகிறார்களோ அவைகளையெல்லாம் விலக்க நம்மாலானவரை முயற்சி செய்வோம். இன்னமும் நம்மீது யாருக்காவது மனவருத்த மிருந்தாலும் மன்னிப்புக் கேட்கவும் பின்வாங்கோம். ஏனெனில் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றமடைவதற்கும் அவர்கள் சுயமரியாதை அடைவதற்கும் எந்த விதத்திலானாலும் எல்லா பார்ப்பனரல்லாதாரும் ஒன்று கூடினால் தான் எதிர்பார்க்கும் பலன் முழுவதும் அடைய முடியும் என்கிற முடிவான கருத்தை நாம் உடையவர்களானதால் இந்நிலையில் நாம் வலிய அழைக்கக்கடமைப்பட்டிருக்கிறோம் ஆனால் காங்கிரசில் ஜஸ்டிஸ் கட்சியார் எல்லோரும் போய்சேரவேண்டுமென்பதையோ பார்ப்பனரல்லாதார் எல்லோரும் போய்ச் சேரவேண்டுமென்பதையோ நாம் ஆதரிக்க முடியாததற்கு வருந்துகிறோம். ஏனெனில்காங்கிரசைப்பற்றி இதற்கு முன் பல தடவைகளில் "குடி அரசு"ல் எழுதியும் அநேககூட்டங்களில் பேசியும்வந்திருக்கிறோம். அதற்கு நாளது வரையாரும் பதில் சொல்லவேயில்லை.

காங்கிரசினால் தான் வெள்ளைக்கார ஆட்சியோ அதிகார வர்க்க ஆட்சியோ அன்னிய ஆட்சியோ எதுவோ அதாவது நமது நாட்டிற்கு அனுகூலமில்லாத ஆட்சி பலப்பட்டு நடைபெற்று வருகிறது என்பதும், காங்கிரசினாலேயே தான் மக்கள் ஒற்றுமை இழந்து [illegible] அரசாட்சியைத் தாங்கள் போட்டிபோட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதும், காங்கிரசினாலே தான் நம் நாட்டு தொழில்கள் கெட்டு தொழிலாளிகள் கஷ்டப்படுகிறார்கள் என்பதும், வருஷம் ஒன்றுக்கு 10 லட்சக்கணக்கான தொழிலாளர்கள் நம்நாட்டை விட்டு வெளியில் கூலிகளாக போய்க்கொண்டிருக்கிறார்கள் என்பதும், காங்கிரசினாலேதான் உத்தியோகங்கள் பெருகுகிறது என்பதும், காங்கிரசினாலே தான் அவ்வுத்தியோகங்களுக்கு உலகத்தில் எங்குமே இல்லாத கொள்ளை சம்பளம் அதாவது மாதம் 1000, 2000, 5000, 6000, 10000, போல் ஏற்பட்டதும் வக்கீல்கள் பெருகுவதும் மாதம் 1000, 10000, 2000, 50000 வீதம் ஏழை மக்களின் பணத்தை கொள்ளை அடிக்க ஏற்பட்டதும் ஏழை குடிகள் தலையிலும் வியாபாரிகள் தலையிலும் தாங்க முடியாத வரிகள் ஏற்பட்டதும், பணக்காரர்கள் மேல் மேல் பணக்காரர்களாகவும் ஏழைகள் மேல் மேல் ஏழைகளாகவும், தேசத்தின் பெரும்பான்மையான மக்கள் தரித்திரத்தினால் மானம் கற்பு சுயமரியாதை மனச்சாட்சி இவைகளை விற்று வாழும்படி ஏற்பட்டதும், காங்கிரசினால் தான் என்பது நமது உறுதியான அபிப்பிராயம். இதை எங்கு வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் சொல்லவும் மெய்ப்பிக்கவும் தயாராயிருக்கிறோம் இப்படிப்பட்ட இன்னல்கள் விளைவிக்கும் ஒரு ஸ்தாபனத்தை தேசாபிவிருத்தியில் கவலையுள்ளவர்களும் ஏழைமக்களிடத்தில் அன்புள்ளவர்களும் ஒழித்து நன்மை பயக்கத்தக்க இயக்கத்தில் சேர்ந்து உழைக்க வேண்டுமே அல்லாது அதில் நாங்களும் போய்சேருகிறோம் என்பதும் நீங்களும் வாருங்கள் என்று மற்றவர்களை கூப்பிடுவதும் கொடும்பாதகமென்பதே நமது கருத்து. என்றாலும், அரசியலை வாழ்வாய்க்கொண்டவர்களும் ஆங்கிலம்படித்தவர்களும் எவ்வளவு-தான் பரிசுத்தமான எண்ணமுடையவர்களாயிருந்த போதிலும் காங்கிரஸ் படுகுழியில் விழாமல் தப்புவிக்க முடியவே முடியாது. ஏனெனில் அரசியல் வாழ்வுகாரர்கள் பாமரமக்களை ஏமாற்ற சர்க்காரை வைய வேண்டும். ஆங்கிலம்படித்தவர்கள் பெரும் பெரும் பதவி உத்தியோகம் முதலியதுகளை பெற வேண்டும். இவ்விரண்டுக்கும் இது சமயம் நமது நாட்டில் காங்கிரசைவிட வேறு இயக்கம் கிடையாது. ஆதலால் அவர்கள் காங்கிரசை விட முடியாது என்பதையாவரும் ஒப்புக்கொண்டுதானாக வேண்டும்.

இதுசமயம் காங்கிரசுக்கு நமது நாட்டில் இழிவு ஏற்பட்டுவிட்டதாலும், காங்கிரஸ் நாம் மேற்கூறிய இவ்வளவு இன்னல்களுக்கும் காரணமாயிருப்பதையும், சமீபத்தில்பம்பாய் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி நடவடிக்கைகளைப்பார்த்தபிறகு காங்கிரஸ் பார்ப்பனரல்லாருக்குவிரோதமானதும், பார்ப்பன ஆதிக்கத்திற்கு அனுகூலமானஸ்தாபனம என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளவேண்டி ஏற்பட்டதாலும், காங்கிரசானது பார்ப்பனரல்லாதாரை நசுக்கவே பார்ப்பனர்கள் உபயோகித்துக்கொண்டிருக்கும் ஆயுதம் என்பதையாவருக்குந்தெரிந்துவிட்டதாலும், அதிலிருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கு ஏதாவது ஒரு சமாதானம் கண்டுபிடிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. அதனாலேயே அவர்கள் "பார்ப்பனரல்லாதாரில் முக்கியமாயுள்ளவர்கள் காங்கிரசை விட்டுவிட்டால் ஒரு சிறிய கூட்டத்தார் பெரும்பான்மையாராகி அதில் ஆதிக்கம்பெற்று பார்ப்பனரல்லாதாருக்கு விரோதம் செய்கிறார்கள். ஆதலில்பார்ப்பனரலாதார் பெரும்பான்மையாகிவிட்டால் அவர்களது ஆதிக்கம் காங்கிரசில் குறைந்துவிடும். பிறகு நமக்கு சுயராஜ்யம் வந்துவிடும்" என்கிறார்கள். இது வாலறுந்த நரி கதையே தவிர வேறல்ல. ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள சில ஆங்கிலங்கற்ற பிரமுகர்களோ "நாம் நமது மகாணத்துக்குள் எவ்வளவுதான் செல்வாக்கு பெற்றிருந்தாலும் காங்கிரசின்மூலம் நமது நாட்டுப் பார்ப்பனர்கள் வெளி மாகாணங்களின் மூலமாக தங்களுக்கு அனுகூலம் தேடிக்கொள்ளுகிறார்கள். இப்போது பார்ப்பனர்களால் நமக்கு ஏற்படும் உபத்திரவங்களில் பெரும்பாகம் காங்கிரசினால் தான் ஏற்படுகிறது. ஆதலால் அதை நாம் கைப்பற்றிக்கொண்டால் அதாவது அவர்களிடமிருந்து நாம் பிடுங்கிக்கொண்டால் நமக்கும் உபத்திரவம் செய்ய அவர்களுக்கு வேறு ஆயுதம்இல்லாமல் போய்விடும்" என்பதாக சொல்லுவதோடு "இப்பார்ப்பனர்களின் யோக்கியதையை வெளி மாகாணங்களிலும் போய்ச்சொல்லசௌகரியமாயிருக்கும்" என்றும் சொல்லுகிறார்கள். இது கொக்கு தலையில் வெண்ணை வைத்து அது உருகி கண்ணுக்கு வந்து கண் தெரியாமல் போகும்போது பிடித்துக்கொள்ளலாம் என்பதுபோல் இருக்கிறது.

மற்றொரு கூட்டத்தார் அதாவது காங்கிரசில் ஒருகாலும் ஜஸ்டிஸ் கட்சியில் ஒருகாலும் வைத்திருக்கிறவர்கள் "இப்பொழுது தானே இந்த காங்கிரஸ் இப்படி தேசத்துக்கும் சமூகத்திற்கும் துரோகம் செய்கிற ஸ்தாபனமாகிவிட்டது இதுவரையில் தேசத்திற்கு எத்தனையோ நன்மை செய்திருக்கிறது ஆதலால் அதைக் கைப்பற்றி முன்போல செய்யவேண்டும்" என்கிறார்கள். இது முழு மோசமானதென்றே சொல்லலாம். ஆகவே இம்மூன்று வாதங்களும் கொஞ்சமும் பொருத்தமானதல்ல.

முதலாவது காங்கிரசை எந்தக்காரணம் கொண்டும் நம்மால்கைப்பற்றமுடியவேமுடி

யாதுமகாத்மா காலத்திலும் காங்கிரஸ் பார்ப்பனர்கள் வசம்தான் இருந்தது. ஆனால் நம்மை முன்னால் இருத்தி வேலை வாங்கிக் கொண்டு வந்தார்கள். இப்போதும் காங்கிரஸ் நம்மவர்களுக்கு வரவேண்டுமானால் பார்ப்பனர்கள் சொல்படி நடந்தால் உடனே வந்துவிடும். மற்றபடி அவர்கள் நன்மைக்கல்லாமல் நாம் கைப்பற்றுவதானால் முடியவே முடியாத காரியம் என்பது நமது அபிப்பிராயம். ஏனெனில் காங்கிரஸை கைப்பற்ற நமக்கு பார்ப்பனர்களுக்கு ஆள்கள் கிடைப்பதுபோல நாமும் விசேஷ பணம் செலவுசெய்து ஆள்களைச் சேர்த்துக் கொண்டு காலித்தனத்திற்கு தயாராயிருக்க வேண்டும். பார்ப்பனர்கள் செலவு செய்யும் பணமும் அவர்கள் பேச்சைக்கேட்டு காலித்தனம் செய்யும் ஆள்களும் அவர்களுடையது அல்ல, நம்ம பணங்கள்தான், நம்ம ஆள்கள்தான். அதாவது நமது பண்டாரச் சன்னதிகள், ஜமீன்தார்கள், பெரியபெரிய மிராசுதாரர்கள் முதலியவர்களைத் தங்கள் அதிகார பலத்தால் மிரட்டி பணம் பெற்றுவிடுகிறார்கள். அதைக்கொண்டு நம்மவர்களுக்கே கொடுத்து நம்மவர்களையே பிடித்து நம்மை வையச்சொல்லவும் காலித்தனம் செய்து அடிக்கச் சொல்லவும் அடிபடவும் வசவு கேட்கவும் செய்விக்கிறார்கள். அன்றியும் சிம்மாஜிரி சபையில் பலர் காங்கிரஸை கைப்பற்றவேண்டும் என்று பேசிக்கொண்டிருப்பதைக் கேள்விப்பட்டவுடன் காங்கிரஸ் வரவேற்பு கமிட்டி அக்கிராசனர் வேலையை 45000 ரூபாய்க்கு ஒரு அய்யங்கார் பார்ப்பனருக்கு விற்றுவிட்டதாகவும் அந்த அய்யங்கார் பார்ப்பனர் அந்த 45 ஆயிரம் ரூபாயையும் 2, 3 மடாதிபதிகளிடமும் இரண்டொரு மகந்துக்களிடமும் வாங்கிக் கொடுக்க தீர்மானித்துவிட்டதாகவும் சென்னையில் பலமான வதந்தி உலாவுகிறது. இதற்கு நாம் செலவு செய்ய பணம் யாரிடமிருக்கிறது. நமக்கு எந்த மடாதிபதி கொடுக்க முடியும். தவிர நம்மவர்களையே பிடித்து நம்முடன் கலகம் செய்யத் தூண்டிவிட்டால் நாம் அவர்களுக்கு பணம் கொடுத்து சரிசெய்ய நம்மால் முடியுமா? தவிர ஸ்ரீமான்களான ஒரு ஒ. கே. செட்டியாரையும், ஒரு நாயுடுவையும், ஒரு முதலியாரையும் ஒரு நாயக்கரையும் ஒரு பிள்ளையையும் ஒரு குழந்தையையும் ஒரு பாவலரையும் ஒரு சாப்புவையும் நாம வசப்படுத்திக்கொண்டால் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கு வேறு நாயுடு, முதலியார், செட்டியார், நாயக்கர், பிள்ளை, பாவலர், சாப்பு கிடைக்கமாட்டார்களா? இப்படி எத்தனை பேரை வசப்படுத்த எவ்வளவு ரூபாய் செலவுசெய்து எத்தனை காலித்தனங்களுக்கு நாம் தலை கொடுப்பது? இவ்வளவும் செய்தாலும் இந்த விஷயங்கள் தெரிந்தே சமீபத்தில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் ஒரு தீர்மானம் போட்டுக்கொண்டிருக்கிறார்களே அதற்கு என்ன செய்வது? அதாவது "ஒரு ஊரில் இரண்டு காங்கிரஸ் கமிட்டி ஏற்பட்டு விட்டால் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் எதை ஒப்புக் கொள்ளுகிறார்களோ அதுதான் செல்லுபடி உள்ளது மற்றது தள்ளிவிடத்தக்கது, என்று" செய்துகொண்டிருக்கிறார்களே அதற்கு நாம் என்ன செய்யமுடியும். ஏதோ ஒரு அன்னக்காவடியைப் பிடித்து ஒரு அய்யர் பிரசிடெண்டு ஒரு ஐயங்கார் காரியதரிசி 2, 3 சோணகிரிகள் நிர்வாக மெம்பர்கள் என்று கடிதத்தில் எழுதிக் கொண்டால் அதைதான் காரியக் கமிட்டி ஏற்றுக்கொள்ளுமே தவிர இங்கு நாம் எவ்வளவு தான் ஒழுங்காய் வேலை செய்து ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடு பிரசிடெண்டு, ஆர். கே. ஷண்முகம் செட்டியார் காரியதரிசி, பனக்கால் ராஜா, கலியாண சுந்தர முதலியார், ராமசாமி நாயக்கர், நிர்வாகசபை மெம்பர்கள் என்று சொன்னாலும் அதை ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்காரோ சத்தியமூர்த்தியோ பார்த்து காரியக் கமிட்டியால் குப்பைத்தொட்டியில் போடச் செய்யவேண்டுமானால் அரைநிமிஷ நேரத்தில் முடியும். அப்படித்தான் ஜில்லா காங்கிரஸிலும் அகில இந்திய காங்கிரஸ் காரியக்கமிட்டி இதுகளிலும் நம்மால் என்ன செய்யமுடியும். [illegible] பம்பாயில் ஸ்ரீமான் முத்தைய முதலியார் கொஞ்சம் போனதற்கு தன்னாலானவரை பாடுபட்டும் கடன் வாங்கிப் பார்த்தும் முடியாமல் முக்காடு போட்டுக்கொண்டு சென்னை வந்து சேர்ந்தார். அதற்குமேல் யார் என்ன செய்துவிட முடியும்? எப்படியும் அகில இந்தியத் தலைவர் பார்ப்பனராகவோ அல்லது ஸ்ரீமான் தாஸ் போன்ற விபீஷணர்களாகவோ தான் இருக்க முடியும். அப்படி எல்லாம் கஷ்டப்பட்டும் அதை பிடித்துவிட்டாலும் அதனுடன் மாரடிக்கவும் அதை மறுபடியும் பார்ப்பனர்கள் கைப்பற்றியிருக்கப் பாடுபடவும் அந்த வேலை நமக்குச் சரியாய் இருக்குமே ஒழிய அதை விட்டாவது நமக்கு நாட்டிற்கோ சமூகத்திற்கோ வேலை செய்ய கொஞ்சமும் ஓய்வு இருக்காது அப்படிதான் ஓய்வு இருந்தாலும் நமக்கு வேண்டிய திட்டங்களை எல்லாம் இந்திய காங்கிரஸில் புகுத்த முடியாது. ஆகவே இவ்வளவு கஷ்டங்கள் காங்கிரஸில் இருப்பதை யோசித்துப்பார்த்தால் யாருக்கும் விளங்காமல் போகாது.

ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு எல்லோரும் வாருங்கள் காங்கிரஸில் சேருங்கள் என்று பார்ப்பனரல்லாதாரை கூவி அழைத்தவுடன் பார்ப்பன மித்திரனுக்கும் பார்ப்பன சுயராஜ்யாவுக்கும் எவ்வளவு ஆத்திரம் வந்துவிட்டது என்பதைப் பாருங்கள் மித்திரன் "ஸ்ரீ வரதராஜுலு நாயுடு பேச்சை கேட்டு பார்ப்பனரல்லாதார்களே கெட்டுப் போய் விடாதீர்கள்" என்று புத்தி சொல்லுகிறான். மற்றொருவன் காங்கிரசுக்கு ஆபத்து வந்து விட்டது போல் ஆத்திரப்படுகிறான். ஆகவே காங்கிரசு பார்ப்பனர்கள் வீட்டு சொத்தாய் இருந்து அவர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்து வந்திருக்கிறது என்பது நமக்கு விளங்கவில்லையா? நாம் ஏன் அங்கு போகவேண்டும். நமக்கு ஒரு சொத்து தேடிக்கொள்ள முடியாதா இப்பொழுது காங்கிரசின் பூராயோக்கியதையும் வெளிப்பட்டு உலகத்தாரால் அவமதிக்கப் பட்டுக்கூடிய சீக்கிரத்தில் சாகப் போகும் ஒரு ஸ்தாபனத்திற்கு நாம் போய் உயிர் கொடுத்து அதற்கு போக்கியதை உண்டாக்கி ப்பார்ப்பனர்கள் கையில் ஒப்படைத்துவிட்டுவரவேண்டுமா? ஸ்ரீமான் நாயக்கர், சொம்பையும் மூட்டையையும் தூக்கிக்கொண்டு காலை ஒரு ஊர் பகல் ஒரு ஊர் மாலை ஒரு ஊர் படுக்கை ஒரு ஊராகத் திரிந்து காங்கிரசுக்கு உழைத்த உழைப்பு இன்று என்ன ஆச்சுது. ஸ்ரீமான் முதலியார் தொண்டை கிழியக் கத்தி காங்கிரசுக்கு உழைத்தது இன்று என்ன ஆச்சுது. ஸ்ரீமான் நாயுடு ஜஸ்டிஸ் கட்சியை கொலை செய்து காங்கிரசுக்கு வீரகண்டாமணி கட்டியது இன்று என்ன ஆச்சுது. "தென்னாட்டுத் திலகரை (ஸ்ரீ நாயுடுவை) காங்கிரசை விட்டு துரத்த வேண்டும், மாரிசனை (ஸ்ரீ முதலியாரை) காங்கிரசை விட்டு வெளியாக்க வேண்டும், நாயக்கரை ஜெயிலில் பிடித்து அடைக்கவேண்டும் என்று சொன்னவரைத்தானே காங்கிரசு தனக்கு தலைவராகவும் கொண்டதுவே அதனிடத்தில் நாட்டுக்கோ மக்களுக்கோ சமூகத்திற்கோ இருக்கும் நன்மையோ நாணயமோ இன்னது என்பது நமக்கு விளங்கவில்லை ஆனபோதிலும் ஜஸ்டிஸ் கட்சியில் வந்து சேருவதற்கு காங்கிரஸில் இருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கு தடையாக ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு 25 தேதி தந்தியில் கண்ட காரணமாகிய இரண்டு மாத்திரமே அதாவது "ஜஸ்டிஸ்காரர்கள் காங்கிரஸ் விவகாரங்களை எதிர்க்கக்கூடாது" என்பதும் "பார்ப்பனரல்லாதார்கள் தங்கள் சொந்த ஹோதாவில் காங்கிரஸில் சேர அனுமதியளிக்க வேண்டும்" என்பதுகளே ஆக்ஷேபனைகளாயிருக்குமானால் அவைகளைப்பற்றி நமக்கு தோன்றியதை சொல்லுகிறோம். இரண்டாவது விஷயத்தைப்பற்றி நமக்கு ஆக்ஷேபனை இல்லை சொந்த ஹோதாவில் காங்கிரஸில் சேருகிறவர்கள் சேர்ந்து கொள்ளட்டும். முதலாவது விஷயமாகிய அதாவது 'காங்கிரஸ் விவகாரங்களை ஜஸ்டிஸ்காரர்கள் எதிர்க்கக்கூடாது என்று சொல்லுவது நியாயமாகுமா? நேற்று பம்பாயில் கூடிய கூட்டத்தின் நடவடிக்கைகளை இப்போது ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு முதல் உலகமே எதிர்க்கிறதே, கயா தீர்மானங்களை தேசபந்துதாஸ் எதிர்க்கவில்லையா? காங்கிரசு குட்டுகளை ஜனங்களுக்கு வெளிப்படுத்தவேண்டாமா? காங்கிரசு தேவஸ்தான ஆக்டை எதிர்த்தால் ஜஸ்டிஸ்காரர்கள் சும்மா இருக்கவேண்டியதா? காங்கிரசு சர்க்காரை ஆதரித்தால் ஜஸ்டிஸ்காரர்கள் சும்மா இருக்கவேண்டியதா? காங்கிரஸ் இப்போதைய மந்திரிகளை ஆதரிக்க அ. இ. கா. கமிட்டி உத்தரவு பெற்று வந்துவிட்டதால் ஜஸ்டிஸ் கட்சியும் ஸ்ரீமான் சுப்பராய மந்திரியை எதிர்க்கக்கூடாதா ஆதரிக்க வேண்டியதுதானா? என்பதுகளை யோசித்துப்பார்த்தால் இது எவ்வளவு கொடுமையான அடக்க முறை என்பது விளங்காமல் போகாது இதுவரை காங்கிரஸ் எத்தனை குட்டிக்கரணங்கள் போட்டு வந்திருக்கிறது என்பது யாருக்கும் தெரியாதா? ஆதலால் முதலாவது நிபந்தனை நீக்கி இரண்டாவது நிபந்தனையே ஒப்புக்கொள்ள ஜஸ்டிஸ்கட்சிக்கு ஆக்ஷேபனை இருக்காது என்றே எண்ணுகிறோம். மற்றபடி நமக்கு சொந்தத்தில் அதைப்பற்றி அதிகமான கவலை கிடையாது ஏனெனில் நாம் காங்கிரஸ் அரசியல் விவகாரங்களைபபற்

அறிவிப்பு.

வெளியூர்களில் இருந்து வந்து கோயமுத்தூரிலுள்ள பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் மாணவர்களின் சௌகரியத்திற்காக கோயமுத்தூர் ஜில்லா போர்டு ஹாஸ்டல் என்பதாக சாப்பாட்டு விடுதி ஒன்று கோயமுத்தூரில் ஜூன் மாதம் 10 தேதிக்குள் ஜில்லா போர்டாரால் ஏற்பாடு செய்யப்படும். அதில் ஏற்படும் செலவுகளை எல்லா மாணவர்களிடமிருந்தும் விகிதாசாரம் வசூலிக்கப்படும். அதில் சேர பிரியமுள்ள மாணவர் அடுத்த ஜூன் மாதம் 5 தேதிக்குள்ளாக கோயமுத்தூர் ஜில்லா போர்டு பிரசிடெண்டுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். ஒரு ஹாஸ்டலுக்கு தேவையான மாணவர்கள் சேராத பக்ஷம் ஹாஸ்டல் திறக்கப்படமாட்டாது.

கோயமுத்தூர் ஜில்லா போர்டு ஆபீஸ், 24—5—27 } C. S. இரத்தினசபாபதி முதலியார், பிரசிடெண்டு.

றியும் ஜஸ்டிஸ் அரசியல் விவகாரங்களைப் பற்றியும் நம்பிக்கையே கிடையாது. இரண்டின் அரசியல் விவகாரங்களையும் பாட்டுஎன்றும் பாமர ஜனங்களையும் ஏமாற்றி உத்தியோகம் சம்பாதிக்கும் வழி என்றே நமது தேசாபிமானம் நிர்மாணத்திட்டம் தான். நமது அரசியல் விவகாரம் எல்லா மக்களுக்கும் சரிசமயமாய் அரசாங்க பதவி உத்தியோகத்தில் உரிமை கிடைக்கவேண்டும் என்பதுதான் நமது ஜீவகாருண்ணிய முப்பரோபகாரமும் சுயமரியாதைதான். ஆதலால் மற்றவைகளைப் பற்றி நமக்கு கவலையில்லை மால் ராஜிகெட்டுப்போய் விட்டது என்கிற பெயர் வேண்டியதில்லை. ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவின் நிபந்தனைகளைப்பற்றி யோசிப்பவர்கள் நமமைப்பற்றி யாருயநினைக்கவேண்டியதில்லை. யார் எப்படித் தீர்மானம் செய்து கொண்டாலும் மேற் குறித்த நமது கொள்கைகளை நிறைவேற்றும் விஷயத்தில் யார் யார் உதவி செய்யக்கூடும் என்று தோன்றினாலும் அவர்கள் எந்த கட்சியை சேர்ந்தவர்களானாலும் அவர்களுடன் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறோம்.

நமது மேற்கண்ட கொள்கைகளுக்கு யார் யார் எதிராயிருந்தாலும் அவர்கள் எந்த கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் அவர்களை எதிர்க்கத் தயாராகவும் இருக்கிறோம் என்பதை பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒரு சமாதானம்.

சென்ற வாரம் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு தமது பத்திரிகையில் நாயக்கரின் நய வஞ்சகம் என்று எழுதிய விஷயங்களுக்குப் பதிலாக ஸ்ரீவரதராஜுலுவின் வண்டவாளம் என்னும் தலைப்பின் கீழ் சில விஷயங்களை அதாவது அதில் பல கனவான்கள் எழுதியதாக எழுதப்பட்டிருந்த கடிதங்களுக்குச் சமாதானமாகவும் ஸ்ரீமான் நாயுடுவாலேயே நாயக்கருக்கு கொஞ்சகாலத்திற்கு முன் எழுதியதாக காட்டப்பட்டிருந்த கடிதத்திற்கும் சமாதானமாகவும், அடுத்த வாரம் எழுதுவதாக பதில் எழுதியிருந்தோம். அதை உத்தேசித்து அநேக கனவான்கள் நமக்கு பலவிதமான கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். அதாவது நாம் எழுதப்போகும் பதிலுக்கு மேலும் மேலும் தக்க ஆதாரங்களாக சிற்சில விஷயங்களைக் குறித்து அனுப்பி இருப்பதும், பல நாயுடுவைத் தங்கள் தங்கள் இஷ்டப்படி கண்டித்து நாயுடுவுக்கு பதில் என்கிற முறையில் எழுதி பல கடிதங்களும்; இவ்விதம இருவர் சண்டைபோட்டுக்கொள்வது ஒழுங்கல்ல வென்கிற முறையில் சிற் சில கடிதங்களும் இந்த விஷயத்தைப் பற்றி நாம் சென்ற வாரம் எழுதினதுபோல் இவ்வாரம் எழுதிப் பிரசுரிக்கப் போகும் பத்திரிகையில் சுமார் 250 பத்திரிகை வரையில் அதிகமாக அனுப்பிக் கொடுக்கும்படி பல கடிதங்களும் வந்திருக்கின்றன. இவ்வளவும் நாம் இவ்வாரத்தில் பிரசுரிக்கப்போகும் பதில்களுடன் சேர்ந்து பிரசுரிக்கவே வந்திருக்கின்றன. நாமும் சென்ற வாரம் எழுதியதுபோலவே நமக்குக் கிடைத்துள்ள ஆதாரங்களைக்கொண்டுமனப்பூர்வமாய் நாம் சரி என்று எண்ணுவதையும் கொண்டு ஒரு விரிவான வியாசம் எழுதலாமென்று தான் இருந்தோம். ஆனால் நமது மதிப்புக்கும், மரியாதைக்கும் உரியவரும் உண்மையான நண்பர் என்று எண்ணிக் கொண்டிருப்பவருமான ஒரு கனவான் இவ்விஷயத்தில் மிகுதியும் சிரமம் எடுத்துக்கொண்டு சில நிபந்தனைகளின் பேரில் விவாதத்தை இத்துடன் நிறுத்திவிட வேண்டுமென்று கட்டாயப்படுத்தினார். எறக்குறைய அவர் எடுத்துக்காட்டிய நிபந்தனைகளானது நமது பிற்கால பிரயத்தனங்களுக்கு கெடுதியில்லாததாகவும் அநுகூலத்தைக் கொடுக்கக் கூடியதாகவும் இருந்ததோடு அந் நிபந்தனைகள் நிறைவேற்ற அவரே பொறுப்பேற்றுக்கொண்டதினாலும் ஸ்ரீலஸ்ரீ கைவல்யசாமிகள் முதல் பல பெரியார்கள் இது விஷயமாக நமக்கு எழுதியிருப்பவைகளுக்கிசைந்து ஒருவாறு நிறுத்திக்கொண்டு இருக்கிறோம். இப்படி நாம் எழுதியிருப்பதானது அநேகருக்கு ஏமாற்றத்தைக் கொடுக்குமென்பது நமக்குத் தெரியும். ஆனாலும் ஏமாற்றமடைந்தவர்களில் பலருக்கும் நமக்கும் ஒரு குறிப்பிட்ட லட்சியத்தினிடத்திலே தான் அதிக கவலையும் மதிப்புமே தவிர சண்டையும், அவசியமில்லா வீரியமும் பெரிதல்ல. இது விஷயமாக வந்த பல கடிதங்களை இச்சமயம் போடாததற்கு நிருப நேயர்கள் மன்னிக்கவேண்டும். இதற்குமேல் விரிவான சமாதானத்தை விரும்புகின்றவர்களுக்கு சேரம்புத்தூர் மகாநாட்டுக்குப் பிறகு தெளிக்கக் கூடுவோம்.

ஈரோடு முனிசிபாலிட்டி.

ஈரோடு முனிசிபாலிட்டியைப் பற்றிய அசிங்கங்கள் இதுவரை எத்தனையோ விஷயங்களாக பத்திரிகையின் மூலமாகவும் சர்க்கார் ரிகார்ட்டுகள் மூலமாகவும் கோர்ட்டு நடவடிக்கை மூலமாகவும் சம்பந்தப்பட்ட மந்திரிகளுக்கு எட்டி இருக்கும் என்றே நினைக்கிறோம். மனச்சாட்சிக்கு மதிப்பு கொடுக்காத கலெக்டர் துரை ஒரு பாதிரிக்கு துரைத்தனத்திற்கு கட்டுப்பட்டு முட்டாள் தனமாக ஈரோடு சேர்மெனின் அயோக்கியத்தையும் நாணயக் குறைவுகளையும் ஆதரித்து வரும் அக்கிரமத்தினால் சேர்மெனுக்கு இன்னது தான் செய்வது என்று தோணாமல் தலைகொழுத்து திரிய நேரிட்டு விட்டது. ஆயினும் சமீபத்தில் நமக்கு கிடைத்த சங்கதி வேறு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். அதை வாசிப்பவர்களுக்கு அதன் உண்மை விளங்காமல் போகாது. இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இந்தக் கலெக்டரும் மந்திரிகளும் இந்த அக்கிரமங்களுக்கு ஆதாரமாய் இருப்பார்களோ தெரியாது. மீட்டிங்குகளில் ஏறக்குறைய அடிதடி அசிங்கமான வார்த்தை போலீஸ் பந்தோபஸ்து இதுகள் எல்லாம் நடந்து விட்டது, இனி ஆபீசுக்குள்ளாக கொடுந்துன்பமும் கொலையும் தான் பாக்கி. அதையும் கலெக்டர் அனைத்தும் எதிர்பார்க்கக் கூடும். ஏனென்றால் ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு லாபம் தானே. ஆதலால் மந்திரிக்கு கொஞ்சமாவது புத்தியிருக்கவேண்டாமா என்று தான் கேட்கிறோம். பார்ப்பன மாய்கையில் சிக்கி ஆழ்ந்து கிடக்கும் மந்திரிக்கு பார்ப்பனரல்லாதார் மானங்கெடுவது சுலபத்தில் தெரிய முடியுமா?

சீர்திருத்தப்பட்ட சென்னை நகரபரிபாலன உபாத்தியாயர் சங்கம்:—சென்னை நகரபரிபாலன சபையின் ஆதிக்கத்திற்குட்பட்ட சகல பள்ளிக்கூடங்களின் உபாத்தியாயர்களான சுமார் 350 பெயருக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இதில் அங்கத்தினர்களாகச் சேர்ந்திருப்பதாகவும் அநேக சில ஆசிரியர்கள் இதில் சேர்ந்து இன்னும் பெலப்படுத்த தடையாக இருப்பதாகவும் தனி மனிதர்களுக்குள்ள அபிப்பிராயபேதங்களைவிட்டொழித்து ஆசிரியர் உலகின் மகத்தான பெருப்பையெண்ணி அதிக செல்வாக்குடனும், பிரகாசத்துடனும் அச்சங்கம் வாழ்ந்து வர மற்ற பார்ப்பனரல்லாதாரகள் யாவரும் ஆதரவு அளித்தல் அவசியமென ஒரு ஆசிரியர் அறிவிக்கிறார்.

சென்னை மாகாண பார்ப்பனரல்லாதார் விசேஷ மகாநாடு.

கோயமுத்தூரில் கூடிய வரவேற்புக் கழகத்தின் அறிக்கை.

26-5-27 வியாழனன்று மாலை 5-மணிக்கு கோயமுத்தூர் ஜில்லா மகாநாட்டின் வரவேற்புக் கழக அங்கத்தினர்களின் கூட்டம் "இந்து இருபாநிதி லிமிடெட் பாங்கியில்" நடைபெற்றது.

உயர்திருவாளர்களான வெரிவாடு செட்டியார், S. பீமைய்ய செட்டியார், V. V. சுப்பையா செட்டியார், குலாம் உசேன் சாகேப், சுப்பிரமணிய பிள்ளை, S வேணுகோபால நாயுடு பூளைமேடு, சொ. ராமசாமி செட்டியார், நு. ந. மருதாசலம் செட்டியார் சின்னை மருதாசலப் பண்ணாடி, M பரமேஸ்வர செட்டியார், டாக்டர் C. V. N. நாயுடு M சுப்பையா செட்டியார், N. இரங்கைய கவுண்டர், சென்னப்ப கவுண்டர், P. S. G. கெங்கா நாயுடு, K. N. நஞ்சப்ப கவுண்டர் தாலூகா போர்டு பிரசிடெண்டு கோபிசெட்டிபாளையம், சதாசிவ ஆசாரி, K. T. வெற்றிவேலு, பழனிவேல் பிள்ளை, அட்டியண்ண கவுண்டர், நாக்கநாயக்கன்பாளையம், சோலைய பிள்ளை V. பழனிசாமி நாயுடு, பெருமாள் செட்டியார், ராவ்பகதூர் C. S. ரத்தினசபாபதி முதலியார், ஜில்லா போர்டு தலைவர M. L. C, E. V. இராமசாமி நாயக்கர் முதலிய சுமார் 100 அங்கத்தினர்கள் வரையில் விஜயம் செய்திருந்தார்கள், உயர்திரு வெரிவாடு செட்டியார் அவர்கள் தலைமை வகித்தார். மகாநாடு சம்பந்தமாக அநேக முக்கிய விஷயங்களைப்பற்றி ஆலோசிக்கப்பட்டது. பின் ஈ. வெ இராமசாமி நாயக்கர் அவர்கள் எழுந்து அக்கிராசனர் அவர்களே! சபையோர்களே நாம இதுவரையில் நமது ஜில்லா மகாநாட்டையே கூட்டுவதென்று முடிவு செய்திருந்தோம். ஆனால் தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மாறுதல்களினாலும், ஜஸ்டிஸ் கட்சியை விட்டுப் போன நண்பர்களும், அரசியலில் வேறு அபிப்பிராய பேதமுடைய நண்பர்களும் மீண்டும் நம்முடன் ஒத்துழைக்க விரும்புவதாலும தமிழ்நாட்டில் உள்ள பார்ப்பனரல்லாதார் அனைவரும் ஒன்று சேர்ந்து எதிர்காலத்தில் நமது முற்போக்கிற்கான விஷயங்களைப்பற்றி முடிவு செய்ய வேண்டும் என பலமாக பலர் விரும்புவதாலும பல பிரபல தலைவர்கள் "அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பெயரை வைத்துக்கொண்டு சில சுயநல வாதிகளான பார்ப்பனர்கள் நமக்கு அநேக இடைஞ்சல்களை செய்துவருவதால அம்மாதிரி அது அவர்களுக்கு ஒரு ஆயுதமாயில்லாமலிருக்கச்செய்ய அக் காங்கிரஸ் ஸ்தாபனத்திலும் நம்மில் இஷ்டப்பட்டவர்கள் பலர் சேர்ந்து அதைக் கைப்பற்றி அக் கொடுமையிலிருந்து மீளலாம்" என்று எண்ணுவதாலும் இத்தகைய விஷயங்களையெல்லாம் நமது மாகாணத்திலுள்ள பார்ப்பனரல்லாதார் முழுதும் சேர்ந்து ஆலோசித்து முடிவுசெய்யவே இஜ் ஜில்லா மகாநாட்டை மாகாண தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் கூட்டமாக கூடலாம் என்பதைப்பற்றி ஆலோசிக்க இக்கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. ஆதலால் சபையினர் நன்கு ஆலோசித்து முடிவுசெய்யக்கோருகிறேன் என்று மகாநாட்டுக்கு அவசியமானவைகளைப்பற்றி சுருக்கமாக எடுத்துச்சொல்லியபின் காரியதரிசிகளால் தயாரிக்கப்பட்ட அடியிற்கண்ட தீர்மானம் திரு நாயக்கர் அவர்களால் பிரேரேபனை செய்யப்பட்டது.—

(அ) தற்கால நிலைமையை உத்தேசித்து கோயமுத்தூர் தென்னிந்திய நலவுரிமைச் சங்க விசேஷ மகாநாடு ஒன்று அடுத்த மாதத்தில் கோவையில் கூட்டவேண்டுமென்று சென்னை தலைமைச் சங்கத்திலிருந்து தீர்மானம் வரும்பட்சத்தில நாளது ஜூன் 11, 12 தேதிகளில் கூட்டவேண்டுமென்று தீர்மானித்திருந்த நமது ஜில்லா மகாநாட்டை மாற்றி, விசேஷ மாகாண மகாநாடாக கூட்டுவிக்கலாமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

(ஆ) சென்னை சங்கத்தாருடன் இம்மகாநாட்டை கூட்டும் தேதி முதலானவைகளை தீர்மானித்துக்கொள்ள நிர்வாக கமிட்டிக்கே அதிகாரம் கொடுக்கிறது.

மேற்படி தீர்மானம் சபையினரால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன. அக்கிராசனருக்கும் வந்த பிரமுகர்கட்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டபின் 6-25-க்குக் கூட்டம் இனிது முடிவுற்றது.

வசூல் விபரம்.

கோயம்புத்தூர் காளீஸ்வரர் மில்ஸ் லிமிடெட் மானேஜிங் டைரக்டரும், கோவை ஜில்லா போர்டு மெம்பரும், கோவை 4-வது பார்ப்பனரல்லாதார மகா நாட்டு காரியதரிசியுமாகிய ஸ்ரீமான் பி எஸ். சாத்தப்ப செட்டியார் அவர்களின் பெரு முயர்ச்சியால் திருப்பூரில் செய்த வசூல்.

திருவாளர்களான

M. N. சிக்கண்ண செட்டியார்	ரூ.	100
E. R. கந்தசாமி கவுண்டர்	,,	100
K. காமிநாத செட்டியார்	,,	51
K. S இராமசாமி கவுண்டர்	,,	50
P D. ஆஷர் அண்கோ	,,	50
N துரைசாமி கவுண்டர்	,,	50
சேர தள்ளி செட்டியார்	,,	50
T S T சுப்பிரமணிய செட்டியார்	,,	50
K குமாரசாமி செட்டியார்	,,	50
V A K பழனியப்ப செட்டியார்	,,	50
K S K A சுப்பிரமணிய செட்டியார்		35
U K ராஜப்ப செட்டியார்	,,	35
P C R நாராயணசாமி செட்டியார்		35
சி ந. அப்பாவு முதலியார்	,,	25
K C ஆறுமுக செட்டியார்	,,	25
V K S V கிருஷ்ணப்ப செட்டியார்		25
V A K அருணாப்ப செட்டியார்	,,	25
K C, M பெரியசாமி செட்டியார்	,,	25
S அர்த்தநாரி செட்டியார்	,,	25
O K S S ராமசாமி செட்டியார்	,,	25
N முருகாநந்த செட்டியார்	,,	25
முத்தையா ஜின்னிங் பேக்டரி	,,	20
N.R.S S.B. சவுண்டப்ப செட்டியார்	,,	20
K வெங்கடப்ப கவுண்டர்	,,	20
S K K சொக்கலிங்க முதலியார்	,,	15
S கிருஷ்ணசாமி செட்டியார்	,,	10
V பழனிசாமி கவுண்டர்	,,	7
ஆக கூடுதல்	ரூ	998
தேதிமுன் வசூலாகி இருந்தது	ரூ	2980
ஆகமொத்த வசூல்	ரூ	3899

திருப்பூர் வசூலில் ரூ903 ரொக்கமாய் வசூலாகிவிட்டது.

இன்னும் பொள்ளாச்சி, ஈரோடு, கோபிசெட்டிபாளையம் ஆகிய ஊர்களில் ரூ. 2000 க்கு அதிகமாய் வசூலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது, உயர்திருவாளர் C S ரத்தினசபாபதி முதலியார் M L C, P S சாத்தப்ப செட்டியார், ஈ. வெ இராமசாமி நாயக்கர், P S G நாயுடுகாரு அன் சன்ஸ் முதலிய கனவான்கள் மேற்படி தாலூகாக்களுக்கு இவ்வாரத்தில் சேர்ந்தாவது தனித்தாவது சுற்றுப்பிரயாணம போகக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது என நமது விசேஷ நிருபர் அறிவிக்கிறார்.

கள்ளிக்கோட்டையில் புத்தர் திருநாள்.

கள்ளிக்கோட்டையில் மிதவாதி பத்திராதிபர் ஸ்ரீமான் சி. கிருஷ்ணன் பி. ஏ, பி எல், அவர்களின் விசாலமான பங்களாவில் புத்தர் ஜயந்தி விழா கொண்டாடப்பட்டதுடன் அங்கு புத்த விக்கிரகம் ஒன்று அழகிய சிறு கோவில் வைத்து திறப்பு விழா நடத்தப்பட்டது. இதற்காக அநேக ஏற்பாடுகள் செய்து பெரிய பந்தல் முதலியதுகள் போட்டு அலங்கரித்து இருந்தது சுமார் 1000 பேர்களுக்கு மேலாகவே தக்க அறிவாளிகளும ஆங்கிலம் படித்தவர்களும் உத்தியோகஸ்தர் வியாபாரிகள் முதலிய அநேகர் வந்திருந்தார்கள், அக்கூட்டத்தில் புத்தர் சரித்திரம் கொள்கை முதலியவைகளைப் பற்றி பல அறிஞர்கள் உபன்யாசமும் செய்விக்கப்பட்டது கொச்சி கண்ணன் தோட்டத்து வேலாயுத மேனன் கொச்சி "சகோதரன்" பத்திராதிபர் அய்யப்பன் மஞ்சேரி ராமய்யர், ஆரிய சமாஜ சுவாமியார் ஆலப்பி [illegible] பள்ளிக்கூட உபாத்தியாயர் ஒருவரும் ஈரோடு ஈ. வெ ராமசாமி நாயக்கரும் ஒரு புத்தசன்னியாச சுவாமிகளும் ஆகிய பலர் உபன்னியாசம் செய்தார்கள் ஸ்ரீமான் நாயக்கரைத் தவிர மற்றவர்கள் மலையாளத்திலும் ஆங்கிலத்திலுமாக உபன்யாசம செய்தார்கள் ஸ்ரீமான் நாயக்கர் புத்தரும் கடவுளும் இந்து மதமும் என்பதைப்பற்றி தமிழில் ஒரு நீண்ட உபன்யாசம் செய்தார் என ஒரு நிருபர் அறிவிக்கிறார்

பரங்குடி.— திருவாளர் கோவிந்தசாமி படையாச்சி அவர்களின் தகப்பனாரின் வருஷாப்திதிக் கொண்டாட்டம் மிகச்சிறப்பாக பார்ப்பனரல்லாதாரைக்கொண்டே நடத்தப்பட்டு ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது

சுதேசமித்திரனா? சுஜாதிமித்திரனா?

மித்திரன் நாளது மே மாதம் 24 தேதியில் தனது பத்திரிகையில் 4வது பக்கத்தில் "விசித்திரமான வேண்டுகோள்" என்ற தலையங்கத்தின் கீழ் எழுதியிருக்கும் விசித்திரத்தைப்பார்த்தால் சுஜாதி மித்திரனென கூற வேண்டியிருக்கிறது.

1. "டாக்டர் நாயுடு காங்கிரஸைக்கெடுப்பதற்காக அதில் பிராமணரல்லாதார்கள் சேரவேண்டுமென்று சொல்லுகிறார்" என்று டாக்டர் நாயுடுகார் வேண்டுகோளுக்கு வியாக்கியானம் செய்கிற மித்திரனுடைய தன்மை எத்தன்மை? "காங்கிரஸைக் கெடுப்பதற்கு" என்ற மித்திரன் எந்த காங்கிரஸ் என்று நினைக்கிறானென்றால் மகாத்மாவின் ஆணை ஆதிக்யத்தின் கீழிருந்த ஒத்துழையாமை சமத்துவம் என்னுந்தத்துவங்களுக்குட்பட்டிருந்த காங்கிரஸையல்ல, ஆனால் எது? என்றால் தற்போதையதை, தற்போதையது எதுவென்றால் தன்னலங்கருதி பொய்ப் பிரசாரம் செய்வதில் பொது மக்களிடம் இரட்டையாட்சியை அழித்து சர்க்காரை நடக்கவொட்டாமல் முட்டுக்கட்டை போட்டு நிறைச்செய்து சுயராஜ்யம் வாங்கி தந்து உங்கள் சுயமரியாதையைக்காத்து சுகமனுபவிக்கச் செய்கிறோம் என்று தித்திக்கும்மொழிகளாலும் பல வஞ்சகத்தாலும் மக்களை ஏமாறச்செய்து அவர்கள் வாக்குரிமைகளைப்பெற்று பொது ஸ்தாபனங்களிலமர்ந்து தாங்களும் தங்களினத்தோர்களும் லாபமடைக்க நின்று சுகிக்கத்தக்க பதவிகளுக்கும் செல்வாக்குகளுக்கும் ஹேதுவாகவைத்துக்கொண்டிருக்கிற பிராமண அக்ரஹாரமாயிருக்கிற காங்கிரஸைத் தான் கெடுப்பதற்குத் தோன்றிய நாயுடு வேண்டுகோளைப்பார்த்து, [illegible] ஒழிய வேறதற்கென்பது வாசகர்களே அறிவார்கள்.

ஆகையால் அந்த வாக்கியத்தின்கருத்தென்னவென்பதையுமாராய்வோம் இரண்டாவதாக சுயராஜ்யகட்சியினர் வகுப்பு நன்மைகளைப் பெரிதாகப் பாராட்டி, தேசிய நன்மைகளைப் புறக்கணித்து விட்டார்கள்" என்றும் "பிராமணரல்லாதாரின் நன்மைகளை அதிகாக்க, ஜஸ்டிஸ் கட்சியிலுள்ளவர்களான நண்பர்கள் விரும்பினால் காங்கிரஸ்தான் சரியான கருவி அவர்களுடைய சமூக நன்மைகளையும், லௌகிக நன்மைகளையும் பெருக்கிக்கொள்ள இது சரியான காலம்" என்றும் ஸ்ரீமான் நாயுடு கூறுவதின் தாத்பர்யம், சுயராஜ்யக்கட்சியார் பிராமண வகுப்பு நன்மையை நாடுவதால் காங்கிரஸைக் கெடுத்து விட்டார்கள் ஜஸ்டிஸ் கட்சியினர் காங்கிரஸில் சேர்ந்து [illegible] நன்மையை நாட்டம் [illegible] பிராமணருக்குக் கொஞ்சமும் [illegible] ஜஸ்டிஸ் கட்சியினர் [illegible] முறைகளையும் காங்கிரஸில் புகுத்திவிடவேண்டு மென்ற [illegible] நாயுடு சொல்லுகிறாரென் [illegible] கூறுகிறார்

சுயராஜ்யக்கட்சியானது தற்போது பார்ப்பனகட்சியா? அல்லவா? அல்லவென்றால் அதிலுயர்ந்த பதவிகளிலிருப்பவர்கள் பார்ப்பனரா? அல்லவா? பார்ப்பனருக்கல்லாது அதிலேனையமக்களுக்கும் சமஉரிமை தரப்படுகின்றனவா? பார்ப்பனரல்லாதாரைவிட ஆதிக்யத்திற்கும் அமலுக்கு உரித்தானவர்கள் என்று சொல்லப்படுகிற இப்பார்ப்பனர் எந்தெந்த காங்கிரஸ் கொள்கைகளில் வழுவறச்செய்து வழிகாட்டிகளாக விருக்கிறார்கள்; ஒத்துழையாதன்மையின் முன்னணியில் நின்று தேச நன்மைக்காக எதாவது உடல் பொருள் ஆவிகளால் த்யாகம் செய்த, செய்கிற, செய்யப்போகுந்தன்மை உடையவர்களா? அல்லது அத்தகைய காரியங்களுக்கு த்யாகம் செய்யுமியல்புடையமக்களையாவது உற்சாகிக்கச் செய்கிறார்களா? எனில் அவர்களின் உற்சாகத்தையும் கெடுப்பதற்கான அபிப்பிராயங்கள் கொண்ட தீர்மானங்களைத்தங்கள் கூட்டங்களில் நடைபெறச் செய்கிறார்களா? இல்லையா இதனால் 33 கோடி எண்ணிக்கையுள்ள நமது இந்தியா சமூகத்தினதென்று சொல்லிக்கொள்ளும் காங்கிரஸை அதில் எவ்வளவோ குறைந்த ஒரு வகுப்பார் மட்டில் அவர்கள் சுயநலத்துக்கே உபயோகித்துக் கொண்டு மற்ற பெரும்பாலான ஜனத்தொகையுள்ள சமூகத்தினரையும் அடிமை செய்ய தாளம் போடச் செய்துவருகிற இந்தகாங்கிரஸை நமது இந்து சமூகங்களுக்கே ஆதாரமுள்ள வகுப்பார்களை என்றாண்டி காங்கிரஸின் லட்சியத்தை அதில் சேர்ந்துச்சரிவர நடத்தும்படி ஸ்ரீமான் நாயுடு கேட்கக்கூடாது? அப்படிக்கேட்பதால் தங்கள் சுய நலத்துக்கென்ன ஆபத்து விளைந்து விடுமோ வென்கிற திகிலால்தான் சுஜாதி மித்திரன் ஊளையிடுகிறான் என்பது மிகையாகாதென்பதற்கு பம்பாயில் கூடிக்கலைந்த மே 16, 17 18, தேதியின் நடவடிக்கைகளும் அதன் தன்மைகளைக்குறித்து மகாத்மாவின் அபிப்பிராயமும் மற்றும் பிரசுரித்திருக்கும் பத்திரிகை அபிப்பிராயங்களுமே போதுமான சாட்சியாயிருக்க, இவ்வொன்றுமறியாமல் பூனை தன் கண்களை மூடி திருட்டுப்பால் குடிக்கும் போது உலகமே இருண்டிருக்கிற தருணத்தில் யாருமறியாமல் நாம் திருட்டுப்பாலின் சுவையருந்தினதாக நினைக்கும் திருட்டுப்பூனையினது நிலைமையைத் தான் மித்திரன் கொண்டிருக்கிறானென்பதை வாசகர்களே அறிந்து கொள்வார்கள். தவிர இப்படிப்பட்ட நெருக்கடியான காலத்தில் மக்களின் பொது நன்மையை விரும்பும் எந்த மனிதன் தான் சகிக்கமுடியும். ஊரார் வீட்டு நெய்யே நெய் என் பெண்டாட்டி கையே கை என்று [illegible] அவர்கள் ஊர் ஊராகவும் வீடு வீடாகவும் தமதிருகையால் பிச்சை எடுத்து ஏனையமக்களின் பொது நன்மைக்கென சேகரித்துக் காப்பாற்றி வைத்திருந்த லட்சக்கணக்கான பொருள்களை (எல்லாம்) ஒத்துழையாமைக்கெதிர்தட்டான சர்க்கார் பதவி பெரிய தனம்பெறும்காரியங்களில் செலவழித்து ஒரு சிறு சுயநலகூட்டத்தாரின் நன்மைக்கே உபயோகப்படும் போது எவர்தான் சகிக்கக்கூடும் அப்படி சகிக்காமல் சரியான வழியில் அதாவது மக்கள் அனைவரும் ஒரு ஜாதி ஒரு பிறப்பு என்று ஏற்றத்தாழ்வற சுயநலமொழித்துப் பொதுநலமுயற்சியை நம் பெரியது நலியாமல், துன்பமற்று இன்ப முற்று வாழவேண்டித்தனக்கென வாழா பிறர்க்கென வாழும் மாபெருந்தகைமையோரால் ஏற்படுத்தியிருக்கும் ஜஸ்டிஸ் கட்சியின் பேரைக்கண்டு மித்திரன் பொறாமை கொள்வதன் கருத்தென்ன? ஒருக்கால் அந்தக் கட்சியில் காங்கிரசின் அடிப்படையான கொள்கையான தீண்டாமையென்னும் விஷயத்தையும் சம உரிமை யென்பதையும் ஏட்டுத் தீர்மானமாக்காமல் நாட்டுத்தீர்மானமாக்க முழுமனதுடனும் ஊக்கத்துடனும் துணிந்து நமது பாரதநாட்டின் [illegible] வைப்பதற்கென ஏற்பட்டதாகக்கண்டு இனி நம் காரியம் செல்லாதென்றல்லவா? இது காலமெல்லாம் திருடிவருகிற கூட்டத்திற்கு முழித்திருப்பவர் வீடு கிடைக்க நேரும சமயத்தில் துயர மெய்தும் பேர்வழி போலல்லவா சுஜாதி மித்திரன் செய்கை? என்ன விந்தை? ஒருக்கால் நம்மை அப்படி நினைக்கலாமா? வென்றால் இத்தனை காலமாகபார்ப்பனரென்று சொல்லப்படுபவர் ஆதிக்கத்தின் கீழ்நசுக்குண்டு வந்து அத்துன்பத்தின் கனத்தாலும் அதை தாங்கமுடியாமல் தப்பித்துக் கொள்ள இராப்பகலாகக் கதறிக் கொண்டிருக்கும் நமது ஏழை மக்களுக்காக எந்தச் சமயத்திலாவது எந்தப்பார்ப்பனராவது ஏதாவது ஒரு சமாதானத்தையாவது பேச்சளவிலாவது சொன்னதாவது எழுதினதாகவாவது யாராவது சொல்ல முன்வருவார்களா? இப்படி மக்களின் சுகதுக்கங்களைக் கவனியாமல் தங்கள் சுகதுக்கங்களையே கருதி நடக்கும் இவர்களே தான் வாழ வாழ இறந்த ஒரு வாலிபனது பிணச்சடங்குக்கென வரும் பார்ப்பன புரோகிதன் இனி நமவாழ்வைக் தகதியென பிழைக்கும் வழியென்னென்பதாக ஏங்கிப் பதறிக்கும் இறந்தவன் மனைவியிடம் நீ அதற்கு சரியாக தக்ஷிணை வைக்கவில்லை இதற்குச் சரியாக தக்ஷிணை வைக்கவில்லை என்று கோபிக்கும் புரோகித கூட்டத்திற்கு இதற்கு மேல் பச்சாத்தாபம் உண்டாகுமா? உண்டாகவே உண்டாகாதென துணிந்து இக் கொடுமைகளிலிருந்து விலகி சுயமரியாதை பறப்பச் செய்வதே மக்களது கடமை.

பொதுநலப்பிரியன்.

ஸ்ரீ வைகுண்டம்.—ஆலயத்து எட்டாந் திருநாளன்று இரவு நாகசுர கச்சேரி நடந்துகொண்டிருக்கையில் சில பார்ப்பனரல்லாதவர்களை சூத்திரன் என்று ஆத்திரமுண்டாகும்படி திட்டியதாகவும் இவர்கள் மருதிவாம் தேர் இழுக்க மறுத்ததாகவும். பார்ப்பனர் மன்னிப்பு கேட்டுக்கொண்டதிற் கிணங்க பின் யாவும் ஒழுங்காய் நடைபெற்றதென்றும் ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

ஸ்ரீரங்கம் திருவானைக்காவல் ஆலயம்:—ஆலய பிரவேச சம்பந்தமாய் பார்ப்பனர்கள் செய்யும் மோசமான சூழ்ச்சிகள் எண்ணற்றவை இது சம்பந்தமாக [illegible] கடிதங்கள் வந்து குவிந்துகொண்டே இருக்கிறது. இடமின்மைக்கு வருந்துகிறோம். அன்பர் திருவாளர் ஜே. என். இராமனுஜன் அவர்களும், அவர்தம் சகாக்களும் அங்கு நிகழ்த்திவரும் தொண்டொன்றே நல்ல பயனைக் கொடுக்கவேண்டும். இந்த சம்பவத்தால் குருக்கள் பார்ப்பானிலிருந்து போலீஸ், வக்கீல், மாஜிஸ்ரேட் பார்ப்பானவரை தமிழ் நாட்டில் எவ்வளவு கட்டுப்பாடாக இருக்கிறார்கள் என்பதை மட்டும் நினைவுறுத்த விரும்புகிறோம்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

உத்திரவு செய்தார். அந்தப்படியே 2-3ந் தேதி தேர்தல் நடக்கும் சமயம் பார்த்து அந்தத் தேதியிலும் நடக்கக்கூடாது என்று உத்திரவு அனுப்பிவிட்டார். பிறகு ஜுன் மாதம் 4-ந் தேதி நடத்தவேண்டுமென்று தந்தி கொடுத்திருக்கிறாராம். இத்தகைய சிறுபிள்ளைத்தன்மான உத்திரவை பிறப்பித்து பார்ப்பனரல்லாதார் சமூகத்தை அவமானப்படுத்தவே நமது சுப்பராயன் பார்ப்பனர்களுக்கு ஓர் அடிமையாக விளங்குகிறார் என்பதை நினைக்கும்போது இதை உடனே ஒழிக்காமல் வேறு என்ன செய்வது? இவ்வளவு அக்கிரமங்களையும் ஸ்ரீமான் சுப்பராயனை செய்யச்சொல்லி அவரையும் கெடுத்து நமது சமூகத்தையும் ஒழிக்கப் பாடுபட்டு விட்டு காலையத் தினம்' வெள்ளைக்காரர்கள் முன்னால் இவ்விஷயங்கள் பிரஸ்தாபிக்கப்படும்போது இதே பார்ப்பனர்கள் என்ன சொல்வார்கள் என்றால் "பார்ப்பனரல்லாதார் உயர்ந்தவேலைகள் பார்க்க யோக்கியதை உடையவர்கள் அல்ல. வெறும் ஆசைப்படுவதும் பார்ப்பனர்களின் மீது பொறாமைப்படுவதுமாய் இருக்கிறார்களே ஒழிய வேலைகொடுத்தால் இம்மாதிரி சுப்பராய மந்திரியைப் போல்தான் நடந்து விடுகிறார்கள் ஆதலால் கொடுப்பதாயிருந்தால் பார்ப்பனர்களாகிய எங்களுக்குக் கொடுங்கள் இல்லாவிட்டால் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். என்று வரிசையாய் சாட்சி சொல்லப்போகிறார்கள் இதைநினைக்கும் போது வேளாள சமூகத்திற்கு மாத்திரமல்ல பார்ப்பனரல்லாத சமூகத்திற்கே ஒரு சொத்தை ஏற்படும்படியாக ஏற்பட்டு விட்டதே என்கிற மனவருத்தம் நம்மை மிகுதியும் வாட்டுகிறது.

இவ்வளவு கெட்ட பெயரும் ஊரார் சிறிப்பும் அவமானமும் அடைந்தும் சமூகத் துரோகமும் செய்தும் நானாவது ஒரு லாபத்தை அடைகிறேன் என்று பார்ப்போமானால் அய்யோ பாவம் அதுவுமில்லை என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால் பார்ப்பன சட்ட சபை மெம்பர்களும் கனம் சுப்பராயன் மந்திரி ஆவதற்கு உதவி செய்த சில பார்ப்பனர்களும் வரும் சம்பளத்தில் பகுதிக்குமேல் பிடுங்கிக்கொள்ளுகிறார்களாம் கதருக்கென்றும் காங்கிரசுக்கென்றும் கட்சிப்பிரசாரத்திற்கு என்றும் வாயாடி வம்பருக்கென்றும் கோவிலுக்கென்றும் உபநயனமென்றும் இன்னமும் எத்தினையோ. இழவுக்கு என்றும பிடிங்கித் தின்று விடுகிறார்களே அல்லாமல் ஒரு காசாவது வீடு வந்து சேருவதற்கும் வழி இல்லை போராக்குறைக்கு சிபார்சு ஆள்களும் வீதி வீதியாய் திரிகிறார்கள் அதாவது உனக்கு என்ன வேண்டும் கனம் சுப்பராயனால் ஏதாவது வேலை ஆக வேண்டுமா சொல் உடனே செய்து வைக்கிறேன் சுப்பராயன் என்ன நம்ம தம்பி கைக்குள்ளாகத்தானே நம்ம அத்தான் சட்டப்பயில் தானே நமது சத்திய மூர்த்தி டிக்கட் பாக்கெட்டில் தானே இருக்கிறார் இப்பொழுது சொல் நாளை கெஜட்டில் பார்த்துக்கொள் சாயந்திரம் 3-மணிக்கு தந்தி வருகிறதா இல்லையா பார் ஆனால் எனக்கு என்ன தருகிறாய் என்கிற வியாபாரம் அக்கிராரத் தெருவுகளில் தூண்கள் பந்தக்கால்கள் எச்சைத் தொட்டிகள் எல்லாம் பேசுகின்றதுகள் கூடிய சிக்கிரத்தில் கனம் சுப்பராயன் பெயர் இதைவிட இனி மேல் கெடுவதற்கு ஒன்றுமில்லை என்கிற மாதிரிக்கு கெட்டுப் போய்விடும் என்பதில் சந்தேகம் தோன்ற இடமில்லைப்போல் தெரிகிறது ஆனாலும் இதற்கு யார் என்ன செய்யக்கூடும் பார்ப்பனர்கள் பேச்சைக் கேட்டவர்கள் யாராவது முன்னுக்கு வந்திருந்தால் நமது கனம் சுப்பராயன் முன்னுக்கு வராததைப்பற்றி வருத்தப்படலாம். உலகம் பிறப்பதற்கு முன் உண்டான சட்டம் சுப்பராயன விஷயத்தில்மாத்திரம் எப்படி மாறக்கூடும் ஆதலால் அனுபவிக்கவேண்டியதுதான்.

திருவண்ணாமலை

தாலூகாபோர்டு உபதலைவர்தேர்தல்

ஜஸ்டிஸ் கட்சியின் வெற்றி

திருவுடல் ஸ்ரீனிவாசய்யங்காரின் வெளியேற்றம்.

23—5—27 ந் தேதி காலை 9-30மணிக்கு தாலூகா போர்டு ஆபிசில் திரு. திருஞான சம்பந்த பண்டாரியாரின் அக்கிராசனத்தின் கீழ் கூட்டம் கூடியது. அவ்வமயம் 18 அங்கத்தினர்கள் அஜரானர்கள். எம். பி. ரக்கசாமி ரெட்டியாரை செங்கம் திரு. வெங்கடாசல முதலியார் பிரரேபிக்கப்பட்டார். திரு சீனிவாச கோபாலய்யங்காரை திரு ராமு முதலியார் பிரரேபித்தார் உடனே அய்யங்கார் தனக்கு மெஜாரடியில்லையென்று திண்ணமாய்த் தெரிந்து இந்த மீட்டிங்கை ஒத்திவைக்கவேண்டு மென்று வாதாடினார். திரு ரெட்டியார் காரணமில்லாமலாவது, ஒட்டுக்கு விடாமலாவது எலக்ஷனை ஒத்திவைத்தால் தாம் கோர்ட்டில் வழக்கு தொடுப்பதாய் தலைவரிடம் கூறினார் தலைவா, காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தவாயிருந்தும் ஜஸ்டிஸ் கட்சியில் பலத்த மெஜாரடியாகயிருப்பதை முன்னிட்டு தான் ஒன்றும் செய்யாமல் ஒட்டுக்கு விடலாம் என்றார். எலக்ஷன் இன்றே நடக்கவேண்டும் என்று அய்யங்கார் தவிர ஏகமனதாக தீர்மானமாயிற்று. திரு உடல் சீனிவாசன் உடனே வெளியேறி விட்டார். தனேடு தம் கட்சித் தலைவர் திரு ராமு முதலியாரை வெளியில் வந்து கைதட்டி கூப்பிட்டும் அவர் வெளியேற மறுத்து விட்டார். எலக்ஷனுக்கு ரெட்டியாரையே ஏக மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. திரு அய்யங்கார் இக்காலத்தில் தம் ஜபம் ஜெயிக்காது என்று நிச்சயமாய் நினைத்து, அவ்விடம் வந்திருந்த காங்கிரஸ் காரியதரிசி பி. அண்ணாமலை பிள்ளை கொண்டுவந்த மாலையை காங்கிரஸ்ஆபிசுக்கேஎடுத்துக்கொண்டு போய்விட்டாரென ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

சுந்தரா மாணவர் இல்லம்.

இவ்வூரில் சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் குப்புசாமி முதலியார் இலவசப் பாடசாலை நிறுவப்கட்டது இதுபோது இலவசபாடசாலை 8 வகுப்புகளோடு விளங்குகின்றது. இப்பாடசாலை க. குப்புசாமி முதலியாரவர்களால் எளிய மாணவர்களுக்கு உடை உண்டி முதலியவைகள் கொடுத்து உதவப்படுகிறது. சென்றஆண்டில் 35 மாணவர்களுக்கு மேல் தென்னாற்காடு வட ஆற்காடு ஜில்லாக்களிலிருந்தும் சேர்க்கப்பட்டனர் இப்பாடசாலையில் பண்டைய முறைப்படி சமய பாடம் கணிதம் முதலியவைகள் கற்பிப்பதோடு கைத்தொழிலும் கற்பிக்கப்படுகிறது. பொது மொழியாகத் தோன்றும் (இங்கிலீஷ்) ஆங்கிலத்தை கட்டாயபாடமாகக்கொள்ளப்படுகிறது இதில் போதிக்கும் உபாத்தியாயர்கள் போதனு முறைப்பயின்றவராவார்கள் இப்பள்ளியில் பயின்றவர் உயர்தரப்பாடசாலையில் இது போது சேர்ந்து முதன்மையாகத் தேர்ந்துள்ளார்கள்.

விருப்பமுள்ள மாணவர்கள் ஆறாவகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரையில் படிப்பதற்கு சேர்ந்து கொள்ளப்படும்உடை உணவு வசதிகள் இனமாக அளிக்கப்படும் ஆகையால்எளிய மாணவர்கள் என நிரூபிக்கத்தக்கவர் கையொப்பம் பெற்று ஜுன் மாதம் முதல் தேதிக்குள் விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

க, குப்புசாமி முதலியார்
இலவச பாடசாலை மனேஜர்,
சுந்தரா மாணவர் இல்லம்,
வாலாஜாபாத் (சிவபுரம்)
S. I. R.

திருவையாற்று கோயில் நிர்வாகம்:—
தஞ்சை திருவாளர் ஆர். டி. முருகேச முதலியார் அவர்கள் திருவையாற்று ஆலயத்திற்கு சுவாமி தெரிசனத்தின் பொருட்டு விஜயம் செய்ததை ஆலய காவல் காத்து கிடக்கும் ஒருபார்ப்பனனின் தூண்டுதலால் சேவகர்கள் தடுத்ததாகவும் ஜாமீன் வேண்டுமென்றும் கேட்டதாகவும் பின் நகரின் பிரமுகர் திருவாளர் குருசாமிபிள்ளை அவர்கள் ஜாமீன் பேரிலேயே ஆலயத்துள் பிரவேசிக்க நேர்ந்ததென்றும் தெரிகிறது. இத்தகைய இடஞ்சல்கள் திருவண்ணமலை முதலிய ஆலயங்களிலும் இருந்துகொண்டேதான் வருகிறது இத்தகைய ஆலயசீர்கேட்டுக்கு அலயநிலை பாதுகாப்புக் கழகம், பஞ்சாயித்தாரும செய்யும் பரிகாரத்தை விட பொதுமக்கள் அங்கங்கே செய்யும் தொண்டுதான் பலன் அளிக்க வேண்டும்.

தேவாங்க நலஉரிமைச் சங்கம்:—வாணியம்பாடி எஸ். சுப்பிரமணிய செட்டியார் அவர்கள் தலைமையின் கீழ் கூடிய தேவாங்க மகாஜன பொதுக் கூட்டத்தில் ஓர் சங்கம் ஏற்படுத்தப்பட்டது அதற்கு திருவாளர்களான செங்கல்வராய செட்டியார் தலைவராகவும், காரியதரிசிகளாக. கோ. அ. செங்கல்வராய செட்டியார். ஈஸ்வரய்யசெட்டியார் இவர்களும் நியமிக்கப்பட்டார்கள். சமூக முற்போக்கிற் காதாவின் அநேக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதென சங்கக் காரியதரிசி அறிவிக்கிறார்.

திருவாங்கூர்
ஏல விவசாயிகள் சங்கம்.

திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கம், ஏலச் சரக்கு விற்பனைக் கமிட்டியின் 1926 ஷு டிசம்பர் மீ 20தேதி வரையுள்ள அறிக்கையும் வரவு செலவு கணக்குகளும் அடங்கிய ஒரு பிரசுரம் வரப்பெற்றோம்.

"ஓதுவானெல்லாம் உழுவான் தலைக்கடை"

என்னும் முதியோர் வாக்கானது தற்கால ஆள்வோரென்றும் ஆன்றோரென்றும் சொல்லப்படும் வீரர்களின் சூழ்ச்சிகளால் அம் முதுமொழியின் றன்மைக்கு மாறுபட்ட நிகழ்ச்சியிற் கொண்டு வந்து விடப்பட்டது என்பதையாவரும் ஒப்புக்கொள்வார்கள். இதற்குதாரணமாக நமது திருவாங்கூர் ஏலவிவசாயிகளின் நெற்றிவேர்வை யொழுகப் பாடுபட்டு சேகரித்த விளைவுகளை மனோராஜ்யத்தால் பெருத்துக்கொழுக்க நினைக்கும் வஞ்சநெஞ்சத்துடையோரான வியாபாரிகள் ஒன்றுசேர்ந்து ஏலச்சரக்குகளை மிக்க குறைந்த விலைக்கு வாங்கி அதன் லாபங்களைத்தாங்களே அடையக்கொண்ட பேராசையை யறிந்த திரு. விவசாயிகள் ஒன்றுகூடி விவசாயத்தால் கிடைக்கும் பொருள்களைக்கொண்டு செய்யும் வியாபாரத்தொழிலையும் அப்பேராசைக்காரருக்கு விடாமல் தாங்களே செய்ய ஒன்று கூடித் துணிந்தமையால், அப்பேராசைக்காரரது சூழ்ச்சியானது இலவு காத்த கிளியென ஏமாற்றமடைந்ததுடன் அவரவர்களின் பாட்டின் பயனை யவரவர்களே யடையப்பெற்றார்கள் என்பதே யிதன் முடிவு. எனினும் இத்தகைய மெய்வருத்தம் கொண்ட முயற்சியால் அடையப்பெறும் பலன்களையிடையிலுள்ள ஊரார் உழைப்பில் உலையேற்றி உண்டு வாழும் சுயநலவஞ்ச நெஞ்சினராலேற்பட்ட இடையூறுகளையும், சூழ்ச்சிகளையும் பொருட்படுத்தாது ஒற்றுமை யென்னும் சங்கமாகிற படையினால் வென்று இன்புற்றாரென்பது ஆச்சரியமன்று. ஆனால் ஒற்றுமைக்கு மாறாகவேசித்துக்கெடுகிற இயல்புதான் வியக்கத்தக்கதாகும். ஆகையால் ஒவ்வொரு தொழிலையுடையவர்களும் தங்களின் மாற்றானுக்கு இடந்தராமல் ஒற்றுமைக்கும் தன்மையில் தான் அவர்களின் வெற்றியடையும் வழி என்பதும், இத்தகைய கூட்டுறவு செய்கையானது நமது தென்னிந்திய விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு ஓர் வழிகாட்டியான உத்தம செய்கையென்பதும் எமதபிப்பிராயம்.

இம்மாதிரி முயற்சியில் ஏல விவசாயிகள் சங்க காரியதரிசிகளான ஸ்ரீமான்கள் T. B. கிருஷ்ணசாமி கவுண்டர் U. M. முகயதீன் பிள்ளை ராவுத்தர் ஆகிய கனவான்களின் முயற்சி மிகவும் போற்றத்தக்கதாகும்.

தருமபுரி தாலூகா போர்டு 1-5-27ல் வெளிவந்த "தென்னாடு" அனுபந்தமானது தருமபுரி தாலூகா போர்டு நடவடிக்கைகளை ஒறுத்து மீறி கூறி இருக்கிறதென்றும தலைவர் திருவாளர் கந்தசாமி செட்டியார் அவர்களால் போர்டு நிர்வாகம் மிக ஒழுங்காகவும் திறமையாகவும் நடைபெற்று வருவதாகவும் போர்டு அங்கத்தினர்களில் ஒருவரான ஜனாப், எஸ். கே. ஜெயினுலாப்தீர் சாகேப் அவர்கள் ஓர் மறுப்பு பிரசுரித்திருக்கிறார் உயர் திருவாளர்களான போர்டு அங்கத்தினர்கள் தங்களின் கட்சி சண்டை வளர்க்கும் இடம் போர்டு அல்லவென்றும் பொது ஜன ஊழியர்களாகவே அங்கு சென்றிருக்கின்றோமென்பதையும் உணர்ந்து தத்தம் கடமையை [illegible] நிறைவேற்றுவார்களென் நம்புகிறேன்.

பார்ப்பனீயமொழிந்த நீதியும், ஆச்சாரியரின் பாதகாணிக்கையும்;—மதுரைமா நகரின்கண் நிகழ்ந்துள்ள பிராமணரல்லாதார் மகாநாட்டில் கூறியவாறே செய்கையாலும் செய்து காட்டிய புரோகிதப் புரட்டர்களைபகிஷ்கரித்த திதி ஒன்று சீர்காழி தாலூகாவைச்சேர்ந்த இலையமுதுகூடம் என்னும் கிராமத்தில் நிகழ்ந்ததைக் கண்ணாரக்கண்டானந்தித்தோம்.

ஷை திதி பண்ணினவர் இலையமுதுகூடம் கிராமவாசியும், பிரபல மிராசுதாரும், "குடி அரசு" "திராவிடன்" பத்திரிகைகளின் சந்தாதாரரில் ஒருவருமாகிய திருவாளர் சோ அகோரம் பிள்ளை அவர்கள் சென்ற அட்சய ஷு மாசி மீ 28தேதி தனது அன்னையின் திதி யன்று ஞாபகார்த்தமாக ஏழை மக்களுக்கு அன்னமளித்ததுடன் பண்டைக்காலந்தொடங்கி அவரது முன்னோர்களால் பாதகாணிக்கையாகக் கொடுத்து வந்த முப்பிரி நூலோர்க்கும் ஷை வரியைக் கொடாது நிறுத்திவிட்டனர். அது முதல் ஷை பகிஷ்காரத்தை நிலைபெறச்செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் பிரபவஷு சித்திரைமீ 19 தேதியன்று அவரது மைத்துனர் திருவாளர் மு. ரெத்தினசபாபதி பிள்ளையவர்களின் தாயாரது திதியையும் மேற்கண்ட முறையையே அனுசரித்து நடத்திவந்தார். ஷை மு. ரெத்தினசபாபதி பிள்ளையவர்கள் அவரது மைத்துனரின் கோட்பாட்டுக்கிணங்கி மனப்பூர்வமாக அங்கீகரித்தது மிகவும் நன்றி பாராட்டத்தக்கது:

ஆனதால் ஷை மகாநாட்டின் தீர்மானத்தை அனுசரித் தொழுகிய திருவாளர் சோ. அகோரம் பிள்ளை அவர்களும், மு. ரெத்தினசபாபதிபிள்ளை அவர்களும் எல்லாம்வல்ல நமதிறைவனின்னருளால் நீடூழிவாழ்கப் பிரார்த்திப்போமாக என்று ஷை கிராமவாசிகளில் ஒருவர் சி. அருணாசலம் பிள்ளை அறிவிக்கிறார்.

சோலார் ஜீவகாருண்ய சங்கம்— 13-5-27ல் காலை 7 மணிக்கு சங்க கட்டிட திருப்புவிழாவை முனிமகாராஜ் செம்பீர விஜய ஸ்ரீ சுவாமிகள் செவ்வனே நடத்திவைத்தார். திரு. சுவாமிகளின் தலைமையின் கீழ் ஓர் பொதுக்கூட்டமும் நடைபெற்றது திருவாளர்களான எச். ரீகூப் சண்ட் பாப்னா' குந்தன்மல், ப. வே. சஞ்சீவி நாயுடு முதலிய பெரியார்கள் உபந்நியசித்தார்கள் பொது ஜனங்கள் யாவரும் ஆதரித்து தக்க ஒத்துழைப்பை அளிக்குமாறு காரியதரிசி வேண்டுகிறார்:

காங்கேயம் ஆதி திராவிட தபால்காரர்— 18-5-27 முதல் காங்கேயம் தபால் ஆபிசில் ஓர் ஆதிதிராவிட கனவான் தபால் காரராக நியமிக்கப்பட்டிருக்கிறார் இந்நியமனத்தை ஆதரித்த இன்ஸ்பெக்டர் திருவாளர் கோவிந்த மேனன் அவர்களை பாராட்டுகிறோம் என்றும் ஆனால் ஷை தபால்காரர் உத்தியோக காலங்களில் உயர்ந்த ஜாதி என்ற பேயர்களால் செய்யப்படவிருக்கும் இன்னல்களுக்கும் தக்க உதவியாக்க தவறமாட்டாரென்று நம்புவதாகவும் திருவாளர் என். எம். நடேசன் அறிவிக்கிறார்.

சித்தலில் பார்ப்பன பகிஷ்காரம்— நாகை சில்வில் ஊழியர் கழகத்தின் அமைச்சர் திருவாளர் டால சுப்பரமணியம் பிள்ளை அவர்கள் பாட்டியாரின் தெவசத்திற்கு பார்ப்பனரல்லாதாரைக் கொண்டே நடத்தப்பட்டது. ஏராளமான ஏழைகட்கு அன்னமளிக்கப்பட்டது. பசுமாடுகளுக்கு பருத்திக்கொட்டை பசும்புல் இவைகளும், நாய்களுக்கு கஞ்சியன்னம் இவைகளும் போடப்பட்டது, மாலை பொது கூட்டம் நடைபெற்றது அநேக தேசபக்தர்கள் உபந்நியசித்தார்கள் சந்தனம் தாம்பூலம்வழங்கப்பட்டுஇரவு 9 மணிக்கு கூட்டம் இனிது முடிவுற்றது காரியதரிசி ஊழியர் கழகம்.

கோவை பார்ப்பனரல்லாதார் வாலிபர் மகாநாடு.

ஷை சங்கத்தின் நிர்வாக சபையார்களின் கூட்டம் 22-5-27 மாலை 8-30 மணிக்கு ஷை சங்கத் தலைவர் திரு. சி. வி. வி. சுப்பைய செட்டியார் அவர்கள் தலைமையில் கூடிற்று.

சென்னை தாய்ச்சங்கம் பொது காரியதரிசி திரு. டி. ஆர். சுந்திரம் பிள்ளை பி. ஏ. திருச்சி வாலிபர் சங்கக்காரியதரிசி வி. ரத்தினம் பிள்ளை ராஜாராம் நாயுடு கோ. சு. கந்தசாமி கவுண்டர் ஏ. கிருஷ்ணசாமி செட்டியார் ஏ. ஆர் சிவானந்த முதலியார் பி. கிருஷ்ணசாமி பிள்ளை பி. பஞ்சுலிங்கம் பிள்ளை ஆகிய இவர்கள் ஆஜராயிருந்தார்கள்.

பின்பு இதன் அடியில் கண்ட தீர்மானங்கள் தீர்மானிக்கப்பட்டது.

1. பார்ப்பனரல்லாத சமூகத்திற்கு அரும்பாடுபட்டவர்களும் நமது தேவாங்க குலத்தில் பிரபல கனவான்களாயிருந்த திருவாளர்கள் வி. வெள்ளிங்கிரி செட்டியார் அவர்களும் திருவாளர் என் கிரிய செட்டியார் அவர்களும் காலஞ் சென்றதைக் குறித்து இச்சங்கத்தார் தங்கள் அனுதாபத்தை அவர்கள் குடும்பத்தார்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

2. வருகிற ஜூன் மாதத்தில் கோயமுத்தூர் ஜில்லா பார்ப்பனரல்லாதார் வாலிபர்கள் மகாநாடொன்று நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

3. மகாநாட்டிற்கு வரவேற்புகழகத்தலைவராயிருக்க திரு. சி. வி. வி. சுப்பையசெட்டியார் அவர்களை ஏகமனதாய்த்தேர்ந்து எடுக்கப்பட்டது.

4. மகா நாட்டிற்கு காரியதரிசிகளாக திருவாளர்கள் கோ. சு. கந்தசாமி கவுண்டர் பி. சுப்பரமணிய பிள்ளை டி. ஆர். பாலசுப்பிரமணியம் ஏ. கிருஷ்ணசாமி செட்டியார் அவர்களை ஏகமனதாய் தேர்ந்து எடுக்கப்பட்டது.

5. வாலிபர்கள் மகாநாடு நடக்கும்பொழுது கலியுக பீமன் திருவாளர் கே. ராமமூர்த்தி நாயுடு அவர்களை இங்கு வந்து வாலியர்களின்முன்னேற்றத்திற்காக அரிய சொற்பொழிவுகள் செய்து ஊக்கம் உண்டாக்கி வைக்குமாறு இக்கூட்டத்தார் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

6. மகா நாட்டிற்கு தலைவரை அடுத்த கூட்டத்தில் தேர்ந்து எடுக்கப்படும்.

பின்பு வந்தனம் கூறப்பட்டு மாலை 8-30 மணிக்கு கூட்டம் கலைந்தது என் ஷை மகா நாட்டுக் காரியதரிசி கோ. சு. கந்தசாமிக் கவுண்டர் எழுதுகிறார்.

பவானி கூடல் அர்பன் பாங்கியும் ஒழுங்கீனமான நடவடிக்கைகளும்— ஷைபாங்கியின் [உபவிதிகள்] சட்டத்தின் 43 பிரிவுப்படி தவணை கடந்த அசல் துகைக்கு மட்டில் அபருத வட்டி வசூலிக்க வேண்டியது ஞாயமாயிருக்க ஞாயவிரோதமாய் பூரா துகைக்கும் அபருத வட்டி வசூலித்து வருகிறார்கள் அது ஒழுங்கல்லவென்றும் இனிமேலாவது ஒழுங்காய் தவணை கடந்த அசல் துகைக்கு மட்டிலும் அபருத வட்டி வசூலிக்க வேணுமென்றம் பூரா துகைக்கும் அபருத வட்டி வசூலிப்பது ஒழுங்கீனமென்றும் ஷை பாங்கியின் அசிஸ்டெண்டு ரிஜிஸ்டிரார் அவர்கள் 18-6-26 உ யிலேயே ஷை பாங்கியின் செகிரிடெரிக்கு உத்திரவிட்டிருந்தும் ஷை உத்திரவையும் அலட்சியப்படுத்தி முழுக்கடன் துகைக்கும் அபருத வட்டி வசூலித்து ஆயிரக்கணக்காய் எளியோர்களின் கைப்பணத்தைப் பறிமுதல் செய்திருக்கிறார்கள் இது ஷை பாங்கியின் காரியதரிசியின் சடின சித்தமும் அக்ராசனாதிபதியின் மேல்பார்வைக் குறைவும் ஆகையால் காருண்ய முள்ள ரிஜிஸ்டிரார் அவர்களின் தீர்ம சிந்தை வெளிப்படுத்துகிறது உண்மையுரைப்போன் குப்புசாமி செட்டியார்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி.)

களும், ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி தூற்றியும காங்கிரசைப் போற்றியும் ஏமாற்றியே வந்திருக்கிறார்கள். நாமும் இவைகளை நம்பி மோசம் போனது மல்லாமல் மதுரை மகாநாட்டின்போது, விஷயாலோசனைக் கூட்டம் நடந்தபோது, பிராமணரல்லாதார் கட்சியிலிருப்பவர்களில் சிலர் காங்கிரசுக்காரராயிருப்பதால், காங்கிரசை விட்டு விலக வேண்டுமென்று வாதம் நடந்தபோது திரு நாயக்கர் திரு. தண்டபாணிபிள்ளை திருவாளர்கள் சக்கரை செட்டியார் ஆரியா முதலிய காங்கிரசுக்காரர்கள் அதை ஒப்புக்கொள்ளாமல் காங்கிரசு ஏதோ மதிப்புள்ளதென்று நினைத்து எதிர்த்தார்கள் கடைசியாக அது நழுவவிடப்பட்டது.

எது யோக்கியதையுடையது?

எம் மனதிலுள்ளதை ஒழியாமல் சொல்கிறேன். சிலர் வருத்தப்படலாம் தூற்றலாம் ஆகிலும் உண்மையை மறைப்பது பாவம் என்று நினைத்துச் சொல்கிறேன். ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்ட காலமுதல் எத்தனையோ தலைகீழ் சம்பவங்கள் நடந்திருக்கிறது. அதின் கொள்கை சிலருக்கு பிடிக்கலாம் சிலருக்கு பிடிக்காதிருக்கலாம் ஆனால் தனது ஆதிக்கொள்கையிலிருந்து அணுவளவாவது மாறுதல் உண்டா? யாராவது சொல்லமுடியுமா? காங்கிரசு என்று சொல்லும் தேசிய சபையானது பிடித்தவர்கள் கைப் பெண்சாதியாக ஒவ்வொருவர் இஷ்டப்படி ஆடும் சபையாயிருக்கிறதென்பது விளங்கவில்லையா?

திரு. சாமமூர்த்தியின் திருத்தப்படி சென்னை சுயராஜ்யக்கக்ஷியின் நடவடிக்கையின், காரணங்களைக் கேட்டு அடுத்த கூட்டத்தில் காரியக்கமிட்டி தெரிவிக்கவேண்டுமென்றிருக்க சுமார் சில நிமிஷங்களுக்குள்ளேயே அவர்கள் செய்தது சரியென்றும அப்படி செய்ததற்காக பாராட்ட வேண்டுமென்றும், காரியக் கமிட்டி சிபார்சு செய்யுமானால் எவ்வளவு தாராளம்? ஏதேச்சாதிகாரமும் திமிரும் இருக்கிறதென்பதையும் பாரபக்ஷமும் வஞ்சகமும் ஏமாற்றுந்தன்மையும் இருக்கிறதென்பதையும் யோசிக்கும் பட்சத்தில் இக்கொடிய காங்கிரசைவிட்டு விலகி புனிதமான தீர்த்தத்தில் மூழ்கி பிராயச்சித்தம் செய்து விலகிக்கொள்ள வேண்டுமென்பதே எனது வேண்டுகோள்.

தலைவர்கள் என்போர்களை எதிர்பார்க்க வேண்டியதில்லை. இதுவரை அவர்களை நம்பி சிறுமைப்பட்டது போதும், உடனே ஊழியர்களாகிய நாம் பிராமணியத்தை ஒழிப்பதோடு காங்கிரசையும் ஒழிக்கப்பாடுபட வேண்டும். சென்னையில் இவ்வாண்டுக் "காங்கிரசு" நடவாமல் செய்ய வேண்டும். அல்லது அதை உயிரற்ற உருவமாகச் செய்யவேண்டும்

இந்து முஸ்லீம் ஒற்றுமை.

முக்கியமான தீர்மானங்களில், இந்து முஸ்லீம் ஒற்றுமையும் ஒன்று இதைப்பற்றி தலைவர்கள் பேட்டியும் அபிப்பிராயங்களும் அபாரம் தலையுள்ள தபர்களெல்லாம தலைவராய் விட்டார்கள் இனிமேல் பசுவும் புலியும், கீரியும் பாம்பும், எலியும் பூனையும் ஒரு துறையில் விளையாடுவதைப் பார்க்கலாம்.

தேசீய மகா சபை என்பதற்கடையாளமென்ன?

தேசிய மகாசபை யென்றால் எல்லாகொள்கையுடையவர்களும் கூடியிருக்கவேண்டும் அதோடு தேசவிடுதலைக்கான கத்தர், தீண்டாமை, யொழித்தல், மதுவிலக்கு, தேசியக் கல்வி சுதேசியம் கிராம நிர்மாணவேலை இவைகள் இருக்க வேண்டும். இதில் எதாவது தற்கால மிருக்கிறதா? இதைவேண்டுமென்கிறவர்களுக்கு, இடமாவதிருக்கிறதா? தீர்மானங்கள் செய்தால் மட்டும் போதுமா? அப்படியானால் ஜஸ்டிஸ் கட்சியும் இதையும் இன்னும் ஒருபடி கூடவே தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிறது. இப்படியிருக்க ஜஸ்டிஸ் கட்சியை ஏன் குறைகூற வேண்டும்.

ஜஸ்டிஸ் கட்சி பிராமணரல்லாதாருக்கும் ஏழைகளுக்கும் வகுப்புவாதக்கட்சி என்போமானால் காங்கிரசு பிராமணர்களுக்குழைக்கும் வகுப்புவாதக்கட்சியென்பதில்என்னதடை? இதைத்தான் திரு. நாயக்கரவர்கள் சொல்வது, எழுதுவது அது உண்மையென்பதும் சத்திய மொழி யென்பதும் வெளியில் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் மனதிலாவது ஒப்புக்கொண்டு தானாகவேண்டும்.

மேல் கண்ட தீர்மானங்களுக்கு மனப்பூர்வமாய் ஆதரவளித்த அங்கத்தினர்கள் நீங்கலாக அநேகர் சுயராஜ்யக்கட்சியை தொலைப்பதற்காகவே அடுத்துக்கெடுத்தல் என்னும் தந்திரத்தை உபயோகப்படுத்தியிருக்கிறார்களென்பதை சீக்கிரம் தெரியலாம்.

தலைவர் திரு. சீனிவாசய்யங்கார் பேரில் நம்பிக்கையின்மை தீர்மானம் கொண்டு வருவதாக ஆர்பாடம் செய்த திரு, பிரகாசம் கடைசியாக இருவருமாகச்சேர்ந்து லார்டு கோஷனை சாட்சி விசாரிக்க வருகிறார்களாம் பள பளா என்னே பார்ப்பன சூழ்ச்சி அப்பப்பா கடவுளே உனக்கே அற்புதம்.

எஸ். சி. போசின் விடுதலை

நமது நாட்டிற்கு ஒரு வெட்கக்கேடு

சுபாஷ் சந்திர போஸ் விடுதலையானது பற்றி ஏறக்குறைய எல்லோரும் கொண்டாடுகிறார்கள் இதிலிருந்து இந்திய மக்களின் சொரணை (மானம்) கெட்டதன்மை நன்றாய் வெளியாகிறது.

சுபாஷ் சந்திர போஸ் சர்க்காரால் காரணம் சொல்லாமல் விசாரணை செய்யாமல் சுமார் 2½ வருஷகாலம் ஜெயிலில் அடைத்து வைக்கப்பட்டிருந்தார் மகாத்மா காந்தியும் இந்த அக்கிரமத்தை அறிந்து ஸ்ரீமான் தாசும் அடைபட்டு விடுவாரோ என பயந்து ஒத்துழையாமையையும் அதனால் மக்கள் பட்ட கஷ்ட நஷ்டங்களையும் பலி கொடுத்து ஸ்ரீ தாசுக்கு எதோ பெரிய ராஜி செய்து கொண்டதாய் பாவனைகாட்டி. சர்க்கார் ஸ்ரீமான் தாசைப்பிடித்து அடைக்காமல செய்தார் இதன் பலனாக தேசம் குட்டிச்சுவர் ஆகி அயோக்கியர்கள் முன்னுக்கு வந்தார்கள் பதவிக்கு போட்டி போட்டார்கள் பதவி பெற்றார்கள் அதிலேயே மகிழ்ந்திருந்தார்கள் தங்களுக்குப் பதவி வேண்டிய போதெல்லாம் பதவி வேட்டைக்கு சுபாஷ் சந்திர போஸ் பெயரைச்சொல்லிக்கொண்டார்கள் இவ்வளவுதானே அல்லாமல் அவரை விடுதலை செய்ய வெறும் மேடைப்பேச்சும் காகிதத்தீர்மானமும் செய்தார்களே அல்லாமல் காரியத்தில் ஒரு வேலையும் செய்தவர்கள் அல்ல சட்ட மறுப்பு செய்திருக்கலாம் சத்தியாக்கிரகம் செய்திருக்கலாம் சட்டசபை விட்டு வெளிவந்திருக்கலாம் இன்னமும் எதாவது ஒரு நாள் வேலை நிறுத்தம் (ஏற்பட்டால்) முதலியதாகவாவது செய்திருக்கலாம் ஒன்றுமில்லாமல். வேகமாய் போய்க்கொண்டிருக்கும மோட்டார்கார் வண்டியைப்பார்த்து பட்டிக்காட்டு நாய்கள் கொஞ்ச தூரம் உத்ஸாகத்துடன் குலைத்துக்கொண்டு போய் வாயும் காலும் ஓய்ந்தவுடன் தனக்குள் முணுமுணுத்துக்கொண்டு திரும்பி வருவது போல இருந்தார்களே தவிர வேறு என்ன நடந்தது? கடைசியாய் ஸ்ரீமான் போஸ் செத்து விடுவாரோ? என்னவோ? என்கிறதாக பயந்து சர்க்காரார் அந்தப் பழியில் இருந்து தப்பித்துக் கொள்ள திருச்சி ஜெயிலில் மகா வீரர் வாஜ்பாய் என்பவரைக் கொண்டு வந்து வெளியில் தள்ளிவிட்டது போல், வெளியில் கொண்டு வந்து விட்டால் இதற்காக சந்தோஷம் வாழ்த்து சர்க்கார் பத்திராதிபத்திற்கு நற்சாட்சிபத்திரம் நன்றி பதிதல் போன்ற இழிதன்மைகளே எங்கு பார்த்தாலும் மலிகின்றன. இந்த மனப்பான்மை தான் இந்தியவில் உள்ள கஷ்டங்களுக்கு ஆதாரமே தவிர வேறில்லை இதில் சந்தோஷப்படக்கூடியவிஷயம் இருக்கிறதா? வெட்கப்படக்கூடிய விஷயம் இருக்கிறா? என்பதை யோசித்து பாருங்கள். தவிர பங்களா அரசியில் வாழ்வுக்காரர்கள் அனேகமாய் நமது தமிழ் நாட்டு அரசியில் வாழ்வு பார்ப்பனர்களை விட மிகவும்சுயநலக்காரர் வெட்கங்கெட்டவர் என்பதற்கு ஸ்ரீமான் போசின் 2 வருஷம் சிறைவாசமும் அவர் சிறையில் இருக்கும்போது சுயராஜ்யக்கட்சி காங்கிரஸ் கட்சி முதலிய அரசியல் கட்சி போரால் சட்டசபை மந்திரி பிரசிடெண்ட்மேயர் கார்பரேஷன் மெம்பர் காங்கிரஸ் கமிட்டி தேர்தல் முதலியவைகளில் நடந்த போட்டியும் சூட்சிகளுமே போருமான சாட்சியாகும். தானாகவே விடுதலை செய்யப்பட்ட ஸ்ரீமான் போசின் விடுதலையைப்பற்றி இவ்வளவு தூரம் சந்தோஷப்பட ஒன்றும காரணமில்லை என்பதை தெரிவிக்கிறோம்.

மனமறி நூல்.

ஒருவர் மனதில் நினைத்ததை இன்னதென்று தெளிவாய்க்கூறும் அருமையான ஆரூட சாஸ்திரம். வடமொழி நூலை ஆதாரமாகவுடையது.

விலை ரூபாய் ஒன்று.

ஜோதி சாஸ்திரம்

உபாத்தியாயரின்றி 30 நாளையில் ஜோதிஷம் கற்கலாம் எல்லா ஜாதகங்களுக்கும் பலன்கள் சொல்லக்கூடும். பஞ்சாங்கமின்றிஎந்த ஜாதகமும் கணிக்கலாம். விலை ரூபாய் ஒன்று

மு. வடிவேல் செட்டி,
110, ஈஸ்பரன் தர்மாராஜா கோவில் வீதி
புதுச்சேரி.

மதுரை பார்ப்பனீயம் மொழிந்த திருமணம்.

நிகழும் பிரபவ ஸும் சித்திரை மீ 12உ (24-427) காலை 9 மணிக்கு மேல் 11 மணிக்குள் மதுரை டவுன் 5-வது வார்டு மஞ்சனக்காரரோடு சிங்காரத்தோப்பு திரு பத்தன வியாபாரம் திரு. எஸ் ரெங்கசாமி நாயுடுகாரு இல்லத்தில் ஷையாரின் சிறிய தகப்பனார் திரு. வி. மு. முத்தியாலு நாயுடுகாருவின் குமாரர் வரதராஜுலு நாயுடுவுக்கும் மதுரை போலீஸ் லயன் தெரு திரு. மு. ரெங்கசாமி நாயுடுகாருவின் குமார்த்தி சௌபாக்கியவதி வீரம்மாளுக்கும் நடந்த திருமணம், புரோகிதம் திரு. கே. ரெங்கசாமி நாயுடு அவர்களால் சாஸ்திர யுக்தமாய் வெகு விமரிசையாகவும் விஜயம் செய்திருந்தயாவர்க்கும் வெகு திருப்திகாமாகவும் நடந்தேறியது ஷை திருமணத்திற்கு கீழ் கண்ட முக்கிய கனவான்கள் விஜயம் செய்திருந்தார்கள் ஸ்ரீமான்கள் பி. ரெங்கசாமி நாயுடுகாரு பி. ஏ., பி. எல்., ஹைக்கோர்ட்டு வக்கீல், வெங்கிடசாமி நாயுடுகாரு பென்ஷன் சுபேதார் மேஜர், துரைசாமி நாயுடுகாரு பென்ஷன் சுபேதார் திருமலை முத்துபிள்ளை அவர்கள் பென்ஷன் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர், சுப்பா நாயுடுகாரு பென்ஷன் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர், என. சங்கரய்ய நாயுடுகாரு ரிட்டயர்டு சி. எக்ஸ். ஆர்., கே. ஆர். ராமகிருஷ்ண நாயுடுகாரு முனிசிபல் கன்ட்ராக்டர், சின்னு நாயுடுகாரு மெக்கானிக்கல் இன்ஜினியர், பி. சங்கய்ய நாயுடுகாரு அகுதார்கர்சுருளம் அ. ரா. ம. நரசிம்மலு செட்டிகாரு, தி. கோ. கோபால்சாமி செட்டிகாரு, எம். கைலாசம் பிள்ளை அவர்கள்......வியாபாரிகள், புருஷோத்தம நாயுடுகாரு திருமுஹூர் தேவஸ்தானம் மானேஜர், முதலான இன்னும் அனேககனவான்கள் விஜயம் செய்து தம்பதிகளை ஆசிர்வதித்தார்கள்.

ஷை திருமணம் சுயஜாதி புரோகிதரைக் கொண்டு நடத்தின விமரிசையை மற்றவர்கள் நேரில் பார்த்திருந்தால் பிராமணபுரோகிதருடைய வாடை ஒவ்வொரு பிராமணரல்லாதார் இல்லத்தில் தழையபடாதென்றே எண்ணுவார்கள் மேன்மை தங்கிய நாயுடு மக்களே! பிராமணரல்லாத சகோதர சகோதரிகளே இனிபாகிலும சுயமரியாதையை உத்தேசித்து எல்லா சுப அசுப காரியங்களுக்கும் நமது சுய ஜாதியாரைக்கொண்டே நடத்த வேண்டியதாய் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுவதுடன் ஷை எஸ். ரெங்கசாமி நாயுடு அவர்களின் முயற்சியின் பேரிலும் மற்ற நண்பர்களின் முயற்சியின் பேரிலும் இம்மதுரையில் கல்யாணங்களும் மற்ற காரியங்களும் நடந்தேறி வருவதுடன் இனிமேல நடைபெறும் மற்ற காரியங்களுக்கும் தீவிரமாக பிராமண புரோகிதம் இல்லாமலே நடத்தவேண்டுமென்றும் சுயமரியாதையை காப்பாற்ற வேண்டுமென்றும் அந்நிய புரோகிதன் காலில் கும்பிட்டு விழுந்து அடிமைபடவேண்டாமென்றும் வெகு விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆர் வெங்கிடசாமி நாயுடு, மதுரை.

தஞ்சாவூர் ஜில்லா போர்டு.

ஆதி திராவிட மாணவர்கட்கு போர்டிங்கு.

தஞ்சாவூர் ஜில்லா போர்டாரின் ஆதரவில் இராஜாசத்திரங்களின் நிதியிலிருந்து 1927-வருஷம் கோடைவிடுமுறை நாட்கள் கழித்த பிறகு ஆதித்திராவிட மாணவர்கட்காக தஞ்சாவூரில் சிரையால் சத்திரத்தில் போர்டிங்கு (இலவசச்சாப்பாடும் வசதியும்) ஏற்படுத்தப்படும். தங்கள் பையன்களைப் போர்டாகச் சேர்க்க விரும்புவோர் மாணாக்கர்களின் வயது, தகப்பனார் அல்லது போஷகரின் பெயர், இருப்பிடம் சேருவதற்குரிய வகுப்பு முதலிய விவரங்களைக்கண்டு சத்திரம் சூப்பிரண்டெண்டு அவர்கட்கு 7-6-27க்குள் மனு செய்துக்கொள்ள வேண்டும்.

(Sd) C. S. Ganapathi Raw Pillai
B. A., B. L.
சத்திரம் சூப்பரின்டெண்டு.

தஞ்சாவூர் சத்திரம் ஆபீஸ்,
22—5—1927.

கோவிற்பட்டி தாலூகா
காட்டுநாயக்கன்பட்டி
க்ஷத்திரிய வித்தியாசாலை
முதலாவது ஆண்டு நிறைவுவிழா
அழைப்பு.

அன்புமிக்க ஐயா,

எல்லாம்வல்ல முழுமுதற்கடவுளின் திருவருட்டுணையால் நிகழும் 1102-ம் ஸு பிரபவ ஸு வைகாசி மீ 10உ (23-5-27) திங்கட்கிழமையன்று ஷை வித்தியாசாலையின் முதலாவது ஆண்டு நிறைவுவிழா மறுபக்கத்திற்குறித்துள்ள வண்ணம் நடைபெறும்.

அவ்வமயம் தூத்துக்குடி முனிசிபல் சேர்மென் மகா-ள-ள-ஸ்ரீ ஜே. யல். பி. ரோச் விக்டோரியா அவர்கள் அக்கிராசனம்வகிக்க அன்புடன் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

தாங்கள் தங்கள் நண்பர்குழாங்களுடன் போந்து விழாவைச் சிறப்பிக்கவும், பிரசங்கம் சம்பாஷணை பாட்டு முதலியவைகளைச் செவிமடுத்து இன்புறவும் வேண்டுகின்றேன்,

பொன்னு நாடார்

புத்தக விளம்பரம்.

திகம்பர சாமியார் பால்ய லீலை	அணா 12
தமிழ் வியாசங்கள்	,, 9
ராம்மோகனன் & கங்காதரன்	,, 7
ஹம்ஸதேவி & பெண்புத்தி பிரகாசிகை	,, 4

ஆனந்த நிலயம் திருச்செங்கோடு.

பிரபவ வருஷத்தில் குறிப்பிட்ட ஒரு தேதிக்குக் கிழமை கண்டுபிடிக்கும் வழி.

சங்கரலிங்கபுரம் M. சோமசுந்தரம் எழுதுகிறார்

பிரபவ வருஷம் சித்திரை மாதம் 1-ம் தேதி முதல் பங்குனி மாதம் 30உ வரையும் உள்ளிட்ட மாசங்களுக்கு எதாவது ஒரு தேதிக்கு இன்ன நாளென்று தெரியவேண்டுமானால் கீழ்கண்ட மாசத்துக்கு குறிப்பிட்டிருக்கும் தொகையை தேதியுடன் சேர்த்துக்கொண்டு வகுத்து மீதிவருகிற தொகையில் 1 வந்தால் ஞாயிறு என்றும் 2 வந்தால் திங்கள் என்றும் இப்படி முறையே சேர்த்துக்கொள்ளவேண்டியது.

சித்திரை மாதத்துக்கு 3 வைகாசி 6 ஆனி 3 ஆடி 6 ஆவணி 3 புரட்டாசி 6 அர்ப்பிசி 1 கார்த்திகை 3 மார்கழி 5 தை 6 மாசி 1 பங்குனி 2, இந்த தொகையை தேதியுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஒரு மாசத்திற்கு உதாரணமாக ஆடி மாதம் 18ம் தேதிக்கு 18ம் 6ம் 24 வகுத்ததில் மிச்சம் 3 இதற்கு செவ்வாய்க்கிழமை. இப்படியே பார்க்கவேண்டும்.

இதை ஞாபகமூட்டும் வெண்பா வருமாறு.

ஆடானி தேளிக் காடிகன்னி எறுதைக்கும்
கோடான மீனதனுக் கோல்கும்பம்-வாடாமல்
மூன்றாறிரண்டைந்தொன் றாகமாதத் தேதி
சான்றுதின மேழு கழித்தால், [கூட்டி

அகஸ்தியர்

தாது சஞ்சீவி லேகியம்.

மிகுந்த பலத்தையும் வீரிய விருத்தியும் சரீர புஷ்டியும உண்டாக்குவதுடன் இந்திரியஸ்கலிதம், நரம்புத்தளர்ச்சி, அஜீர்ணம், பந்தம, பித்தமயக்கம், பசியின்மை, கைகால் அசதி, இடுப்புவலி, முதலான துர்க்குணங்களை, நிவர்த்தித்து சரீரதிடகாத்திரம் உண்டாக்கும்.

10-பலம் லேகியம் டின் 1-க்கு விலை ரூபாய் 2.
தபாற் செலவு— அணா 6.

டி. என். ஜி. பிள்ளை,
பெரிய கடைவீதி, திருச்சி.

நூதன ஜர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும், வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கைஇதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் எரியவும் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப்பறித்துக் கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளானஜனங்கள் அதிசயத்தைப்பார்க்கக் கும்பலாகக் கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பபபடும். குறைந்த விலை ரூ. 4—8—0 தபால் செலவு 0—8—0.

பாரீஸ் எம்போரியம், ஜி. டி.
மதராஸ்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யே நம் மூதறிஞரான வஸிஷ்டர் கூறுவதைக்கேண்மின்.

காலம்யக்ஞ தபோ தானதீர்த்த தேவார்ச்சனப்ரமை:

ஸிரமாநி ச்தோபே ராக்ஷயந்திம் நுகர்லிவ

இதன் கருத்து:— ஆயிரக்கணக்கான வருடங்களாக யாகம், தபஸ், கர்மம், தீர்த்த யாத்திரை, ஆலய வழிபாடு, முதலிய அஞ்ஞான கர்மங்களை அநுட்டித்து அநேக மக்கள் விலங்குகளைப்போல் விருதாவில் காலத்தைக்கழிக்கின்றனர் என்பதாம்.

மூதறிஞரான வசிஷ்ட முனிவனின் முறையைப்பாருங்கள், இத்தகைய கருமங்களை நடத்துவதில் எத்தகைய பயனும் விளைவதில்லை என்றும் சமூக வாழ்க்கையில் சமதர்மம் நசித்து மிருக தர்மம் மேலிட்டிருக்கிறதென்றும் கூறுகின்றார் மேலும்கிருஷ்ணமூர்த்தி கூறுவதைக்கேண்மின்.

ஸ்வஸ்வ வர்ணாச்ரமாசார நிரதாஸ்ஸர்வ மாநவ:

நஜானந்திபரம் தர்மம் வ்ருதா நஸ்யந்தி டாம்பிகா

இதன் கருத்து:— மக்கள் என்னுடைய மாட்சிமையின் சாட்சியத்தை உணராமல் தர்மம், தானம், ஆஸ்ரமம், ஆசாரம்,ஜாதி என்ற பெயரால் கட்டுண்டு எதார்த்த தர்மத்தை யறியாமல் டாம்பீக முடையோராகி நசித்துப் போகின்றனர் என்பதாம்,

சமூக வாழ்க்கையில் உண்மையறத்தின் இயல்பு குன்றி அடிமைப்படுகுழியில் அழுந்திக்கிடக்கும் மக்களின் கோமையை நன்கறிந்த வஸிஷ்டர் கிருஷ்ண மூர்த்தி முதலான பெரியோர்களின் வார்த்தையையறிந்து நம் சுயமரியாதைக்குத்தடையாம் சூட்சிகளைத் தொலைப்பதில் மலைப்பென்ன? அறஞ் செய்ய ஓம்பின் அது அனைவரிடத்தும் சமத்துவமாய் இத்துடன் இயற்றல் வேண்டும். பூமியானது தம்மிடமுள்ள மக்களைச் சமமாகத்தாங்கி நிற்பது போலும், புனல், பார்ப்பனன் பறையன் என்ற பேதமின்றி பலருக்கும் ஸ்நானம் பானங்கட்கு பொதுமை பட்டிருத்தல் போலும் வாய்வு பஹவான் வலியோர், சிறியோர், உறவோர் மறையோர் என்றபேத மின்றி உஸ்வாசநிஸ்வாச மூலம் இரட்சித்து தவுவது போலும் தர்மம் நிகழ்தத வேண்டின் அது சமதிருஷ்டியுடன் நிகழ வேண்டும்.

சீதாம்சு (சந்திரன்)வின் சீத கிரணங்கள் சில மக்களை இரட்சிக்கவும் மற்று மக்களை பக்ஷிக்கவும் செய்யவில்லை ஒருவர்க்குக்குளிர்ச்சியும் ஒருவருக்கு தளர்ச்சியும் செய்கின்றதில்லை அது போல் நாம் செய்யும் அறமும் அனைவர்க்கும் ஆற்றலை அளிக்கவேண்டும் இந்துவின் ரஸ்மிகளின் கிரகிகளுக்கு அக்னி மயமாக மாறிவிடுவது போல் இப்பொழுது செய்து வரும் தப்பான தருமங்கள் ஏழைகளிடத்தில் எளிதாக அனல் மூட்டிக்கொழுந்துவிட்டெறிந்து வருவது கண்கூடாகும் இதைத்தணிக்கவே நம் அன்பும் தர்மமும அநுதாபமும் ஏழைகளிடத்தும் தரித்திரர்களிடத்தும் தாழ்த்தப்பட்டோர்களிடத்தும் செலுத்தினால்கடவுள் ஆசீர்வாதமும் மண்ணுலகில் கீர்த்தியும் விண்ணுலகில் நேர்த்தியும் நமக்குப் பூர்த்தியாய்விடுமென்பது உண்மை இவ்வண்ணமின்றி தற்போது நடக்கும் தர்மம் தப்பானதென்றும் சுயமரியாதையை அடைவதுதான் சுதர்மமென்றும் விளக்கினோம், ஆகையால் அன்பர்களே அறத்தையடைய் அன்பை உபயோகிப்போம பக்தி என்று சொல்வது அன்பைத்தவிரவேறில்லை பக்தி என்ற சாதனத்தால் தர்மமென்ற சுயமரியாதை கொடி நாட்டுவோம், தேசத்தையும் சமூகத்தையும் முன்னுக்கு கொண்டுவர சுயமரியாதைக்குப்பின்னமானவைகளை சின்னமாக்கவும் நமது கடமையை நாம் செய்வோம். கடவுள் கருணை புரிவாராக. இந்து மதமெனக்கூறும் இந்து மகா சமுத்திரத்துக்குள் வித்தையே நிறைந்த நூல்களெனும் முதலைகளின் வாயிலகப்பட்டுழலும் சுதந்திர ரத்தினத்தை தலை எடுக்காமல் தடுத்து வருவதைப்பறித்த நம் "குடி அரசு" கள்ளமிலாக்கப்பலேறி சத்திய நியாயங்களென்ற சஸ்திர அஸ்திரங்களைத்தரித்து நித்தியம்பாதமெனும் சகாவுடன் சுயமரியாதை ரத்தினத்தை மீட்க முன்வந்திருப்பதால் "குடி அரசு"க்கு பூரணவெற்றியும் தீர்க்காயிளும்மென்மேலும் உண்டாகவேண்டுமென்று நாம் ஒவ்வொருவரும் இறைவனிடம் இறைஞ்சுவோமாக முற்றும் அறிந்த மூதறிஞர் குற்றம் இருப்பின் மன்னித்து குணத்தை ஏற்றுக்கொள்ளுவது ஏற்றகடனாகும்.

தமிழ் புக்கீப்பிங்.

விலை ரூபாய் 1.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப் பதிவு, இரட்டைப் பதிவு இரண்டு பாகங்களுமடங்கி இருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையு முடையது. வியாபாரிகள், மாணவர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியாப் பேட்டை, புதுச்சேரி

கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்
அல்லது
8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இரு முறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

"குடி நூல்"

என்ற கதர்பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு

சேலம் மாம்பழம்.

தினசரி நிலவரத்திற்கு முதல்தரமாக பொருக்கி எடுத்தனுப்புகிறேன். முதல்தரம் குறிப்பிட்ட ஸ்டேஷனுக்கு பாக்கிங் அண்டு ரெயில்சார்ஜ் சேர்ந்து 100 க்கு ரூ. 7. 2-ம் தரம் 100 க்கு ரூ. 5. ஒட்டுமாங்கன்று சீமை காய்கறி புஷ்பவிதைகளுடைய 1927ஸூத்திப கேட்லாக் இனும்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரிதோட்டம் சேலம்.

சேலம்
நார்பட்டுப் புடவைகள்

சாயம் கெட்டி! **விலை சாசம்!!**

நமது சொந்த தரிகளால் தயார் செய்யப்பட்ட அழகிய பளபளப்பான கண்களைக்கவரும் பல கலர்களில், பிளேன்களிலும், கறைகளிலும் பேட்டுவைத்தும், உடலில் பவளக்கொடி, தந்து கம்பிகளிலும் தயார் செய்யப்பட்ட $2\frac{1}{4}$ முழம் அகலமும் 18 முழம் நீளமுமுள்ள பலகலர்களில் சேலைகளும், $2\frac{1}{2}$ முழம் அகலம் 12முழம் 14முழம் சேலைகளும், 30 அல்லது 33 இன்ச் அகலம் 9 கெஜம் நீளம் பல கலர்களில் பல ரகங்களில் பாவாடைகளும், $7\frac{1}{2}$ கெஜம் நீளம் 1 கெஜம் அகலமுள்ள பலவித சித்தாடைகளும், ஜாக்கட், சர்ட், ரவிக்கை ரகங்களும், பட்டு வேலஞ்சி 5 முழம் முதல் 6 முழம் வரையிலும், சாதா பிளேன், சன்னகம்பி வைத்தும் க்ராஷி பேட்டு வைத்தும், இன்னும் நார் பட்டுகளில் சம்பந்தமான அநேக ரகங்களும் கோகர்ஜான் புடவைகளும் தயார்செய்கிறோம். நூல் ரகங்களிலும் தயார் ஆகிறது. தேவைக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிவிலை விபரம் தெரிந்து கொள்ளலாம்.

(மெடல் சர்ட்டிபிகேட் பெற்ற)

K. R. Chinnasamy Chetty.
Sidda Chetty & Co.
Artificial Silk Cloth Merchant, Gogai Salem. (S. India)

இலவம் பஞ்சிற்றுயில்.

மெத்தைக்கு இலவம் (சில்க்) பஞ்சு வெளியூர்களுககு குறித்த காலத்தில் அனுப்ப முடியும். மொத்தமாய் வாங்கினுல் விலை சரசம்.

சி. சுப்பைய முதலியார்
மண்டி
கோயமுத்தூர்.

சூதகரோக நிவாரணி.

பெண்களுக்குள்ள சூதகக்கட்டி, சூதக்சிக்கல், வயிற்றுவலி, சதை வளர்ச்சி, முதலியவற்றைத் தீர்க்கும், அமிர்த சஞ்சீவி. கேட்லாக் இனும். விலை ரூ. 2, வி. பி. வேறு.

ஆனந்த நிலையம் திருச்செங்கோடு.

இனும்! இனும்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனு இனும்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புரம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனுஇனுமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

அறிவிப்பு.

நமது சந்தா நேயர்கள் தங்களுக்குப் பத்திரிகை சரிவர கிடைப்பதில்லையென்று அடிக்கடி நமக்கு கடிதம் எழுதிவருகிறார்கள். ஆனால் நாம் அவைகளைக் கவனிக்குங்காலத்தில் அன்னார்களுக்குப் பத்திரிகை கிரமமாகத்தான் அனுப்பப்பட்டு வருகின்றன. நாங்களும் ஆபீசில் ஒரு தடவைக்கு மூன்று தடவை விலாசங்களை கணக்கிட்டு சரி பார்த்து அனுப்பிவருகிறோம். ஒருகால் மேற்படி சந்தா நேயர்களின் பத்திரிகைகளை அன்னார்களின் சிநேகிதர்களோ மற்றும் பந்துக்களோ பெற்றுக்கொண்டுதிருப்பிக்கொடுக்காமலிருக்கலாமோவெனச் சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. சந்தா நேயர்கள்தயவுசெய்து இனிமேல்எங்களுக்குக் கடிதம் எழுதினாலும், சந்தாத் தொகையை மணியாடர் மூலம் அனுப்பினாலும் முழு விலாசத்தை விபரமாய் எழுதுவதுடன் சந்தா நெம்பரையும் குறித்தெழுதுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்; "குடி அரசு" ஆபீஸ்.

ஏஜண்டுகள் தேவை.

வெளிநாடுகளிலும் உள்நாடுகளிலும் நம்முடைய

கதர் பனியன்களை

விற்பனை செய்வதற்கு தக்க ஏஜண்டுகள் தேவை. திறமைக்கு தகுந்தபடி கமிஷன் கொடுக்கப்படும். விபரம் தெரிய விரும்புவோர் ஒரு அணு ஸ்டாம்புடன் தங்கள் விலாசத்தை தெரியப்படுத்தி கொள்ளவும்.

கே. பி. கருப்பண்ண செட்டியார்,
திருப்பூர்.
(தென் இந்தியா)

தாய்மார்கள் கவனிக்கவேண்டியது.

சில தாய்மார்களுக்கு பலவித காரணங்களால் பால் சுருங்கி சிசுக்கள் தவிப்பதை நிவர்த்தி செய்து பால் வளரும்படி செய்ய நம்மால் ஒரு தேங்காய் ஜெபித்து வி. பி. செய்யப்பட்டுவருகது. 20 வருடத்து அனுபவம். எம்மிடம்தான் நேரில் வாங்கலாம்; அனுப்பிக்கும் விதம் தேங்காயுடன் அனுப்பிவைக்கப்படும். இதன் விலை தபாற் செலவன்றி ரூ. 1—4—0 மாத்திரம்.

குறிப்பு:—சாத்துக்கருப்பு விஷயத்திற்கும் தேக சம்மந்தப்பட்ட வியாதிகளுக்கும், மந்திரத்தாலும் மருந்தாலும் சிகிச்சை செய்யப்படும்.

விலாசம்:— எ. எஸ். எ. மாந்திரீக டாக்டர்
இனாம்தார் வீடு,
சின்னகடைத்தெரு, தெப்பகுளம், திருச்சி.

திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலாகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சிட்டி, நிறுக்கள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர்இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலைசயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனும்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

நமது அச்சுக்கூடத்தில்

பலதிறப்பட்ட ஜாப் வேலைகள் அழகாகக் குறித்த காலத்தில் செய்துதரப்படும்

மானேஜர்:—
உண்மை விளக்கம் பிரஸ், ஈரோடு.

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்.

1916ஸு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சிர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும் தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மென்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதராஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதராஸ்

மதனகல்ப லேகியம்.

மலக்கட்டு, பசியின்மை, துரிதஸ்கலிதம் சொப்பனஸ்கலிதம முதலியவற்றைக் குணப்படுத்தி இந்திரியத்தைக் கட்டுவதில் சிறந்த ருசிகர சித்தரசாயனம். விலை சேர் 1க்கு ரூ. 2 வி. பி. வேறு

ஆனந்த நிலையம், திருச்செங்கோடு. (S. I.)

ஸ்கௌட்ஸ் கேமரா.



சமீபத்தில் லண்டனில் கண்டு பிடிக்கப்பட்டது இதைக் கொண்டு சிறு குழந்தைகள் கூட புகைப்படமெடுத்து மாதம் 50 முதல் ரூ. 1,000 வரை சம்பாதிக்கலாம். அதன் ரஹஸ்ய முறைகள் கேமரா வாங்குபவர்களுக்கு தெரிவிக்கப்படும்

இதன் விலை செட் 1-க்குரூ 3—8—0.

கிடைக்குமிடம்:—

Hart & Co.,
Importers, Coimbatore, (S. I.)

சர்வமேக சம்ஹாரி.

சகல வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, தடிப்பு, முதலிய மேகம் இருபத்தொன்றையும் ஒரு வாரத்தில் குணப்படுத்தும். ஒரு வார மருந்து விலை ரூ 2. வி. பி. வேறு கேட்லாக் இனும்.

ஆனந்த நிலையம் திருச்செங்கோடு. (S. I.)

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.